# மங்கையர் மலர்

ஜனவரி '90

ரூ. 5/-



## புகழேணியின் உச்சியை எட்டுவதற்கு ஸ்ரீதேவி கூறும் யோசனை.

# "கொள்கையை விட்டுக் கொடுக்காதீர்கள்"



"உங்கள் கலைத்தொழிலின் துவக்கத்தில், ஒவ்வொரு-வரும் அவரவர் வழியிலே, நீங்கள் செயல்படவேண்டும் என்று விரும்பும் போதுதான், இது, குறிப்பாக முக்கியமானது."

"**நீலு**" பிலிமில் நடிப்பதற்கு முன்பே, நான் பலருக்கும் மறுப்பு தெரிவித்து வந்திருக்கிறேன்-" சிரிக்கிறார் ஸ்ரீதேவி. "சர்வ சாதாரணமான பாத்திரங்களுக்கெல்லாம் முடியாது என்றேன்; அசட்டுத்தனமான கோரிக்கைகளுக்கும் முடியாதுதான்." இன்று புகழேணியின் உச்சியிலே, உறுதியாக ஊன்றிவிட்ட ஸ்ரீதேவி, தமது வழியிலே அனைத்தையும் சாதித்துவிட்டதில் மிகுந்த பெருமிதம் அடைகிறார்.

"சிலநேரங்களில், ஒரு டைரக்டர், ஒரு ஷாட்டில் திருப்தியடைந்து விடுகிறார்; ஆனால் என் உள்ளத்திலுள், எனக்குத் திருப்தியில்லை. எனவே, நான் அதனை மீண்டும் செய்கிறேன்; மறுபடியும் செய்கிறேன். எனது ரசிகப் பெருமக்களை திருப்திப்படுத்தும்வரை." சரிதான் ஸ்ரீதேவி. உங்கள் கருத்தை நாங்கள் ஏற்கிறோம்.

"சிலர், பலசமயங்களில், குறுக்குவழியில் பாய்கிறார்கள்"—புலம்புகிறார் ஸ்ரீதேவி. நிச்சயமாக, ஸ்ரீதேவியும் கூட, குறுக்குவழியில் செல்கிறார். "நான், ஒரு அவசரத்தின்போது, திடீர்தயாரிப்பு உணவு அல்லது ஆயத்த உடைகள் போன்றவற்றை பயன்படுத்தும்போது மட்டும்தான். ஆனால் எனக்கு எதுவும், மெய்யாகவே முக்கியமானதாக இருக்கும்போது, நான் ஒரு போதுமே, குறுக்குவழியை நாடுவதில்லை. ஒருபோதுமில்லை."

"எனது கூந்தலுக்கு, டாபர் ஆம்லா ஹேர் ஆயிலின் பரம்பரைப் பராமரிப்புக்கு மாற்றே கிடையாது"

"எனது கூந்தல்தான், என் பெரும் பொக்கிஷம் என்று நான் நினைக்கிறேன்—" தமது அலை அலையான கருங்கூந்தலை நெருடியவாறே முறுவலிக்கிறார் ஸ்ரீதேவி. டாபர் ஆம்லா ஹேர் ஆயிலை பயன்படுத்தி, நான் அதனைப் பராமரிக்கிறேன். ஒவ்வொரு நாளுமே. கூந்தல் நாகரீகத்துக்கான அல்லது தேர்த்தியான எண்ணெய், எனக்குத் தேவையில்லை—எனக்கு வேண்டியது மெய்யான ஒரு எண்ணெய்தான். டாபர் ஆம்லா ஹேர் ஆயிலின், வளமிக்க ஊட்டச் சத்து, என் கூந்தல் நன்கு வளரவும், மென்மையாகவும் ஆரோக்கியமாகவும் மின்னவும், துணைபுரிகிறது. அதனால்தான், என் கூந்தலுக்கு, நான் வேறு ஒரு எண்ணெய்யையும் நம்புவதில்லை.

"டாபர் ஆம்லா ஹேர் ஆயில் அதுதான் எனது கொள்கை-விட்டுக்கொடுக்காத கூந்தல் பராமரிப்பு திட்டம்.






# டாபர் ஆம்லா
## ஹேர் ஆயில்

DIL/114 tam

## கூந்தலைப் பராமரிக்கும் உண்மையான எண்ணெய்

# கோலங்கள்





# அன்பு மகளுக்கு அம்மாவின் கடிதம்.



அன்புள்ள இந்து.

உனக்கு திருமணமாகி ஒரு மாதம் ஆகிவிட்டது. நாட்கள்தான் எப்படி ஓடிவிட்டன! நீ நான்கு வயதில் முகமெல்லாம் மை பூசிக்கொண்டதையும், ஐந்து வயதில் பேனுவினல் ஸ்லேட்டில் எழுதிய குறும்புத்தனமுமே என் கண் முன்னுல் நிற்கிறது. நீதான் இப்போது எப்படி வளர்ந்து விட்டாய்! இன்று உனக்கென்று ஒரு குடும்பம், உனக்கென்று ஒரு பொறுப்பு உருவாகி இருக்கிறது. அந்தப் பொறுப்பை நீ ஏற்கப் போகும் வேளையில் நான் உனக்கு ஏற்கனவே கூறிய சில அறிவுரைகளை மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன். குறிப்பாக சமையலறையில் காஸ் அடுப்பை ஜாக்கிரதையாக உபயோகிப்பதைப் பற்றி எடுத்துக் கூற விரும்புகிறேன்.



சமையல் செய்யும் பொழுது நைலான் ஆடைகளை அணியக் கூடாது என்று உனக்குத் தெரியும். பருத்தி ஆடைகளையே அணிய வேண்டும். 'காட்டன் ஏப்ரனை' உபயோகிப்பது இன்னும் நல்லது. உன் உடைகள் கலையாமல் பாதுகாப்பாக இருக்க இது உதவும்.


காஸ் அடுப்பை ஏற்றுவதற்கு முதலில் தீக்குச்சியைப் பற்ற வைத்துப் பிறகே அடுப்புக் குமிழைத் திறக்க வேண்டும். லைட்டரை உபயோகிக்கும் போது முதலிலேயே அடுப்புக் குமிழைத் திறந்து விடுவதால் காஸ் சிறிதளவேனும் வெளியேறி விடுகிறது. லைட்டர் உபயோகிப்பதைத் தவிர்ப்பது நல்லது.





இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறையாவது கண்டிப்பாக ரப்பர் குழாயை மாற்றிவிடு. அதில் ஏற்படும் விரிசல்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கும். ISI முத்திரை பதித்த ரப்பர் குழாயையே வாங்கி மாற்றிவிடு.

சிலிண்டர் எப்போதுமே நேராக இருக்க வேண்டும். காலி சிலிண்டராக இருந்தாலும் கூட அதைப் படுக்கை வசத்தில் வைக்காதே.





குழந்தைகளை சமையலறையில் விளையாட அனுமதிக்காதே. குறும்புக்கார குழந்தைகள் காஸ் இணைப்புகளுடன் விளையாடுவது எவ்வளவு ஆபத்தான விஷயம் என்பது உனக்கே தெரியும்.

சூடான பாத்திரங்களை அடுப்பிலிருந்து இறக்கி வைக்க இடுக்கியை உபயோகி. உன் உடையையோ, சேலைத்தலைப்பையோ உபயோகிக்காதே.





உன்னுடைய பொறுப்புகள் அதிகமாக ஆக நீ மேலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். சமையல் பாத்திரங்களை அடுப்பிலேயே விட்டுவிட்டு மற்ற வேலைகளை கவனிக்கப் போய்விடாதே. அதிலிருக்கும் பொருட்கள் பொங்கி வழிந்து அடுப்பையே அணைத்து காஸ் கசியும் அபாயம் உள்ளது.

... காஸ் சிலிண்டர் இணைப்புக் கொடுக்கும் போது பூஜை விளக்குகள், ஊதுவத்தி ...விடு. மின்சார இணைப்புகளை இயக்காதே.



ஒரு முக்கியமான விஷயத்தை நினைவில் வை. கால் கசிவை நீ முகர்ந்தால் மாறும்.
மற்றும் அடுப்புக் குமிழ்களை உடனே மூடிவிடு. சமையலறை ஜன்னல்களைத் திறந்து வை. விரைவாக அணைத்து எரியும் சுடர்களையும் அணைத்துவிடு. மின்சார ஸ்விட்ச்களை இயக்காதே. உன்னுடைய டிஸ்ட்ரிபியூட்டருக்குத் தெரிவி. சிலிண்டருடன் இணைந்திருக்கும் சேஃப்டி கேப்பினால் சிலிண்டர் வால்வை அழுத்தி மூடிவிடு. இது வால்விலிருந்து கால் கசிவு ஏற்படுத்துவதைத் தடுக்கும்.






சுய ரிப்பேர் வேலை ஆபத்தானது. யாரையும் கால் உபகரணங்களைப் பழுது பார்க்க அனுமதிக்காதே. உன்னுடைய டிஸ்ட்ரிபியூட்டரிடமே இந்தப் பொறுப்பை விட்டுவிடு.



இரண்டாவது சிலிண்டரை டெலிவரி செய்பவர் அதை அடுப்புடன் இணைத்து சோதித்த பிறகே பெற்றுக்கொள். அதை உடனே உபயோகிக்காவிடில் டெலிவரி செய்பவர் பாதுகாப்பு மூடியினால் சிலிண்டர் வால்வை அழுத்தி மூடிவிடுகிறாரா என்பதை உறுதி செய்து கொள்.



இந்து, நீ உன் சொந்த வீட்டைக் கட்டும் போது வரைபடிவத்தில், முக்கியமாக சமையலறைப் பகுதியில் பல விஷயங்களை கவனிக்க வேண்டும். அடுப்புக்கு நேர்மேலே மின்விசிறியைப் பொறுத்தாதே. நேரடியாக காற்று சமையல் செய்யும் இடத்தைத் தாக்குவதைத் தவிர்த்து விடு. பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் அடுப்புக்கருகில் இருக்கும் ஜன்னல்களில் திரைச்சீலை போடக்கூடாது.



சிலிண்டரை அலமாரியில் அடைத்தோ, பள்ளத்திலோ வைக்கக்கூடாது. எப்போதும் சுலபமாக அணுகக்கூடிய இடத்தில்தான் இருக்க வேண்டும்.

ரப்பர் குழாய் கண்ணுக்குத் தெரியும் வகையில் இருக்க வேண்டும்.

அடுப்பை எப்போதும் சிலிண்டருக்குமேல் இருக்கும் மேடையில் வை. அடுப்புக்கு மேலே எந்த அலமாரியும் கூடாது. எட்டி எதையாவது எடுக்கும் வேளையில் ஆபத்து நேரிடலாம்.

இந்து, இப்போது நான் தந்திருக்கும் இத்தனை அறிவுரைகளும் உன்னை மிகவும் குழப்பி விட்டிருக்கும். ஆனால் நிச்சயமாக இக்கடிதத்தை பத்திரமாக வைத்திரு. அப்போதுதான் தேவைப்படும்போது இவற்றை ஞாபகப்படுத்தி உன்னுடைய அன்றாட பழக்கமாக ஆக்கிக் கொள்ள முடியும். மறந்து விடாதே. இப்போது நீ ஒரு பொறுப்பான குடும்பத் தலைவி ஆகிவிட்டாய்.

''பாதுகாப்பின் ஆரம்பம் - நமது இல்லம்'' என்பது உனக்கு நன்கு தெரிந்ததுதான்.

இப்படிக்கு உன் அன்புள்ள,
அம்மா

"சீதாபிராட்டியின்
சோகமும்
திரௌபதியின்
அவமானமும்
மறக்க
முடியாதவை"





# பாஞ்சாலி சபதம்

நமது நாட்டில் வழங்கும் கதைகளில் மிகப் பெரிய அநீதி இழைக்கப்பட்ட பெண்கள் இருவர். சீதா பிராட்டியாரின் சோகம், அவருக்கு இழைக்கப்பட்ட கொடுமை உத்தர ராமாயணமாக உருவெடுத்தது. ராமபிரானும் அளவற்ற துயரத்தை அனுபவிக்கிறார். அபவாதம் என்கிற வில்லனிடம் நம் கோபத்தைக் காட்ட முடிவதில்லை. ஜனக குமாரிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் கண்ணீர் சிந்தலாமே தவிர ஆத்திரப்பட முடியவில்லை. ராமபிரானிடமும் நமக்குப் பச்சாதாபமே உண்டாகிறது

ஆனால் திரௌபதிக்கு இழைக்கப்பட்ட கொடுமை பயங்கரமானது. ஹஸ்தினாபுரத்துக் கொலு மண்டபத்தில் வீற்றிருந்த அத்தனை பெரியோர்கள் மீதும் நமக்குக் கோபம் வருகிறது. பெண்ணுக்குக் கொடுமை இழைக்கப்படும் போது ஏன் எல்லாருமே பேசாமலிருக்கிறார்கள். இது கோழைத்தனமா? சகிப்புத் தன்மையா? அல்லது பெண்தானே என்ற அலட்சியமா? என்றெல்லாம் சிந்திக்கிறோம்.



மகாகவி பாரதியார் பாஞ்சாலியின் சபதத்தை மட்டும் எடுத்துப் பாடல் புனைந்தது உணர்ச்சி மிகுந்த நாடகம் என்பதால் மாத்திரம் அல்ல. பெண் குலத்தையே அவர் பாஞ்சாலியாகப் பார்த்துப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு பொங்கியிருக்கிறார்.

ஐந்து 'கந்தர்வர்கள்' அவளைக் காப்பாற்ற இருந்தும் அவர்கள் கண்ணெதிரே பாஞ்சாலிக்கு நேர்ந்த அவமானத்தை மகாகவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கடைசிக் காட்சியில் வரும் உக்ரமான சொற்கள் இதைக் காட்டுகின்றன. இத்தனைக் கோபம், ரௌத்ரம், துயரம் இவற்றினிடையே தெய்விக அருள் என்ற நீரோட்டத்தையும் காண்கிறோம். அது சற்று சமாதானம் அளிக்கிறது.

இந்த ஆண்டு கலாக்ஷேத்ராவில் 'பாஞ்சாலி சபதத்தை' நாட்டிய நாடகமாக உருவாக்கிக் கொண்டிருக்கும் திருமதி. கிருஷ்ணவேணியிடம் பேச்சுக் கொடுக்கிறோம்.

"இந்தக் காவியத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஏன் தீர்மானித்தீர்கள்?"

கிருஷ்ணவேணி, "நான் தீர்மானிக்கவில்லை. பாரதியாருடைய நூற்றாண்டு விழா நடந்தபோதே இந்த நாட்டிய நாடகத்தை நடத்தத் திட்டமிட்டிருந்தார் என் குரு ருக்மிணி தேவி. பல காரணங்களால் அப்போது அவர் செய்யவில்லை. இந்த ஆண்டு புதிய நாட்டிய நாடகம் ஒன்று கட்டாயம் அரங்கேற்ற வேண்டும் என்று கலை விழாக் குழுவினர் சொன்னார்கள். அதுவும் தமிழில் இருக்க வேண்டும் என்றார்கள். கலாக்ஷேத்திரத் தலைவர் சங்கர மேனன் 'பாஞ்சாலி சபதம்' செய்யலாம் என்று சொன்னார். "நீ பொறுப்பேற்றுக் கொள்கிறாயா?" என்று கேட்டார். நான் தயக்கத்தோடு ஒப்புக் கொண்டேன்."

கேள்வி: தயக்கத்துக்கு என்ன காரணம்? நீங்கள் அனுபவப்பட்டவராயிற்றே."

கிருஷ்ணவேணி: "தமிழாக இருப்பது

முதல் சிரமம். தமிழர்கள் படித்துப் படித்து அனுபவித்த காவியம். அவரவர்கள் கற்பனையில் நாடகத்தைப் பார்த்து ரசித்த வர்கள். சொல்லின் வீச்சிலே உள்ள வேகத்தை நாட்டியமாகச் செய்து காட்டி உணர்ச்சிகளை எடுத்துக் காட்ட வேண்டும்.

இரண்டாவது இரண்டேகால் மணி நேர நாட்டிய நாடகத்தில் ஒரே ஒரு பெண் பாத்திரம்தான். நாட்டிய நாடகம் முழுவதும் ஆண்களே செய்தால் எடுபடுமா என்று சந்தேகம். மூன்றாவது முக்கியமாக சிருங்கார ரஸமே கிடையாது. வீரம், ரௌத்ரம் முதலிய ரஸங்கள், பொறாமை, அவமானம், கள்ளத்தனம் முதலிய உணர்ச்சிகள்தான் பிரதானமாக இருக்கின்றன. சிருங்கார ரஸத்தை ரஸராஜா என்று சொல்வார்கள். காதல் சுவையே இல்லாமல் ஒரு நாடகம் அதுவும் நாட்டிய நாடகம் செய்வது எப்படி என்று தயக்கமாக இருந்தது.''

கேள்வி: ''சரி, பிறகு எப்படி ஒப்புக் கொண்டீர்கள்?''

''முதலில் பாஞ்சாலி சபதத்தைப் பலமுறை படித்துப் பார்த்துக் கொண்டேன். எனக்கு மகாகவியின் கவிதைகளில் சிறு வயதிலிருந்தே மிகுந்த ஈடுபாடு உண்டு. பல வரிகள் மனப்பாடமாகவே தெரியும். அந்த ஈடுபாட்டினால் இதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டேன்.

திருமதி எஸ். சாரதா அவர்கள் முன்பே பாஞ்சாலி சபதத்தை எடிட் பண்ணியிருந்தார். அப்படியும் பாடல்கள் ரொம்ப அதிகமாக இருந்தன. இரண்டே கால் மணி நேரத்துக்குள் அடக்க வேண்டும். முதல் காட்சியையே எடுக்கவில்லை. இந்திரப் பிரஸ்த்தத்திலிருந்து தொடங்குகிறோம். கதைத் தொடர்புக்காக அங்கங்கே வில்லி பாரதம், மகாபாரத விலாஸம் முதலிய நூல்களிலிருந்து சில பாடல்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். கலாக்ஷேத்ராவின் பேராசிரியர்களில் ஒருவரான ஸ்ரீ பசுபதி இசை அமைத்திருக்கிறார்.

கேள்வி: சூதாட்டம் நடக்கும் போது திரும்பத் திரும்பப் பணயம் வைப்பது வருகிறதே. அதற்கு என்ன செய்தீர்கள்?''

கி. வேணி: ''அதுதான் ரொம்பச் சிரமமான கட்டம். ரொம்ப நீண்டு விட்டால் தொய்ந்து போய் விடும். சொல்லா விட்டால் கதையே தொடர்பு விட்டுப் போகும். சகுனியும், துரியோதனனும் இந்தக் கட்டத்தில் முக்கியப் பாத்திரங்கள். அதனால் மிகச் சிறந்த அனுபவம் வாய்ந்த கலைஞர்களை இந்தப் பாத்திரங்களை ஏற்கச் செய்தேன்.

ராமாயணத்தில் ராமர் வேடம் தாங்கும் பண்பட்ட கலைஞர் ஜனார்த்தனன் துரியோதனன் பாத்திரம் ஏற்கிறார். அனுமன் பாத்திரம் ஏற்கும் பால கோபால் சகுனி வேடம் தரிக்கிறார். இவர்களுக்கு முற்றிலும் வித்தியாசமான ரோல். அவர்களுக்கும் இது ஒரு சவால் என்பேன். நல்ல குணவானாக, சாந்தமாக நடிப்பது நாட்டியம் செய்பவர்களுடைய திறமையைக் கட்டுப்படுத்தி விடுகிறது. இப்போது அவர்களுக்குத் தங்கள் திறமையைக் காட்ட ஒரு வாய்ப்பு. இதனால் இந்தக் கட்டம் ஒரு எதிர்பார்ப்போடு அமையும் என்று நான் நினைக்கிறேன்.

ஜனார்த்தனன் ஒரு யோசனை சொன்னார். ஐந்து தம்பிகளை வைத்து ஆடும் போது ஐந்து கதி பேதங்களில் நாட்டியம் அமைக்கலாம் என்றார். அதனால் விறுவிறுப்பாக வெறும் நாடகமாக மட்டும் இராமல் நாட்டியமாகவும் அமைந்திருக்கிறது இந்தக் கட்டம்.

கேள்வி: ''இரண்டு முக்கிய பாத்திரங்களைச் சொன்னீர்கள். மற்ற பாத்திரங்களைப் பற்றி...

கி. வேணி: ''கலாக்ஷேத்திர மாணவ, மாணவிகள் பலர் பங்கேற்கிறார்கள். இளம் கலைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறோம். எல்லோரும் ஊக்கத்துடன் ஒத்துழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

எங்கள் குரு ருக்மிணி தேவி நாட்டிய பாதையிலேயே செல்ல நாங்கள் அனைவரும் ஆசைப்படுகிறோம். 'ரஸம் மிஞ்சினால் விரஸமாகி விடக் கூடும்' என்று அவர் சொல்வார். உணர்ச்சிமயமான இந்த நாட்டிய நாடகத்தை ரஸம் குறையாமல் தமிழ் மக்களுக்குக் காணிக்கையாக்க வேண்டும் என்பது என் ஆசை. எங்கள் குருவின் ஆசி எப்போதும் எங்களை வழி நடத்திச் செல்லுகிறது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

பேட்டி: **'ஏதேகிதி'**

படங்கள்: **ஸ்ரீஹரி.**

---

சேனைக்கிழங்கை சிறு, சிறு சதுரங்களாக நறுக்கி, அரை வேக்காடு வெந்தவுடன், தண்ணீரை வடிகட்டி, சிறிது அரிசி கடலைமாவில் உப்பு, காரப் பொடி கலந்து கிழங்கில் புரட்டி எடுத்து, எண்ணெயில் பொரித்து எடுங்கள். வாயில் போட்டவுடன் கரைவதுடன்., சீக்கிரமாகச் செய்யலாம். விருந்துக்கு ஏற்றது.

— பார்வதி.

இட்லி மாவு அரைத்தவுடன் அதில் மிளகு, சீரகம் போட்டு, ப. மிளகாய், கறிவேப்பிலை போட்டு, உப்பைத் தேவையான அளவு போட்டு, எண்ணெயைச் சூடேற்றி அதில் போண்டா போல் மாவு உருட்டிப் போட்டுச் செய்து எடுத்தால் சுவையோ சுவை. அருமையாக இருக்கும்.

— ரமா.



மகத்தான பொங்கல் விற்பனை
மஞ்சுஷா
(மேற்கு வங்காள அரசு எம்போரியம்)
20%
தள்ளுபடி தருகிறது
பெங்கால் கைத்தறி
காட்டன் & சில்க்
சேலைகள் மற்றும் உல்லன்
ஜமுக்காளங்களுக்கு.
1990 ஜனவரி
13-ந்தேதி வரை மட்டுமே
இந்தச் சலுகை.
MANJUSHA
(West Bengal Govt. Emporium)
Raheja Complex (Basement)
Opp. Anna Statue
834 Mount Road, Madras 600
புதிய ஸ்டாக்குகள் வந்துள்ளன.
பொங்கல் வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு.

## வீட்டிலிருந்தே சம்பாதிக்கலாமே!



# வழிக்காட்டும் தொழில் மொஸைக் டைல்ஸ்!

**நா**கரீகம் முன்னேறிய இக் காலத்தின் மனிதனின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் இவை மூன்றும் இன்றியமையாதவையாக உள்ளன. மனித இனம் உள்ளவரை இம்மூன்றின் உற்பத்தியும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கும். உணவு, உடை எளிதில் கிடைப்பது போல் கையில் பணமில்லா விட்டால் கூட கடன் வாங்கியாவது எல்லோரும் வீட்டையும் கட்டி விடுகிறார்கள். இந்த உண்மையை நன்கு புரிந்து கொண்டதால் தான் என்றைக்குமே தேவை இருந்து கொண்டிருக்கும் மொஸைக் டைல்களைத் தயாரிக்கும் தொழிலை வீட்டிலேயே நடத்தி வருகிறார் திருமதி சரஸ்வதி சிவப்பிரகாசம்.

இது கொஞ்சம் கடினமான வேலை. பெண்களால் செய்ய இயலாது என்ற எண்ணத்துடன் இவர் வீட்டை அடைந்த எனக்கு மொஸைக் டைல்ஸ் செய்வது மிக எளிய தொழில் என்பதை நேரிலேயே இவர் விளக்கிய போது மிகுந்த உற்சாகம் ஏற்பட்டது. ஆனால் எனக்கு வேறொரு சந்தேகம் வந்து விட்டது. சரஸ்வதி பி. ஆர்க்கிடெக்ட் பட்டம் பெற்றவர். இவரது கணவரும் கட்டிடப் பொறியாளர். இவரது தந்தை வீடு கட்டும் காண்டிராக்ட் தொழில் செய்பவர். இவ்வளவு பலமான பின்னணி இருப்பதால் தான் இவரால் தொழிலில் வெற்றிகரமாக முன்னேற முடிகிறதோ?

''இல்லை'' என்று உறுதியாக மறுக்கிறார் சரஸ்வதி. ''என் படிப்பிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. சாதாரணக் கொத்தனார்களும், கூலிப் பெண்களும் செய்யக் கூடிய வேலைதான் இது. சிமெண்ட், மொஸைக் சிப்ஸ், மார்பிள் பவுடர் இவைகளைத் தக்க அளவில் கலந்து தேவையான வண்ணம் (ஆக்ஸைடு) சேர்த்து அச்சுகளில் பரப்பி, இயந்திரத்தில் அழுத்தினால் டைல்கள் ரெடி. ஒருநாள் காய வைத்து விட்டு 15 நாட்கள் நீர்த் தொட்டியில் (Curing tank) வைத்தால் டைல்கள் உறுதியானவையாக மாறி விடும். இப்போது சொல்லுங்கள் இதில் டெக்னிகல் விஷயங்கள் என்ன உள்ளன?'' இப்படி இவர் கேட்பது சரிதான் என்பதை நேரில் இவரது தொழிற்சாலையைப் பார்த்த போது புரிந்து கொண்டேன்.

18 X 8 அடி என்ற அளவில் 3 நீர்த் தொட்டிகள், ஸ்டோர் ரூம், மற்றும் டைல்ஸ் தயாரிக்க ஒரு கொட்டகை இவைதான் இவரது தொழிலகம். ''சிறிய அளவில் ஆரம்பிக்க விரும்புகிறவர்கள் ஒரு தொட்டி


8



கட்டினால் கூடப் போதும். இனைற்று நீர் மென்னீராக இருக்க வேண்டும். மின்சாரம் தடங்கலில்லாமல் கிடைக்க வேண்டும். தெரிந்த காண்ட்ரேக்டர்கள் மற்றும் வீடு கட்டும் நண்பர்கள் இவர்களிடம் நம் டைல்ஸ் பற்றி அறிமுகம் செய்து கொள்ள வேண்டும். அவ்வளவுதான். தொழில் சிறப்பாக முன்னேறி விடும். நஷ்டமே இல்லாத லாபகரமான தொழில் இது.'' இப்படிச் சொல்பவர் பத்து வருட அனுபவஸ்தரான சரஸ்வதி அவர்கள்தான்.

இவர் தந்தை வீடு கட்டும் காண்ட்ராக்ட எடுத்து நடத்தியதைப் போலவே இவரது கணவரும் கன்ஸல்டன்ட் அண்ட் காண்ட்ராக்டராக இருக்கிறார். ஆரம்பத்தில் வீடுகள் கட்டும் போது மொஸய்க் டைல்ஸ் தருபவர் குறித்த நேரத்தில் டைல்ஸ்ஸை அனுப்பாததால் வீடு கட்டும் வேலை கடைசி கட்டத்தில் நின்று விட்டது. இந்த அனுபவத்திற்குப் பிறகுதான் தாங்களே டைல்ஸ் தயாரித்தால் என்ன என்னும் எண்ணம் ஏற்பட்டு இன்று அடையாறில் ''சசி மொஸய்க் டைல்ஸ்'' தொழிற்சாலையாக உருவாகியுள்ளது.

இவரது ஸ்டோர் ரூமின் சுவர் முழுவதும் மொஸய்க் டைல்களின் அணிவகுப்பு. எத்தனை வண்ணங்கள்! எத்தனை வடிவங்கள்! ஏதோ துணிக் கடைக்குள் நுழைந்து விட்ட பிரமிப்பை ஏற்படுத்தும் வகையில் கண்களைப் பறித்தன டைல்கள். இவை அனைத்தும் இவர் உருவாக்கியவை.



ஆர்டினரி க்ளவுட்ஸ், கட் க்ளவுட்ஸ், பாம்பே டைப், வொயிட் டைப், ஸ்பெஷல் டைப் என்று பல வகைகளை விளக்கினார். சில வகைகளுக்கு வெள்ளை சிமெண்டைப் பயன்படுத்த வேண்டும். 'க்ளவுட்ஸ்' டிஸைன் வருவதற்கு அச்சில் கலவையை பரப்பியவுடன் வண்ணங்களை நீரில் கரைத்து ஊற்றி குச்சியால் கலக்கி டிஸைன் உருவாக்கி, பிரஸ் செய்ய வேண்டும். இதே போல் டிரை கலர் கேக் செய்வது போல் கலவையை வெவ்வேறு வண்ணங்களில் பிசைந்து அடுக்கடுக்காக அடுக்கி, குறுக்கே வெட்டி டைல்கள் செய்கிறார்கள்.

திறமையான ஒரு ஆள் ஒரு நாளைக்கு அச்சில் 200 டைல்களைச் செய்ய முடியும். அதற்கு ஏற்ப கூலி ரூ. 30 முதல் 40 வரை கொடுக்க வேண்டும். இவரைத் தவிர கலவையைக் கலக்க, எடுத்துக் கொடுக்க, நீரில் அமிழ்த்த என்று எடுபிடி வேலை செய்ய ஆட்கள் தேவை. இவரிடம் பத்து பேர்கள் வேலை செய்கிறார்கள். தினமும் காலையில் வீட்டு வேலையை முடித்து வி ட் டு ஆட்களுக்கு கலவையின் அளவு, நிறங்கள், டிஸைன், சிப்ஸ் வகை இவற்றை ஒரு மணி நேரம் விளக்கிவிட்டு வேலையையும் மேற்பார்வை இடுகிறார். குற்றங்குறைகளை உடனுக்குடன் சீராக்குகிறார். தண்ணீர் தொட்டியில் டைல்ஸ் மூழ்கி இருக்கிறதா என்று கவனிக்கிறார்.

இதுமட்டுமில்லை. சலவைக் கற்களைப் போலவே வெள்ளை சிமெண்ட் கலவையில்

'வேக்ஸிங்' போன்றவைகளை செய்து கொள்ளுவதால் வேர்வை சுரப்பிகள் அடைபடுவதுடன், தோலையும் பாதிக்க வாய்ப்பு உண்டு. உதட்டுச் சாயம், நகப்பூச்சு போன்றவைகளைப் போட்டுக் கொள்வது மிகவும் நல்லது. அவை அழகாக இருக்க உதவுவதுடன் உதடு, நகம் ஆகியவைகளை பாதுகாக்கவும் செய்கின்றன. பனிக் காலத்தில் உதடுகளில் வரும் வெடிப்புகள் போன்றவை வராமல் காக்கும். ஆனால் 'தரமுள்ளவைகளையே உபயோகிக்க வேண்டும்' என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

— வைதேகி தேசிகன்.

க்ரே கலரை வரைந்து டைல்ஸ் செய்திருக்கிறார். க்ரானைட் எனப்படும் பாறையின் வடிவத்தைப் போலவும் டைல்ஸ் தயாரித்திருக்கிறார். இவை இரண்டும் இவரது கண்டுபிடிப்புகள். தவிர வெளிர் நிறத்தில் கறுத்த நிற சிப்ஸ், கலர்களைச் சேர்த்தும் ஆழ்ந்த நிறத்தில் வெளிர் நிற டிஸைன்களை உருவாக்கியும் கவர்ச்சியான டைல்ஸ் உருவாக்கியுள்ளார். தன் படிப்பு வீணாகமல் இருக்க தற்போது கணவர் கட்டும் வீடுகளுக்குத் தளம் போடும் பொறுப்பை இவர் ஏற்று வருகிறார். லேயிங் பாலிஷிங் என்னும் இரு வேலைகளையும் தகுந்த ஆட்களுடன் நேரில் சென்று செய்து கொடுக்கிறார். என்ன மாதிரியான சுவர்களின் நிறங்களுக்கு என்ன வகை டைல்கள் பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசனையும் கூறுகிறார்.

இவர் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்களை சென்னையில் தேனாம்பேட்டையிலும் மார்பிள் பவுடர், மார்பிள் சிப்ஸ் (இவை ஒரு வகை சுண்ணாம்புக் கற்களே) போன்றவற்றை ஆந்திராவிலிருந்தும் வாங்குகிறார். நேரில் சென்று சரியான வகை, தரம் இவற்றைத் தேர்ந்தெடுத்து, பில் போட்டு பேக் செய்து விட்டு வந்துவிட்டால் வீட்டிற்கு அவர்களே அனுப்பி விடுவார்களாம்.

"இதே போல் வேலையாட்களையும் மிகவும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும். கலவையில் சிறு தவறு நேர்ந்தாலோ, க்யூரிங்கில் குறை ஏற்பட்டாலோ டைல்ஸ் தரம் குறைந்துவிடும். பதிக்கும் பொழுதே உடைந்துவிடும். விரைவில் சிப்ஸ் பெயர்ந்து வந்துவிடும். எனவே தரமான டைல்ஸ் தயாரிப்பதற்கு நாம் எப்போதும் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம்" இப்படித் தன் தொழில் வெற்றியின் ரகசியத்தைக் குறிப்பிட்டார் சரஸ்வதி.

தொழில் துவங்கியபோது பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தாராம். தவிர ஆரம்ப விழாவன்று நண்பர்களுக்கும் பல பிரபல காண்ட்ரேக்டர்களுக்கும் அழைப்பு அனுப்பி வரவழைத்தாராம். ஆண்டு நிறைவு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடினாராம். இதனால் ஆர்டர்கள் பெருக வழி ஏற்பட்டது என்கிறார். தவிர தாஜ் கொரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற கன்ஸல்டேஷன் அண்ட் பில்டிங் மெடீரியல்ஸ் எக்ஸிபிஷனில் இவரது மொஸைக் டைல்களைக் காட்சிக்கு வைத்ததும் ஒருவகையில் விளம்பரமே என்கிறார்.

இவர் தொழிற்சாலை நிர்வாகம் முழுவதையும் கவனித்துக் கொண்டால் கூட கணக்கு, வருமான வரி மற்றும் விற்பனை வரி போன்றவைகளை இவரது கணவர் கவனித்துக் கொள்கிறார்.

**இவருக்கு எவை பிரச்னைகள்?**

இவருக்குஎவைபிரச்னைகள்?சிமெண்ட், மற்றும் சில மூலப் பொருட்களின் விலை திடீர் என்று ஏறுவது, வேலையாட்கள் சமயத்தில் வேலைக்கு வராமல் இருத்தல், மற்றும் மின்சார வெட்டு, இவை இவரது பிரச்னைகள் தவிர சில பேர் இவரிடம் டைல்ஸ் வாங்கி அவற்றைத் தரையில் பதிக்கும் வேலையையும் இவரிடமே கொடுப்பார்கள். ஆரம்பத்தில் அன்பாகப்பேசி ஆர்டர் கொடுத்து விட்டு, வேலை முடியும் சமயம் ஏதாவது குற்றம் குறை சொல்லி பணம் பிடித்துக் கொண்டுவிடுவார்கள். இதே மாதிரி மூலப் பொருட்கள் வாங்கும் போது நேரில் போகாவிட்டால் மாற்றி அனுப்பி விடுவார்கள். இதனால் டைல்ஸின் தரம் பாதிக்கப் படும்.

**தற்காலத்தில் பலர் 'ஸ்பார்டெக்' என்னும் டைல்களைப் போடுகிறார்களே, இதனால் இவர் தொழில் பாதிக்கப்படுவதில்லையா?**

"பாதிப்பு ஓரளவுதான் ஏற்பட்டுள்ளது என்று கருதுகிறேன். ஸ்பார்டெக் கவனமாகக் கையாளப் பட வேண்டும். இல்லாவிட்டால் உடைந்துவிடும். மொஸைக் டைல்களை, ஒரு முறை போட்டால் ஆயுளுக்கும் உழைக்கும். 15 வருடங்கள் கழித்து மீண்டும் ஒரு முறை பாலிஷ் செய்தால் புதியது போல மாறிவிடும். வாரம் ஒரு முறை மென்மையான சோப் அல்லது வாஷிங் மெடீரியலைக் கொண்டு துடைத்தால் போதும். பளிச் சென்று இருக்கும். புளி, மோர், எலுமிச்சை போன்ற அமிலத் தன்மையுள்ள பொருட்கள் மொஸைக்கின் எதிரிகள். அடிக்கடி நீர் ஊற்றிக் கழுவவும் கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக மற்ற வகைகளை விட இதன் விலை குறைவு. பல டிஸைன்களில் கிடைக்கும் மொஸைக் டைல்களைப் பதித்தால் தரையில் ஓவியம் பரப்பியது போல் அவ்வளவு அழகாக இருக்கும்." இவ்வாறு மொஸைக் டைல்களின் பெருமையைப் புகழ்ந்தார் சரஸ்வதி.

**இவரது எதிர்காலத் திட்டங்கள் என்னென்ன?**

தொழிற்சாலையை விரிவுபடுத்தி, மார்பிள், கிரேனைட் டிஸைன் மொஸைக்

டைல்களை உற்பத்தி செய்து, லேயிங், பாலிஷிங் வேலையில் தீவிரமாக ஈடுபடுவது தான். பெரிய அலுவலக ஹால்களில் காஸ்ட் இன் ஸிடு (Cast in Situ) மற்றும் Brass in Situ முறையில் தளம் அமைக்க திட்டங்கள் வைத்துள்ளார்.

தன் தொழிலில் வெற்றி நடை போடும் இவரது மூத்த மகள் இண்டஸ்ட்ரியல் இஞ்சினீரிங் முதலாம் ஆண்டு படிக்கிறார். இவரது அடுத்த மகளும் தொழில் துறையில் ஈடுபாடு கொண்டுள்ளார். இவரைப் போலவே இவரது குழந்தைகளும் தொழில் துறையில் ஈடுபாடு காட்டுவது இவரது மற்றொரு வெற்றி.

**தொழில் துவங்குபவர்களுக்கு இவர் கூறும் அறிவுரைகள் யாவை?**

இவர் வங்கியில் கடன் வாங்கவில்லை. ஆயினும் பிராஸஸிங் மெஷின் வாங்க ரூ. 20,000 முதலீடு செய்து, மற்றும் இதர மூலப் பொருட்கள் வாங்கவும், தொழிற்சாலை அமைக்கவும் முப்பதினாயிரம் செலவு செய்து தொழிலைத் துவங்கியுள்ளார்.

"ஆனால் முதலில் தொழில் துவங்குபவர்கள் பிரஸிங் மெஷினை வாங்க வேண்டும். மற்ற செலவுகளைப் படிப்படியாகச் செய்யலாம். வங்கியும் கடன் கொடுக்கும். இதற்கென விசேஷ பயிற்சி தேவையில்லை. தெரிந்தவர்கள் தொழிற்சாலையில் இரண்டு நாள் நேரடியாகச் சென்று விவரங்களை அறிந்தால் போதும். ஆட்களிடம் வேலை வாங்கும் திறமை, கற்பனைத் திறன், நிர்வாகத் திறமை, குவாலிடி, பங்க்சுவாலிடி, ரிலையபிளிடி ஆகிய மூன்று தன்மைகள், இவை இருந்தால் போதும். வெற்றி நிச்சயம். கிராமங்களை விட வளர்ந்துவரும் பெரிய நகரங்களில் கட்டடங்கள் பெருகிவருவதால் இங்கு தொழில் துவங்குவதே நல்லது. நிச்சயம் லாபம் தரும் தொழில். ஆரம்ப இடர்களையும் தோல்விகளையும் மனம் தளராமல் தாங்கிக் கொண்டால் வெற்றி வாய்ப்பு அதிகம்." இது இவர் கூறும் ஆலோசனைகள்.

நம்பிக்கையென்னும் அஸ்திவாரத்தில் எதிர் காலமென்னும் கட்டிடத்தை அமைத்தால் வண்ண வண்ண மொஸைக் தரை போல் வெற்றிவாய்ப்பு பூத்துச் சிரிப்பது நிச்சயம்.

— லக்ஷ்மி சங்கர்

இளமையோடு இருக்க!

நாள்தோறும் உணவுக்குப் பிறகு இரண்டொரு நெல்லிக்காய்களைச் சாப்பிட்டு வரவும். அத்துடன் ஒரு சிட்டிகை கடுக்காய்ப் பொடியையும் சாப்பிட்டு வெந்நீர் குடியுங்கள். நீங்கள் எப்பொழுதுமே இளமைதான்!

— எடையூர் சிவமதி.

# பொங்கிடும் பொங்கல் நினைவுகள்

**உஷா :**

"பொங்கல் அன்று எங்கள் தெருவில் குழந்தைகள்... சிறுவர், சிறுமிகளுக்குப் பல போட்டிகள் நடந்தன. அதில் ஓட்டப் பந்தயம் முதல் பாட்டுப் போட்டி வரை எங்கள் வீட்டு மாடியில் குடியிருந்தவரின் பெண் ஆறு வயது அமுதாவுக்கு முதல் பரிசு கிடைத்தது. எல்லோரும் அவளைப் பாராட்டினார்கள். பல பரிசுகளைப் பெற்ற அமுதாவிற்கு ஊரார் 'கண் திருஷ்டி' பட்டு விட்டதோ என்னவோ! அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் அன்று அவள் உயிருக்கே ஆபத்தாக வந்தது.

தெருவில் நடந்து வந்த அமுதா பின்னால் பெரிய கொம்புகளை உடைய மாடு ஒன்று அவளை முட்ட ஓடி வந்ததைப் பார்த்துப் பதறி விட்டேன். ஏதோ ஒரு சக்தி எனக்கு வர சட்டென்று ஓடி அமுதாவைத் தூக்கி விட்டேன். மாடு வேறு பக்கமாக ஓடிவிட்டது. தெருவில் பலரும் இதைப் பார்த்து விட்டுப் பரபரப்பாக ஓடிவந்து விட்டார்கள். ஒரு நல்ல திறமைமிக்க விளையாட்டு வீராங்கனையைக் காப்பாற்றிய மனநிறைவை அந்தப் பொங்கல் தினத்தில் அடைந்தேன்."

**லதா :**

"பொங்கல் அன்று என் உறவினர் வீட்டிற்குச் சென்று இருந்தேன். அவர் வீட்டிற்கு அடுத்த வீட்டில் இருபது வயது உள்ள இளைஞர் ஒருவரைப் பெரியவர் ஒருவர் பெல்ட்டால் கண்டபடி அடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டு திகைத்து விட்டேன்... பெரியவரிடம் காரணம் கேட்டேன். அந்த இளைஞன் அவர் சகோதரி பிள்ளை என்றும்... அவர் வீட்டிலேயே தங்கிக் கல்லூரியில் படித்து வருபவன் என்றும்... அவன் அவர் பெண்ணுக்குப் 'பொங்கல் வாழ்த்து' ஒன்றைத்தபாலில்அனுப்பிவைத்ததற்கு அடிப்பதாகவும் கூறினார்.

'உங்கள் பெண் அவனுக்கு முறைப் பெண்தானே...? ஏன் இப்படி அடித்தீர்கள்...? கண்டித்தால் போதாதா?' என்று பெரியவரைச் சமாதானப்படுத்தி


உஷா


லதா


ரேகா


பட்டம்மாள்

னேன். சில ஆண்டுகள் கழித்து அந்தப் பையனையே தன் மாப்பிள்ளை ஆக்கிவிட்டார் அந்தப் பெரியவர். எனக்குப் பத்திரிகை கொடுத்த அந்த இளைஞன் பொங்கல் அன்று நடந்ததை எனக்கு நினைவுபடுத்தி தன்னை அடியில் இருந்து காப்பாற்றிய எனக்கு நன்றி கூறியதை மறக்க முடியாது!"

**ஜெயா:**

"பொங்கல் என்றாலே 'கிரிக்கெட்' நினைவுதான் எனக்கு வரும். கிரிக்கெட் மீது மிகுந்த ஆர்வம் உள்ள என் தம்பி மோகன் சென்னையில் நடைபெற்ற மேற்கு இந்திய அணி, இந்திய அணி கிரிக்கெட் டெஸ்ட்டைப் பார்க்க மதுரையில் இருந்து வந்திருந்தான். கூடவே அவன் நண்பன் ஒருவனையும் அழைத்து வந்து விட்டான். என் கணவரோ என் தம்பிக்கும் அவருக்கும் மட்டும் இரண்டு டிக்கெட் வாங்கி இருந்தார். என் கணவருக்கும் 'கிரிக்கெட்' என்றால் உயிர். என் தம்பியோ எப்படியாவது என் கணவரை வீட்டில் இருக்க வைத்து அந்த டிக்கெட்டை அவன் நண்பனுக்கு வாங்கித் தர கட்டாயப்படுத்தினான். வேறு வழியின்றி எனக்கு உடல்நலம் சரி இல்லாதது போல் நடித்து கணவரை வீட்டில் இருக்க வைத்தேன். பொங்கல் அன்று என் தம்பியும் அவன் நண்பனும் கிரிக்கெட் பார்த்து விட்டு வந்து எனக்கு நன்றி கூறினார்கள். என் கணவரிடம் பிறகு உண்மையைச் சொன்னதும் பெருந்தன்மையுடன் கோபம் கொள்ளாமல் இருந்து விட்டார்."

**பட்டம்மாள்:**

"அப்பப்பா... அந்தப் பொங்கலை நினைத்தாலே எனக்கு இப்போது கூட மயக்கம் வந்து விடும். அடுத்த வீட்டில் குடியிருந்த தம்பதிகள் அவசர விஷயமாக அருகில் இருந்த ஊருக்கு 'பொங்கல்' அன்று போகும் போது அவர்களின் ஒரே மகனை, இரண்டு வயது பிள்ளையை என் வீட்டில் விட்டுச் சென்று விட்டார்கள். என் வீட்டுக் குழந்தைகளோடு அந்தக் குழந்தை விளையாடிக் கொண்டிருந்த போது பெரிய அலறல் சப்தம் கேட்டு ஓடி வந்து பார்த்தால் அடுத்த வீட்டுப் பிள்ளை தலையில் ரத்தம் பீறிட்டு வர கீழே மயங்கிக் கிடந்தான். குழந்தைகள் சண்டை போட்டுக் கரும்பால் அடித்து விட்டது தெரிந்தது. உடனே அடிபட்ட அந்தக் குழந்தையை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் சிகிச்சை செய்து காப்பாற்ற வேண்டியிருந்தது. ஊரார் குழந்தையைப் பார்த்துக் கொள்வதில் மிகுந்த கவனம் இருக்க வேண்டும் என்று அந்தப் பொங்கல் எனக்கு நல்வழி காட்டியது."

தொகுப்பு: **விஜயா கண்ணன்.**

## சொல்ல விரும்புகிறோம்:



* சென்ற இதழில் "தாங்க்ஸ் மாலு" என்ற தலைப்பில் நான் எழுதிய சிறுகதை பிரசுரமாயிருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் முதன் முதலாகப் பிரசுரமான என் கதையில், என் பெயர் விடுபட்டுப் போய் விட்டதே! ஒரு பக்கம் மகிழ்ச்சி, ஒரு பக்கம் வருத்தம் – இடையே நான்.

சென்னை – 34. சாந்தா ராமசாமி.

* ஆண்கள் பெண்களுக்கு உதவக் கூடாதா... என்ற கட்டுரையைப் படித்து மனம் வருந்தினேன். நகைச்சுவைகளை சீரியஸாக எடுத்துக் கொள்ளக் கூடாது. உதாரணமாக என்னைப் பொறுத்தவரை சில ஆயிரக்கணக்கான ஜோக்குகளை எழுதியுள்ளேன். எழுதியும் வருகிறேன். என்னுடைய ஜோக்குகளில் பெரும்பாலானவை மாமியார் – மருமகள், மனைவி... டாக்டர்.. அரசியல்வாதிகளைப் பற்றியவை. ஆனால் அவற்றின் மூலம் அவர்களைப் புண்படுத்துவது என் எண்ணம் அல்ல... மாறாக... என் மனைவி உள்பட... எல்லோரையும் மதிக்கிறேன். கதையைப் போலவே... நகைச்சுவைக்கும் அதீத கற்பனைதான் அடிப்படை.. ஆகவே மீண்டும் கூறுகிறேன்.. நிழலை நிஜமாகக் கருதக் கூடாது...!

திருச்சி – 14. ராஜி ராதா.

* எந்த உதவியையும் செய்யாத என் கணவர், தங்களின் 'ஆண்கள், பெண்களுக்கு உதவுவது தவறா?' கட்டுரையைப் படித்ததிலிருந்து தானே முன்வந்து பல வேலைகளைச் செய்கிறார். இதற்காக மங்கையர் மலருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

சீர்காழி. ஜெயலக்ஷ்மி ஷண்முகம்.

* 'பெண் பார்க்கப் போகும் போது, பையனின் கருத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்' என வந்திருந்த ஒரு துணுக்கு ரொம்ப நன்றாக இருந்தது. அவர் எழுதியது முற்றிலும் உண்மை. இதே காரணத்தால் பாதிக்கப்பட்டு, மீண்டிருப்பவள் நான். என்னுடைய திருமணம் மாப்பிள்ளை சகோதரி (ஒரு மருத்துவர்) "இந்தப் பெண் வீட்டில் என்ன கொடுக்கப் போகிறார்கள்" என்று கூறியதால் தேதி வரை வந்த திருமணம் நின்று விட்டது. பெண்ணுக்குப் பெண்ணே எதிரியாக இருந்தால் உரிமை பற்றிப் பேசி என்ன பயன்? நான் பாதிக்கப்பட்டதால்தான் எனக்கு அதன் வருத்தம் அதிகம் தெரிகிறது.

கோவை – 3. தேவகி.

* தண்ணீர் பற்றிய –
தரமான டாக்குமெண்டரி படம்
பார்த்தது போல இருந்தது –
தண்ணீர் பற்றிய விரிவான –
விறுவிறுப்பான கட்டுரையைப் படித்து
முடித்த போது...

அயன்புரம். த. சத்தியநாராயணன்.

* டாக்டர். கமலா செல்வராஜ், "பகலில் தூங்குவது போன்ற கெட்ட பழக்கம் உலகத்திலேயே கிடையாது" என்று கூறியிருக்கிறார்.

ஆனால், தூக்கத்தை ஆராய்ந்து வரும் மருத்துவர்கள், "பகல் தூக்கம் உடலுக்குத் தேவை; இதனால் சுறுசுறுப்பு கூடுகிறது" என்று கூறுகிறார்கள். இதுபற்றிய விவரமான கட்டுரை, ஹிந்து இதழில் அக்டோபர் 8 – ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை – 1989) அன்று வெளியாகியுள்ளது.

நாக்பூர். பி. ஆர். கண்ணன்.

* குழந்தைகளின் மனத்தை டீ.வி.யும், வீடியோவும் பாதிக்கின்றன என்பது நூற்றுக்கு நூறு உண்மை! குழந்தைகள், தங்கள் பாட புத்தகங்களை மறந்து, டீ.வி., வீடியோ பார்ப்பதால், அவர்கள் தங்கள் படிப்பில் கவனம் குறைவதோடு, அவர்களின் கல்வித் தரமும் குறைந்து விடுகிறது! கட்டுரையில் நியாயமான கருத்துக்கள் அலசப்பட்டன! பெற்றோர்கள் நன்கு சிந்திக்கும்படி அமைந்து இருந்தது, கட்டுரை!

கோவை – 5. கே. கோபிநாத்.

* ஒரு உண்மை மனைவியின் உத்தமமான வேண்டுகோளுக்கு இணங்கி வரமளித்த அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனின் கருணையை என்னவென்று சொல்லுவேன்! அப்பப்பா! கட்டுரை மெய்சிலிர்க்க வைத்து விட்டது!

வெண்மணி. என். முரளிதரன்.

* ஜெ. பாக்கியலட்சுமியின் 'நிசப்தப் போராட்டம்' படிக்கும் போது மனதினில் எழுந்த எண்ணங்களுக்கு குறைவேயில்லை. அவ்வளவு விறுவிறுப்பு! திரைப்படம் ஒன்றினை பார்த்த திருப்தி ஏற்பட வைத்த மங்கையர் மலரே நீர் வாழ்க!

பாண்டிச்சேரி. வே. தென்பரிதி.

அட்டை வண்ணப்படம்: யோகா.



செம்பருத்தி
மருதோன்றி
கீழா நெல்லி
பொடுதலை
டர்த்தியான
அழகிய
கூந்தலுக்கு!
உங்கள் கூந்தல் வளர்ச்சிக்கும், பொடுகு வராமல் தடுக்கவும், இளநரையை போக்கவும், முடி உதிர்வதை நிறுத்தவும், இதோ உங்கள் மூலிகை தைலம் டாம்ப்கால்.
இந்த டாம்ப்கால் தைலம் இயற்கை தந்த 32 மூலிகைகளையும் தரமான ஆலிவ் எண்ணையும் தேங்காய் எண்ணையும் கொண்டு தயாரிக்கப் படுகிறது.
டாம்ப்கால்
மூலிகைக்கூந்தல்தைலம்
தமிழக அரசு நிறுவனத் தயாரிப்பு
கூந்தல் நலத்திற்கும் வளத்திற்கும் டாம்ப்கால்.

# தியாகரத்தினமான நாகரத்தினம்!

**மாட்டுப்'பொங்கல் நன்னாளன்று திருவையாற்றில் தியாகப் பிரம்ம ஆராதனை நிகழ்கிறது. ஆராதனை நிகழும் ஆலய ஸமாதியை எழுப்பியவர் ஒரு ஸ்த்ரீ ரத்தினம். அந்த ரத்தினத்தின் ஒளி வாழ்வில் பல கதிர்களை இங்கு கண்டு களித்து நன்றியஞ்சலி செலுத்தலாம்.**



* சமாதியிலுள்ள தியாகராஜரின் சிலை.

தாயார் கங்கணம் கட்டிக் கொண்டு ஒரு சபதத்தை முக்கால்வாசி நிறைவேற்றினாள்.

மகளும் கங்கணம் கட்டிக் கொண்டு வேறொரு சபதத்தை முற்றிலுமே நிறைவேற்றினாள்.

இரண்டு சபதங்களுக்கும் அஸ்திவாரம் ஒன்றுதான். நல்ல சங்கற்பம் நடந்தே தீரும் என்ற ஆழ்நம்பிக்கையும், எடுத்த காரியத்தில் எள்ளளவும் தளராத உள்ளுறுதியும் தான் அந்த அஸ்திவாரம்.

அதை அன்னை புட்டுலக்ஷ்மியம்மாளிடமிருந்து ஆஸ்தியாகப் பெற்றிருந்தாள் மகள் நாகரத்தினம்மாள்.

சங்கீதத்தைப் பாரம்பரிய ஆஸ்தியாகப் பெற்றவர் புட்டுலக்ஷ்மி. பெங்களூரைச் சேர்ந்த கன்னட இசை வேளாளர் குடியைச் சேர்ந்தவர். 1878 நவம்பர் 3ந் தேதி அக்குடி விளங்கத் தோன்றினாள் நாகரத்தினம்.

சமீப காலமாகச் 'சின்ன வீடு' என்று ஒன்று அடிபடுகிறதே. அந்தச் சின்ன வீட்டுக்காரி 'பெரிய வீட்'டைச் சின்னா பின்னமாக்கும் கொடுமைக்காரி என்றே பொதுவில் நினைக்கிறோம். ஆனால் இன்பத்துக்கு மட்டுமே சின்ன வீடு, செல்

வத்துக்குப் பெரிய வீடுதான் என்னும் ரீதியில், தன்னிடமே விசுவாசம் வைத்த ஒருத்தியுடன் ஏதோ ஓர் இடைக்காலத்தில் மட்டும் சின்ன வீடு நடத்தி விட்டு அப்புறம் அவளை நட்டாற்றில் விட்டுப் பெரியதற்கே திரும்பும் கொடுமைக்கார ஆடவர்களும் உண்டு!

புட்டுலக்ஷ்மி இந்தக் கொடுமைக்கு ஆளானவள். அவளை அபிமானித்து வந்த வழக்கறிஞர் சுப்பாராவ் திடுமென அவளைத் திரஸ்கரித்து விட்டார். நிர்க்கதியாக நின்ற அந்த அபலைக்கு அப்போது ஒரு அசாத்திய பலத்தைத் தானறியாமலே ஊட்டியது — ஒன்றரை வயசு மகள் நாகரத்தினம்தான்.

''இந்தப் பெண்ணைப் பெரிய பாடகியாகப் பெயரெடுக்க வைப்பேன். அதோடு எவனுக்கும் அடிமைப்பட்டு விடாமல் சுதந்திரமாகவே கௌரவத்துடன் வாழவும் அவளுக்கு உறுதியூட்டுவேன்'' என்று புட்டுலக்ஷ்மி சபதமிட்டாள்.

பெங்களூரிலிருந்து மைசூர் செல்வது, அங்கே மகாராஜாவின் ஆஸ்தான வித்வானான சங்கீத் — சாஹித்திய மகா பண்டிதர் கிரிபட்ட தம்மையா சாஸ்திரியிடம் மகளை மாணவியாகச் சேர்ப்பது என்ற தீர்மானத்துடன் புறப்பட்டாள்.

தான் அங்கேயும் பிற்காலத்தில் ஒரு சபதம் செய்ய வேண்டிவரும் என்று அப்போது அவள் எதிர்பார்த்திருக்க முடியாது!

நொந்து வந்த தாயையும், நொடியில் கற்றுக் கொள்ளும் துடியான குழந்தையையும் பரிந்து அங்கீகரித்தார் பண்டிதர் தம்மையா.

ஒருசில ஆண்டுகள் இனிதே சென்றன.

பால மேதையான நாகரத்தினம் ஒன்பது வயதுக்குள் சங்கீதத்தை ஓரளவு நுணுக்கமாகவே கற்று விட்டாள். அதோடு தம்மையாவிடம் சமஸ்கிருத மொழி சிக்ஷையும் பெற்று போதிய அளவு பாஷா ஞானம் அடைந்து விட்டாள்.

தாயிடமிருந்து நெஞ்சுரம், சுதந்திர மனப்பான்மை, விடாமுயற்சி ஆகியவற்றையும் கற்று விட்டாள்!

தம்மையாவிடமிருந்து இனி வெகு நுட்பமான, நெருடான விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். இதில் தேர்ந்து விட்டால் அப்புறம் உச்ச ஸ்தான இசை விதுஷியாகக் கச்சேரி சபைகளிலும் அறிஞரவைகளிலும் இடம் பெற்று விடலாம்.

வித்யாப்பியாசத்தில் அவள் மேல் பஞ்சம ஸஞ்சாரத்திற்குப் போகும் அயனான கட்டம்! அச் சமயம் பார்த்துத் தம்புராத் தந்தி பட்டென்று அறுந்தது!

சுப்பாராவ் கைவிட்டதோடு புட்டுலக்ஷ்மி பட்டுப் போகாமல் உயர்ந்த புகலிடம் பெற்றுப் பெண்ணையும் உயர்வாக ஏற்றி வருவதைப் பார்த்துப் பார்த்து வயிறெரிந்தவர்கள் தம்மையாவிடம் இல்லாததும் பொல்லாததுமாக வத்தி வைத்தார்கள். விதியின் சதியில் தம்மையாவும் அவதூறுகளை நம்பினார்.

நாகரத்தினத்தின் பிதா முன்பு செய்த



அலங்காரமும், படாடோபமுமாக நாகரத்தினம்மாள்

தையே இப்போது குருவும் செய்தார். பாலகி தாயோடு நட்டாற்றில் தள்ளப்பட்டாள்.

வீறுகொண்ட தாய் மறுபடியும் நெஞ்சுரத்தைத் தெப்பமாகப் பிடித்துக் கொண்டு வெள்ளத்தில் அமுங்காமல் வெளியே தைரியமாக வந்தாள். தாய் தந்த பாடத்தோடு பிஞ்சு உள்ளத்தில் சொந்த அநுபவமும் ஆழப் பதிந்ததால் நாகரத்தினமும் அந்தத் தெப்பத்திலேறித் துணிவுடன் மிதந்தாள்.

இரண்டாவது முறை சபதம் செய்தாள் புட்டுலக்ஷ்மி. "இன்று இந்த மைசூர் நகரத்தை விட்டு வெளியேறுகிறேன். இந்தக் குழந்தை தம்மையாவின் வழியிலேயே பாக்கியெல்லாமும் கற்றுக் கொண்டு, அதற்கு மேலும் மற்ற பாணிகளிலும் சொந்தமாகவும் தெரிந்து கொண்டு அவர் ஆஸ்தானம் வகிக்கும் அரண்மனையிலிருந்தே அழைப்புப் பெறுகிற பெரிய விதுஷியாகும் நாள் வருகிற வரை இந்த ஊரில் நான் அடி வைப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு நாளை வரவழைத்தே தீர்வேன்" என்று சூளுரைத்தாள்.

அந் நாட்களில் காஞ்சீபுரம் தனகோடியம்மாள் இசையுலகத்தில் கொடி கட்டிப் பறந்த ஒருவராயிருந்தார். மகளை அந்த அம்மாளிடம் குருகுல வாஸத்திற்கு விடலாம் என்ற எண்ணத்துடன் மைசூரிலிருந்து காஞ்சி வந்தாள் புட்டுலக்ஷ்மி.

விதியின் சதி விடவில்லை. தனகோடிக்கு மகோதர நோயின் உபத்திரவம் அப்போது அதிகமாயிருந்தது. ஆதரவு நாடி வந்தவர்களுக்கு அந்த அம்மாள் வருத்தத்துடன் கைவிரிக்க நேர்ந்தது.

பெங்களூர் திரும்பித் தாற்காலிகமாக தன் சோதரர் வேங்கடசுப்பையாவிடம் மகளை வயலின் சிக்ஷைக்கு விட்டார். நல்ல விஷயக்ஞரான ஒரு வித்வானிடம் பாடம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே உள்ளூர அவள் கருத்தாயிருந்தது.

தியாகையர்வாளின் நேர் சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த முனுசாமியப்பா பக்கத்திலேயே இருக்கத்தான் செய்தார். ஆனால் அவர் கேட்ட மாதாந்தர தக்ஷிணையான பத்து ரூபாய்க்குப் புட்டுலக்ஷ்மி எங்கே போவாள்? அவர் ஏழு மாத காலம் இழுக்கடித்ததற்கு ஈடுகொடுத்த தாய் அப்புறம் தைரியமாக அவரிடம் ஒரு யோசனை சொன்னாள்: "நாகரத்தினத்துக்கு என்று நீங்கள் மெனக்கிட்டுத் தனியாகப் பாடம் நடத்த வேண்டாம். உங்கள் தங்கை பெண்ணுக்குப் பாடம் எடுக்கிறீர்கள் அல்லவா? அப்போது இவளும் உடன் உட்கார்ந்து கேட்டுக் கொள்ளட்டுமே!"

முனிசாமியப்பா இணங்கினார். அப்புறம் நாகரத்தினம் தன் மருமகளை விடச் சிறப்பாகப் பாடத்தை கிரகித்துக் கொள்வதைக் கண்டு சந்தோஷப்பட்டு அவளுக்கென்றே தனிப் பாடமும் ஆரம்பித்தார்.



* அமைதியும், சாந்தமும் தவமும் அம்மையார்

புட்டுலக்ஷ்மியின் தன்மான உணர்வைப் பாருங்கள். 'ஏன் அசல் யாசகராகவே வித்யா'தானம்' பெற வேண்டும்? வித்யை என்றாலும் சங்கீதம் மட்டும் போதுமா? நாட்டியத்திலும் பெண்ணுக்குத் தேர்ச்சி ஏற்படுத்த வேண்டும். கன்னடமும், சமஸ்கிருதமும் பயின்று விட்ட அவளுக்கு அனேக அரிய கிருதிகளைக் கொண்ட தெலுங்கு, தமிழ் மொழிகளிலும் பயிற்சி தர வேண்டும். கால நிலையை உத்தேசித்து ஆங்கில அறிவும் புகட்ட வேண்டும். இதெல்லாவற்றுக்கும் 'இலவச' குருமார்கள் பிடிக்க முடியுமா என்ன? அதனால் நமக்குள்ள ஆஸ்தி பாஸ்தி, நகை, நட்டு எல்லாவற்றையும் விற்றுக் காசாக்குவோம். நாம் அரை வயிற்றுக்குத் தின்றாலும் போதும். குரு தக்ஷிணை கொடுத்தே இந்த எல்லா வித்தைகளையும் குழந்தை ஸ்வீகரிக்கச் செய்வோம்' என்று எண்ணினாள்..

எண்ணியதைச் செயலுமாக்கினார் மனவலிமை மிக்க அந்தத் தியாகித் தாய். இருந்ததையெல்லாம் விற்றுச் சுட்டு, மகளுக்கு இசை, நடனம், மொழிகள் பயிற்சி ஆகியவற்றுக்காக நான்கு வித்வான்களிடம் சிட்சை அமர்த்தி குருமார்களின் தட்சிணையாக மாதம் நாற்பது ரூபாய் செலவிட்டாள். தற்காலத்து ஆயிரம் ரூபாய்க்குச் சமம் அந்த நாற்பது ரூபாய்!

அஷ்டாவதானம் போல இத்தனை பாடங்களுக்கும் அற்புதமாக மனம்



* திருவையாறு ஆராதனையில்...

கொடுத்து கற்றுக் கொண்டாள் அறிவுக் கூர்மை மிக்க பாலகி. இசைப் புலமை, மொழிப் புலமை, சாஸ்திரப் புலமை எல்லாமே வாய்க்கப் பெற்றதால்தான் பிற்காலத்தில் வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷியாகப் பிரபல தெலுங்குக் கவியான புராணம் சூர்யநாராயண தீர்த்தரிடமிருந்து "வித்யா சுந்தரி" என்ற விருதும் பெற்றாள்.

தம்மையாவின் கானமர்மங்களையும் பெண் கற்றுத் தெளிவாளென்பதல்லவா தாயின் சபதம்? தம்மையாவின் சீடர் பிடாரம் கிருஷ்ணப்பா அப்போது அச் சீமைகளில் மிகவும் கியாதியுடன் விளங்கினார். அவர் முனுஸாமியப்பாவுக்கு நண்பர்.

கிருஷ்ணப்பாவுக்குக் கொக்கி போட்டாள், தன் பிரதிக்ஞையிலேயே சதாவும் பிரக்ஞையாயிருந்த புட்டலக்ஷ்மி. "ஒருவர் தம் வித்யையைத் தக்க யோக்கியதையுள்ள பாத்திரத்துக்கு வழங்காமலிருக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்களில்லையா?" என்று அவரைக் கேட்டாள்.

அதைக் கொக்கி என்று புரிந்து கொள்ளாமல் கிருஷ்ணப்பா தாமே அதை இன்னமும் இறுக்கி வளைத்துக் கொண்டார். "பெரியவர்கள் சொல்வது மட்டுமில்லையம்மா! கற்ற வித்தையை ஸத்பாத்திரத்திற்குத் தராவிட்டால் கன்றுக்குப் பால் தராமல் தாய்ப் பசுவைத் தடுக்கும் பாபம் சேரும் என்று சாஸ்திரமே சொல்கிறது" என்றார்.

"அப்படியானால் நம் நாகம் கொஞ்சம் பாடிக் கேட்டு ஸத்பாத்திரம்தானா என்று பாருங்களேன்!"

நாகம் பாடினாள். பெயர்தான் நாகம், பாட்டோ அமுதம்! சிறுமி நாகம் ராகம் பாடிய அழகில் மகுடியில் சொக்கும் நாகமானார் கிருஷ்ணப்பா.

அந்தச் சொக்கலில் 'கொக்கி'க்கு மனப்பூர்வமாகவே சிக்கினார்.

கிருஷ்ணப்பாவின் சிஷ்யையான நாகரத்தினம் முதல் குருவின் இசை சூட்சுமங்களையும் அவரிடமிருந்து அறிந்து அவ் வழி முழுத் தேர்ச்சியும் பெற்று விட்டாள்.

விதி செய்த சதிகளையெல்லாம் தாயும் மகளும் எப்படி வெற்றி வாழ்வுக்குப் படிகளாக்கிக் கொள்கிறார்களென்று மீண்டும் உலகுக்குக் காட்ட இறைவன் எண்ணினானோ என்னவோ? நாகரத்தினத்துக்குப் பதின்மூன்றே பிராயம் நடக்கும் போது அவளுக்குச் சகலமாகவும் இருந்த— அவளே தனக்குச் சகலமும் என வாழ்ந்த— ஆருயிர் அன்னை காச நோய்க்கு ஆளாகிக் கால பாசத்தில் கட்டுண்டாள்.

கண்மூடு முன் முனுஸாமியப்பாவிடம் அவள் சொன்னாள்: "நாகம் நான் எதிர்பார்த்தபடி மகா விதுஷியாகி விடுவாள். அஞ்சா நெஞ்சத்தோடும், அயராத முயற்சியோடும் சுதந்திர புருஷியாக அமோக வாழ்வு காண்பாள் என்ற திட நம்பிக்கையோடு நிம்மதியாய் சாகிறேன். என் பிரதிக்ஞையில் முக்கால்வாசி நிறைவேற்றி விட்டதாகவே மகிழ்கிறேன். மீதத்தையும் பூர்த்தி செய்து தருவது தங்கள் பொறுப்பு."

சில காலத்துக்குப் பிறகு முனுசாமியப்பா அப் பொறுப்பை அருமையாக நிறைவேற்றினார். மைசூர் ராஜ்யத்தில் இசை



வானவில்லின் வண்ணங்களோடு
விருந்தினர்களை
வரவேற்போம்!
லிவ்பட்
பாட்டில்கள்
திரவப்பண்டங்களை பாதுகாக்க, உபசரிக்க ஏற்றது!
* உடையாதது * சுகாதாரமானது * லேசானது * கண்ணாடி போன்ற தோற்றமுடையது
* சுவையை பாதுகாப்பது * நீண்ட நாள் உழைக்கக்கூடியது
லிவியா பாலிமர் பாட்டில்ஸ் (பி) லிட்..
மண்டையூர் சாலை, மண்டையூர், புதுக்கோட்டை மாவட்டம் - 622 515.
* ராஜேஷ் & பிரசன்னா எண்டர்பிரைஸஸ், 30, வடக்கு உஸ்மான் சாலை, தியாகராயநகர், சென்னை-600 017. * ஸ்ரீ லக்ஷ்மி டிரேடர்ஸ், 432, ஆர்.ஜி.தெரு, கோயம்பத்தூர் - 641 001. போன் : 35422, 34572. * ஷா முல்தான்மால் ஹஸ்திமால் & சன்ஸ், P.B. NO : 7750, மாமுல் பெட், பெங்களூர் - 560 053. போன் : 27125
Shree




# New! Bonny Mix Chocolate

## The chocolatey way to start the day!

Give your child the breakfast he simply cannot resist. Bonny Mix Chocolate. The cereal, fruit 'n' nut porridge with the additional goodness of chocolate. The taste your child will really love throughout the growing years.




**So convenient to prepare**
No need to cook.
Put the required quantity of Bonny Mix into a bowl.
Add pre-boiled milk.
Keep stirring gently, till you get a creamy porridge.



**Bonny Mix**®

The instant porridge

**In 2 varieties:**
Natural ⋆ Chocolate

**Good health comes from Glaxo**

GL/C/1/89

50 கிராம் சுக்குடன் தேவையான அளவு உப்பு சேர்த்து பொடி செய்து, ஜல்லடையில் சலித்து நைசான பவுடராக்கி பாட்டிலில் வைத்துக்கொள்ளவும். நீங்கள் சாப்பிட்ட சாப்பாடு ஜீரணம் ஆகவில்லை என்றால் இனோ, சோடா அல்லது ஜெலுசில் மாத்திரை போன்றவற்றைத் தேடி அலைய வேண்டாம். இந்த சுக்குப் பவுடரில் ஒரு ஸ்பூன் எடுத்து வாயில் போட்டு அரை தம்ளர் தண்ணீர் குடித்து விடவும். நொடியில் ஜீரணமாகி வயிற்று உபாதை மாயமாய் மறைந்து விடும்.

— ஆர். பால சரஸ்வதி.

வேந்தரென விளங்கிய வீணை சேஷண்ணாவின் இல்லத்திலேயே நாகரத்தினத்தின் அரங்கேற்றம் நடைபெற ஏற்பாடு செய்தார். இசையுலக படே படேக்கள் பலர் கூடிய சதஸில் பதினைந்து வயது யுவதியின் பாட்டு கந்தர்வ கானம் எனப் போற்றப்பட்டது. மகா விருட்சங்களுக்கே உரிய 'ஜோடி சால்வை மரியாதை'யை விளையும் பயிரான நாகரத்தினத்திற்குச் சாட்சாத் சேஷண்ணாவே செய்தார்.

இசை வேந்தரின் பாராட்டு ராஜ்ய வேந்தரும் கலாவிற்பன்னருமான சாமராஜேந்திர உடையாரின் செவியை எட்டியது. சமயம் பார்த்து அரசிளங்குமரி ஜயலக்ஷ்மியின் பூப்பு விழாவும் நிகழ் வைபவத்தில் கச்சேரி செய்ய குமரிப் பெண் நாகரத்தினம் அழைப்புப் பெற்றாள். "ஜயலக்ஷ்மி" அவள் பக்கம் பூர்ண கடாக்ஷம் செலுத்தத் தொடங்கினாள்! ராஜதர்பாரில் இள மங்கை நடத்திய இசை வீனிகைக்கு ஆஸ்தான வித்வானென்ற முறையில் கிரிபட்ட தம்மைய சாஸ்திரியார் வந்தே தீர வேண்டியிருந்தது. வந்த பெரியவரை அவர் வழியிலேயே பாடிப் பிரமிக்கச் செய்து வாயார ஆசியும் பெற்று விட்டாள் நாகரத்தினம்.

புட்டுலக்ஷ்மியின் சபதம் முற்றிலும் நிறைவேறி விட்டது!

தன் மேன்மை வாழ்வுக்குக் காரணமான அத் தாயையும் அவள் கருதியதைக் காரியமாக்கிக் காட்டிய குருநாதர் முனுசாமியப்பாவையும் நாகரத்தினம் ஆயுள் உள்ளளவும் நன்றியுடன் நினைத்து அஞ்சலி செலுத்தி வந்தாள்.

அரசவைக் கச்சேரியிலிருந்து நாகரத்தினத்தின் புகழ் வாழ்வு அங்குரார்ப் பணமாயிற்று. சென்னை ரஸிகப் பிரமுகரும் பிரபுவுமான சி. எஸ். ராஜரத்தின முதலியார் நாகரத்தினத்திற்கு ஆதரவு அளித்ததில் அவள் மைசூர் ராஜ்யத்தை விட்டு வந்து சென்னை வாசி ஆனாள். ஆயினும் தாய்ச்சீமை அபிமானத்தில் தன்னை பெங்களூர் நாகரத்தினம்மாள் என்றே தெரிவித்துக் கொண்டாள்.

அக் காலத்தில் இரண்டு **B. N. R.**கள் உண்டு. பொது ஜனங்கள் தெரிந்து கொண்டிருந்த **B.N.R:** பெங்கால் — நாக்பூர் — ரயில்வே. ரஸிக மகா ஜனங்கள் தெரிந்து கொண்ட **B.N.R:** பெங்களூர்—நாக—ரத்தினம்மாள்.

ஆண்மையின் வீறும் பெண்மையின் நயமும் நாகரத்தினம்மாளின் சுபாவத்தில் கலந்திருந்தாற்போலவே அவருடைய சாரீரம், சங்கீத பாணி ஆகியவற்றிலும் இனிமையோடு காம்பீர்யமும் கலந்திருந்தது. மைக் இல்லாத அந் நாட்களிலும் எத்தனை பெரிய கூட்டமாயினும் கடைசி வரிசை வரை அவரது குரல் கேட்கும். பன்மொழிப் புலமை மிக்கவராதலால் சாஹித்தியங்களை மிகத் தெளிவாக உச்சரித்து பாவம் ததும்பப் பாடிப் பாமர — பண்டிதரனைவரையும் ஈர்த்தார். பண்டித கோஷ்டியின் மதிப்பைப் பெறுவதற்காகத் தாளச் சிலம்பம், ஸ்வர வின்னியாசம் என்று அவர் இறங்காமல் தமது மனோதர்மத்தையே மதித்து ராக ஆலாபனைக்கும், பாடல்களின் அர்த்த பாவத்துக்குமே முக்கியத்துவம் தந்த மாண்பினைக் குறிப்பிட வேண்டும்.

அக்கால நிலையை எண்ணிப் பார்த்தோமாயின் அதிசய திக்விஜயம் என்றே சொல்லும்படி, 1905லிருந்து 1934 வரை, சுமார் முப்பதாண்டுகளில் நாட்டின் பல பகுதிகளிலுள்ள 116 ஊர்களுக்குச் சென்று 1235 கச்சேரிகள் செய்திருக்கிறார். பிரயாண செளகரியத்தை முன்னிட்டு மூன்றாகப் பிரித்து மறுபடி இணைக்கும் வகையிலான 'ஸ்பெஷல்' தம்பூரா செய்து வைத்துக் கொண்டிருந்தார். அதன் நாதக் கட்டுக்கு ஜாம்பவானான மைசூர் வாசுதேவாச்சாரியாரே சான்று பகர்ந்திருக்கிறார்.

பெண் பாடகிகளுக்குப் போதிய கௌரவமளிப்பதற்குப் பெரியவர்கள் மிகவும் கணங்கிய அக் காலத்திலேயே நம் நாகரத்தினம் பண்டிதருலகிலும் சாஸ்திரக்ஞர்களிடையிலும் பெற்றிருந்த மதிப்பு ஆச்சரியமூட்டுவதாகும். பாட்டுத் திறன் மட்டுமின்றி அவர் பேச்சாற்றலும் பெற்றிருந்ததும், அவரது சமஸ்கிருத ஞானமும், சநாதன தர்மப் பற்றும் இதற்கு ஒரு முக்கியமான காரணமாகும். ஸ்ரீ சந்திரமௌளீச்வர பூஜா காலத்தில் ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்களின் திரு முன்னரே கானமிசைக்கும் பாக்கியம் பெற்ற அக்கால விதுஷிகள் இருவரில் ஒருவர் வீணை தனம்; மற்றவர் நாகரத்தினம்தான்.

காசி யு. பி. கிருஷ்ணமாச்சாரியார் என்ற பண்டிதர் புராண பாணியில் நாகரத்தினம்மாள் வரலாற்றை எழுதியிருக்கிறார். அதில்தான் அவரது முப்பதாண்டு சங்கீத திக்விஜயம் புள்ளி விவரம் வெளியாகியிருக்கிறது. 'கவிராஜ ஸார்வபௌம' என்ற உயர் விருது பெற்ற கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி நமது அம்மையாருக்கு 'கானகலா விசாரத' என்று பட்டம் சூட்டினார். ராஜ

மகேந்திரபுரத்தில் நடந்த மகாநாட்டில் பண்டித சிரேஷ்டர்கள் அவருக்கு வடமொழியிலேயே வரவேற்புரை வாசித்தளித்தனர். அங்கே நடைபெற்ற பண்டேரம் உத்ஸவத்திற்கு அவர் வந்த போது மதிப்புக்குரிய திருப்பதி வேங்கடேச்வர கவியும், ஸ்ரீ பாத கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியும் ரயில் நிலையத்திற்கே சென்று அவருக்குக் கர்ப்பூர ஹாரம் சூட்டி வரவேற்றார்கள். இதற்கெல்லாம் முடிவாக, முத்தாய்ப்பாக அவர் எழுபதாண்டு கண்டபின், ''கிருகலக்ஷ்மி'' ப் பத்திரிகையின் ஆண்டு விழாவில் விஜயநகர மகாராணியிடமிருந்து ''தியாக சேவாஸந்த'' என்ற விருதைப் பெற்றார்.

ஆம், அவரது மகிமை வாழ்வின் பளபளப்பெல்லாம் நாட்கள் செல்லச் செல்ல, பக்தியிலும் பக்தியில் விளைந்த தியாகத்திலும் குளிர்வண்ணம் கண்டு சாந்தமாக அடங்கிற்று. சர்வாலங்கார பூஷிதையாக கனமிடுக்குடன் அவர் காணும் யௌவன — மத்திம வயதுப் படங்களையும் அன்பும், அமைதியும் தவழும் அவரது பிற்காலப் படங்களையும் பார்த்தாலே தெரியும், எப்படி திவ்விய கிருபை என்ற பரிசவேதி அவரைப் பத்தரை மாற்றுத் தங்கமாகப் புடம் போட்டது என்று. மண்டையிலும், தொண்டையிலும் இருந்த பாட்டும் பேச்சும் காலக் கிரமத்தில் அவரது இதயத்தில் இறங்கியது அவரது பாக்கியம்; நம்முடைய பாக்கியமும்தான். மொழியறிவு காரணமாக வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய பாடல் எதுவாயினும் பொருளை ஊன்றிக் கவனித்து ஸ்பஷ்டமாக உச்சரித்தும் பாடிய அவர் நாளடைவில் அப் பொருளில் தாமே ஊறிக் கரையும் பக்திக் கனிவைப் பெற்றார். நவரஸங்களும் பொங்கும் தியாகராஜ ஸ்வாமிகளின் கிருதிகளிலேயே அவரது ஈடுபாடு விசேஷமாக வலுத்தது....

இங்கே அந்தக் கம்பீரப் பெண்மணியின் வினயப் பண்பைச் சொல்ல வேண்டும். ரசிகரொருவர் அவரிடம், ''தங்களுக்கு இவ்வளவு ஸம்ஸ்கிருத பாண்டித்தியம் இருந்தும் தாங்கள் தீக்ஷிதர் கிருதிகளை ஏன் அவ்வளவாகப் பாடுவதேயில்லை?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''பாஷை மட்டும் பாட்டாகி விடுமா? பாவம் என்று ஒன்று இருக்கிறதே! தீக்ஷிதரின் வீணைப் பாணி மெல்லின — வல்லினங்கள் நமக்கு வருமா, நாம் முறை தப்பிப் பாடி சாஹித்திய கர்த்தாவுக்கு அவப்பெயர் வாங்கி வைக்கக் கூடாதே என்பதால்தான் பாடுவதில்லை. அதோடு அவர் பாட்டுக்களில் மந்திர சாஸ்திர விஷயங்கள் நிறைய உண்டு. வெறும் பாஷா ஞானத்தினால் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாது. புரியாத ஒன்றைப் பாடும் வழக்கம் நமக்குக் கிடையாது'' என்றார்.

ஆதியில் வாழ்க்கையில் பட்ட அடிகளே அவரை வெற்றிப் பாதைக்கு உகப்பி விட்டன. ஆனால் காலப்போக்கில் உள்ளே பக்தி அரும்பி மலர மலர அவர் பட்ட புது அடிகள் அவரை வைராக்கியத்திற்கும் தியாகத்திற்கும் திருப்பி விட்டன.

சுதந்திர புருஷியாகத் தனித்தே வாழ்ந்த அவருக்குப் பிறந்த இரு மக்களும் சிறு வயதிலேயே மண்ணில் மட்கினர். இப்போது நாற்பதுக்கு மேல் சற்று வயது முதிர்ந்து விட்டதால் தன்னுடைய ஒன்று விட்ட சகோதரிக்குத் திருமணம் செய்வித்து, முறையாகக் குடித்தனம் அமர்த்தி அவர்களோடேயே தானும் இருக்கலாம்; அச் சகோதரியை சிஷ்யையாகவும் கொண்டு தனது இசைச் செல்வத்தை எதிர்காலத்திற்கு ஆக்கலாம் என்று அம்மையார் எண்ணினார். ஆனால் சகோதரி குடும்பம் வேறு விதமாக எண்ணியது. 'இசைச் செல்வம் எக்கேடு கெட்டுப் போகட்டும். பொருட் செல்வமாக எந்த வித்வானும் விதுஷியும் திரட்டாத அளவுக்கு இரண்டு லக்ஷத்துக்குச் சேர்த்திருக்கிறாளே, அதை எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவில் தண்டிக் கொள்ளலாம்' என்பதே அக் குடும்பத்தினரின் எண்ணமாயிருந்தது.

புத்திசாலினியான நாகரத்தினம்மாளுக்கு அது புரியாமலில்லை. அதிலிருந்தே உறவு முறைகளின் மாயையை ஓரளவு புரிந்து கொண்டு, வைராக்கிய சம்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொண்டு அவர்களுடனேயே பட்டும் படாமலும் வாழலானார். ஆனாலும் போகப் போக அவரிடம் செஞ்சோற்றுக் கடன்பட்டவர்களே பணப் பேராசையில் அவருக்குப் பிராணஹானி ஏற்படுத்த இருந்தார்களென்பதை அந்தப் புத்திசாலினி தானாகப் புரிந்து கொள்ளவில்லை. பின் யார் புரிவித்தாரென்றால் —

அவர் எவருடைய கிருதிகளைப் பாடிப் பாடிப் பாடி தன் இன்னுயிருக்கு மெருகேற்றிக் கொண்டிருந்தாரோ அக் கிருதிகளை அருளிய ஸத்குரு ஸ்ரீ தியாகப் பிரம்மம் தான்!

தியாகையர் 1921 அக்டோபரில் தமது கனவில் காட்சி தந்து தம்முடைய உயிருக்கு உலை வைக்கப்படுவதைத் தெளிவாக விளக்கி எச்சரித்துச் சென்றதை நாகரத்தினம்மாள் தம் உயிலிலேயே குறிப்பிட்டிருக்

எலுமிச்சைப் பழத்தைச் சாறு பிழிந்தபின் தோல்களை சேகரித்து நிழலில் காய வையுங்கள். நாலைந்து நாட்கள் வரை கெட்டியாய் காய்ந்ததும் சிறு துண்டாக உடையுங்கள். இதை மிக்ஸியில் போட்டுத் தூளாக்கிக் கொள்ளவும். முகம் கழுவுமுன் பத்து நிமிடம் முன் இப் பொடி சிறிதளவு எடுத்து பாலுடன் குழப்பி ஊறியபின் முகம் கழுவினால், பளிச்சென இருக்கும். சோப்புக்கு டாடா!

— எஸ். மஞ்சுளா.

கிறார்.

வீட்டை விட்டு ஏகாங்கியாக வாழ்ந்து வாழ்வை முடித்துக் கொள்ள எண்ணினார்.

ஆனால் அவரால் நடக்க வேண்டிய ஒரு சிகரப் பணி — அவருடைய உள்ளத்தைச் செம்மை செய்ததோடு உடலையும் ஆபத்பாந்தவாராகக் காத்த ஸத்குருவுக்கு உலகுள்ளளவும் போற்றுமாறு அவர் செய்ய வேண்டிய பணி — இருந்ததே! அதனால் அவர் ஏகாங்கியாக எங்கும் ஓடிவிட முடியவில்லை.

கனவு கண்டதற்கு மறுதினமே அவரது நடைமுறையுலக இசைக் குருவான பிடாரம் கிருஷ்ணப்பாவிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அவர் அண்மையில் ஐயாறு சென்றிருந்தாராம். அங்கே தியாகையர் ஸமாதியைத் தரிசிக்கப் போனாராம். அவ்விடமிருந்த அலங்கோலமும் அசுத்தமும் அவரை ரத்தக் கண்ணீர் வடிக்க வைத்துவிட்டதாம். 'இதற்கு விமோசனம் உண்டா என்று வேதனைப்பட்ட போது பளாரென உன் நினைவுதானம்மா வந்தது. உனக்கும், கர்நாடக சங்கீதம் என்ற பெயரைத் தந்துள்ள நம்முடைய கன்னட நாட்டுக்குமே பெருமை தேடித் தருவாய்' என்று எழுதியிருந்தார்.

அந்த குரு கனவில் வந்தது. இந்த குரு கடிதத்தின் வழி வந்து அந்த குருவுக்கான மகா திருப்பணியில் தம்மைத் திருப்புவது — நாகரத்தினம் ஆனந்தப் பரவசமே அடைந்து விட்டார்! என்ன நேர்ந்தாலும் நேரட்டும். தியாகையருக்கு அற்புதமான ஸமாதி ஆலயம் எழுப்பாமல் உயிரை விடுவதில்லை என்று அந்தக் கணமே சபதம் பூண்டார். "சபதம் செய்ய நான் யார்? ஸத்குரோ! தூண்டியவர் நீங்கள். மேலும் இயக்கி, இலக்கை அடைவிக்கச் செய்வதும் உங்கள் பரமே!" என்று தாழ்ந்து வேண்டவும் செய்தார். அன்றிரவே திருவையாற்றுக்குப் புறப்பட்டுச் சென்று, இடுகாட்டுச் சூழலில் இடிபாடுகளுக்கிடையே இருந்த சத்குரு சமாதியைக் கண்டு மனம் பதைத்தார்.

சோதனைகள் தோன்றித் தோன்றி மறைவதில்தானே பெரியோர்களின் புகழ்ச் சரிதையே உள்ளது? இப்போதும் சோதனை முளைத்தது. ஸமாதி நிலத்தின் உரிமையாளர்களிடமிருந்து அதைப் பெறுவது முடியாத காரியம் என்னுமாறு இடையூற்றுக்கு மேல் இடையூறாக வந்தது.

இந்த இடையூறுகளுக்கு இடிந்து போகாத அம்மையாரும் மனம் தளர்ந்துபோன ஒரு நாள் வந்தது. தஞ்சையில் அவரது கச்சேரி ஏற்பாடாகியிருந்தது. அதற்கு முன்போ, பின்போ அருகிலுள்ள ஐயாறு சென்று சமாதியைச் சேவித்துவிட்டு ஓர் அவசர காரியமாக பெங்களூர் போகத் திட்டமிட்டிருந்தார். துரதிர்ஷ்டவசமாக ஏதோ விக்கினங்கள் ஏற்பட்டுத் தஞ்சைக் கச்சேரிக்கு முன்னே, பின்னே இரண்டிலுமே ஐயாறு செல்ல முடியாமலாயிற்று. 'சமாதியைச் செப்பனிடத்தான் முடியாவிட்டாலும் அங்கே உடலைப் புரட்டிக் கும்பிடக் கூடவா பாக்கியமில்லாமற் போக வேண்டும்?' என்று மனம் தளர்ந்து தஞ்சை ரயில் நிலையச் சிற்றுண்டிச் சாலையில் அம்மையார் அமர்ந்திருந்தார்.

அப்போது அவரது தாய்மொழியான கன்னடத்தில் இன்பத் தேன் வந்து பாய்ந்தது அவர் காதினிலே — சிற்றுண்டிச் சாலை காண்டிராக்டரும் பூஸ்திதித் தரகராகத் தோன்றிய ஒருவரும் கன்னடத்தில் நடத்திய உரையாடலின் உருவத்தில்!

தியாகையர் சமாதி உள்ளிட்ட நிலப்பரப்பின் உரிமையாளர்களுக்கு ஏதோ முடையாம். வேறு நிலங்களை ஈடு செய்து கொடுத்தால் தங்கள் நிலத்தைக் கொடுத்து விடுவார்களாம். இந்தக் காண்டிராக்டர் வாங்க முன் வந்தால் தரகர் ரொம்பவும் லாபமாக முடித்துக் கொடுக்கத் தயாராம்.

"ஐயய்ய! அந்தச் சுடுகாட்டை யார் வாங்குவார்கள்?" என்று காண்டிராக்டர் தூக்கியெறிந்து பேசினார்.

எவரோ தூக்கி எறிந்தது போல் அவர்கள் முன் பாய்ந்தார் அம்மையார். "இதோ நான் வாங்குகிறேன்" என்று ஆர்ப்பரித்தார்.

அவ்வளவுதான்! பெங்களூரிலிருந்த அவசர காரியத்துக்குக் கைகழுவினார். சென்னை சென்று தாம் சேமித்திருந்த ஸ்தாவரஜங்கமச் சொத்துக்களில் உடனே விற்கக் கூடியதையெல்லாம் விற்று, ரொக்கக் கையிருப்பையும் அதோடு சேர்த்து சமாதி நிலத்தை வாங்கினார். அப்புறமும் சிறுகச் சிறுக மிச்ச சொச்சமில்லாமல் சொத்தையெல்லாம் பணமாக்கி சமாதியைப் புதுக்கினார். அதை ஓர் ஆலயமாகவே விரிவுபடுத்தியும் எழுப்பிவிட்டார்.

ஆசை ஆசையாக அவர் செய்து போட்டுக் கொண்டிருந்த ஓர் அரிய நகையைக் கூட அவர் விற்பனைக்காகக் கழற்றி எடுத்த போது, அவரோ, "அம்மா, இதையுமா விற்க வேண்டும்? உங்கள் ஞாபகார்த்தமாக இதொன்றையாவது விட்டு வைக்கக் கூடாதா?" என்றாராம்.

பளிச்சென்று அம்மையார் பதிலளித்தார். "இதுவும் அவர் போட்ட பிச்சை

கடலைப் பருப்பு வெல்லம் சேர்த்து பூரணம் தயாரித்து போளி தட்டுகிறோமல்லவா? வேறு மாதிரியும் பூரணம் தயாரிக்கலாம். தேங்காய்த் துருவல், உடைத்த கடலை, கசகசா, சர்க்கரை, இவற்றை சம அளவில் எடுத்து மிக்ஸியில் ஜஸ்ட் ஒரு சுற்று சுற்றி ஏலப் பொடி சேர்த்து உருண்டைகள் செய்து மாவினுள் வைத்துத் தட்டி தோசைக் கல்லில் போட்டு எடுக்கலாம். வித்தியாசமான டேஸ்ட்!

— தேன்மொழி.

தானே? அவருடைய ஞாபகார்த்தம்தான் எனக்கும் ஞாபகார்த்தம்.''

*1921* – லிருந்து *1925* வரை உடல் பொருள் ஆவி அனைத்தையும் அளித்து தியாகப் பிரம்ம சமாதிக் கோயிலை நிர்மாணித்துவிட்ட தியாக அன்னை கும்பாபிஷேக தினத்தன்று கற்கோயில் கொண்ட சற்குருவுக்குச் சொற்கோயிலும் எழுப்பிப் பூஜித்தார் – ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளுக்குத் தாமே அஷ்டோத்தர சத நாமாவளி இயற்றி அர்ச்சனை செய்தார். அன்று அவர் அடைந்த நிறைவுண்டே! ''இப்போதே உயிரை விடத் தயார்!'' என்றார்.

ஆனால் இறைவன் அவரை மேலும் இருபத்தேழாண்டுகள் உலகில் இருத்தி வைத்து அன்புக் காவியம், தொண்டுக் காவியம் விரித்தான்.

அந்த ஒரு பெண்மணி எத்தனை நற்பணிகள் செய்திருக்கிறார்? ஏழைகளுக்கு எத்தனையோ அன்னதானம். அந்தணாளர்களுக்குக் கணக்கில்லாத ஸந்தர்ப்பணைகள், கதியற்ற பல கன்யாப் பெண்களுக்குக் கலியாணம், கைம்பெண் விடுதிக்குக் கணிசமான நன்கொடை, முதல் உலகப் போர் நிதிக்குப் பெருத்த பொருளுதவி என்று அநேகம் அவரது உபயமாகும். மேல்கோட்டை (திருநாராயணபுரம்) பெருமானிடம் தனி ஈடுபாடு கொண்ட அவர் அங்கு செல்லும் யாத்திரிகர்களுக்காகச் சத்திரம் கட்டியிருக்கிறார். பெருமானின் வைரமுடி உத்ஸவத்திற்கு வாரி வழங்கியிருக்கிறார். தியாகையர் ஒரு பஞ்சரத்தினமே பாடியுள்ள திருவொற்றியூர் திரிபுரசுந்தரி சேவைக்கென ஒரு கற்பூர விநியோகக் கடையை அர்ப்பணித்தார். சமய விஷயங்களில் சாஸ்த்ர சம்பிரதாயப் பற்றுக் கொண்டவராயினும் பரந்த சமரஸ நோக்கும் படைத்தவராதலால் அடையாறு பிரம்மஞான சபைக்குத் திரவிய உதவி நல்கியிருக்கிறார். ஜாலியன்வாலா படுகொலைக்கு ஆளானோரின் குடும்ப க்ஷேமநிதிக்கு அன்று அவர் அளித்த ரூ. 800 இன்று எத்தனையோ ஆயிரத்திற்குச் சமானம்!

குரு முனுசாமியப்பா, அன்னை புட்டு லக்ஷ்மி ஆகியோரிடம் அவர் கொண்டிருந்த நன்றிக் கடன் சொல்லி முடியாது. ஆண்டுதோறும் வெகுசிறப்பாக குருபூஜை நிகழ்த்தினார். அன்னையின் பெயரில் பல வருஷம் பெங்களூர் ராமர் கோயிலில் பிரம்மோத்ஸவம் நடத்தியவர் பிற்பாடு இப்பணியைச் சென்னை டவுனில் தாத்தா முத்தியப்பன் தெருவிலுள்ள ஹனுமார் கோயிலுக்கு மாற்றிப் பெருவிழாவாக நடத்தி வந்தார்.

எழுபத்து மூன்று பிராயமாயிற்று. பரமபதத்துக்கு எழும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்து, அப்பர் கைலாஸக் காட்சி கண்ட ஐயாற்றிலேயே ஆசான் சமாதிக்கருகில் வாசம் செய்து வந்தார். ஒரு காலத்தில் உணர்ச்சி மயமாகக் கொந்தளித்தவர் இப்போது சாந்தத்தில் தோய்ந்து சந்தனமாக மணந்தார். தன்னிடம் பரமத் துவேஷம் பாராட்டியவர்களைப் பற்றிக் கூட அனுதாபத்துடன் கதை சொன்னார். தன்னிடமிருந்தே தான் விலகி நிற்கும் பெரும் தியாகியாகி விட்டாரென்று அர்த்தம்.

தியாகையர் கனவில் பிரஸன்னமானார். ''ஸ்ரீராமன் மீண்டும் பூவுலகு வந்திருக்கிறான். தன்னுடைய சஞ்சாரத்தில் வேங்கடகிரிக்குச் சொல்லவிருக்கிறான். விவரமே தெரிந்து கொண்டு அங்கு போய் அருள் பெறுவாயாக!'' என்று கூறி மறைந்தார்.

பேரார்வப் பெருக்கோடு அம்மையார் வேங்கடகிரிமஹாராஜாவுக்குவிவரம்கேட்டு எழுதினார். அடுத்து வரும் கிருஷ்ண ஜயந்தியன்று பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா வேங்கடகிரிக்கு வருவதாகவும் அதைத்தான் தியாகராஜர் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் மகாராஜா பதில் எழுதினார்.

அப்போது அதாவது *1951* – இல் பாபாவுக்கு வயது இருபத்தைந்துதான். ஏதோ சித்து விளையாடுபவர் என்றே 'அறிவாளி'களின் உலகம் பெரும்பாலும் கருதிய காலம். நம் அம்மையார் சித்துக்களை அறவே விலக்கி ஸித்தியையே எதிர்பார்த்திருந்த சமயம் அது. ஆம், எங்கே, எப்படி, எவரிடமிருந்து சம்பாதித்தாரென்று தெரியாததாக அம்மையாருக்கே சில சித்துச் சக்திகள் இருந்திருக்கின்றன. வெள்ளிப் பூண் போட்ட (மந்திர?) கோல் ஒன்று அவரிடம் உண்டு. அதை ஏந்தி வந்து வாசலில் நின்றாரானால் உடனே வானில் கருட பக்ஷிகள் தோன்றி வலம் வரும்! அவரிடம் ஒரு ஸ்படிக லிங்கம் இருந்தது. அதற்கு இளநீர் அபிஷேகம் செய்து அவர் மழை வருவித்ததுண்டு என்று வீணை தனம்மாளின் பேரரான பேராசிரியர் த. சங்கரன் தெரிவிக்கிறார். ஆனால்

---

50 கிராம் சுக்கைப் பொடி செய்து, சலித்து நைசான பவுடரில் சம அளவு வெல்லத்தையும் பொடி செய்து கலந்து பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக்கி வைத்துக்கொண்டு, தினம் ஒரு உருண்டை சாப்பிட்டு வந்தால் வாயுத் தொல்லை, அஜீரணம் அறவே நீங்கி விடும். இந்தச் சுக்கு (லேகியம்) உருண்டை மிகவும் மணமாகவும், சுவையாகவும், இனிப்பாகவும் இருக்கும். சிறுவர்கள் கூட விரும்பிச் சாப்பிடுவார்கள். இதை தினம் சாப்பிட்டால் நன்கு பசியெடுக்கும். எந்த டானிக்கும் தேவையில்லை. சளி, ஆஸ்துமாவிற்கும் சுக்கு மிகவும் பயன் தரும்.

மொத்தத்தில் சுக்கிற்கு மிஞ்சிய மருந்தும் இல்லை. சுப்பிரமணியத்திற்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை என்ற பழமொழிக்கு ஏற்ப சுக்கு பல வழிகளிலும் பயன் தருகிறது.


— பாலா.

---


"நான் மெச்சறது இவங்களோட சிக்னல் பல்-பலம்,
இவங்க மெச்சறதோ சிக்னல் ருசிமணம்!"
"சிக்னல் — பல் சிதைவை எதிர்த்து, என் குழந்தைகளோட பல்லுகளை வலுவா ஆரோக்கியமா வெச்சிருக்கு. டூத்பேஸ்ட்டோட அலாதியான சிகப்பு வரிகளே அடையாளம்: நிகரில்லாத அந்த ஃப்ளூரைடு பாதுகாப்புக்கு.
பாருங்களேன், நான் ஞாபகப்படுத்தாமலே வேளாவேளை பல்தேய்க்க வராங்கன்னா அதுக்குக் காரணம்: சிக்னலோட வளப்பமான பெப்பர்மிண்ட் ருசிமணம் — குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை!"
இலவசம்
டூத்பிரஷ்: இவ்வித 200 கிராம் பேக் வாங்கும்போது.
Signal
சிக்னல்
டூத்பேஸ்ட்
ஆயுட்காலம் பற்களுக்கு பலம், ஆரோக்கிய நலம்.
முந்துங்கள்! சரக்குகள் இருப்பிலுள்ள வரையே சலுகை. இச்சலுகை இல்லாமலேயும் வாங்கக் கிடைக்கிறது சிக்னல்.
LINTAS SGF 65 2213 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# என் கணவருக்கு கை

# எனக்கும் கைனெடிக்




● சைட் ஸ்டேண்ட்
உதவியால் சுலபமாகவு
உறுதியாகவும் நிறுத்தி வைக்க முடியும்
● கைகளினால் ப்ரேக் இயக்கப்படுவதால்
சேலைக்கட்டி ஓட்டும் மாதருக்கு சவுகரியமானது
● ஆட்டோமாடிக் டிரான்ஸ்மிஷன் நெருக்கடியான
போக்குவரத்தில் சுகமான சவாரி. ● புஷ்பட்டன்
ஸ்டார்ட்டர் இருப்பதால் கிக் ஸ்டார்ட்டர் பயன் படுத்த
வேண்டியதில்லை. ● கண்கவரும் வண்ணத்தில் (சிகப்பு, நீலம்.
சில்வர் கிரே, கறுப்பு, மற்றும் வெள்ளை). ● சுலபத்தவணைகளில் குறைந்த
வட்டியில் பைனான்ஸ் ஏற்பாடு செய்து தரப்படும்.

# னடிக் ஹோண்டா!

# ஹோண்டா!

## ஏன் உங்கள் ஐவ்வொருவருக்கும் கூட.



ஆமா ! அவர் ஆபிஸ் போவதற்கு முன் என் குழந்தைகளை ஸ்கூலில் கொண்டு விடுவேன். பிறகு மாலையில் ஷாப்பிங் போவதும் கைனெடிக் ஹோண்டாவில் தான்.

எனது தங்கை கூட முன்னெயெல்லாம் மொபெட்டில் தான் ஆபிஸிக்கு போவா. ஆனா நான் இத்தனை சுலபமா கைனெடிக் ஹோண்டா ஓட்டுவதைப் பார்த்துட்டு, அவளும் கைனெடிக் ஹோண்டாவை வாங்கிட்டா.

டீலர்

**N. மகாலிங்கம் & கோ.,**
468, Dr. நஞ்சப்பா ரோடு
கோயமுத்தூர்-641 018.
Ph: 25595/25596

**சக்தி ஆட்டோமொபைல்ஸ்**
132, பெருந்துறை ரோடு
(கே.பி.கே. பம்ப் எதிரே)
ஈரோடு - 638 011. Ph: 75698.

Adwise/1791/89

பிற்பாடு தியாகையரின் பதத்தில் பதிவதே கதி என்று அவர் தெளிந்தபின், ''பதவி நீ ஸத்பக்தி'' என்ற பாடலில் சத்குரு சொன்ன படி 'சித்துக்கள் மூலம் உலகை உலைத்துப் பெறும் உயர்வும் ஓர் உயர்வா?' என்ற உறுதியைப் பெற்று, தமக்கு ஓர் அற்புத ஆற்றலும் வேண்டாமென உதறினார். வெள்ளிப் பூண் தடியையும் ஸ்படிக லிங்கத்தையும் குரு சமாதியிலேயே வைத்து விட்டார். அப்படிப்பட்டவர் இப்போது அந்தக் குருவின் ஸ்வப்பன ஆக்ஞை என்றவுடன் எந்த எதிர்க் கேள்வியும் எழுப்பாமல் வேங்கடகிரிக்கு விரைந்தார்.

பாபா தரிசனத்தில் அம்மையார் தனது இஷ்டதெய்வமாகிய தியாகையரின் இஷ்டதெய்வமான ராமனைக் கண்டு களித்தார். ராமாவதாரனைக் கிருஷ்ண ஜயந்தியில் காணுமாறு ஸத்குரு பணித்தது ஏன் என்பதற்கும் பாபாவின் லீலைகளில் — தியாகையரின் கிருதிகளைக் கொண்டே — விடை கண்டு உவகையுற்றார். கண்ணனையே குறிப்பிடுவது போல ராமனைத் தியாகையர் ''அதிலாவண்யராமா,'' ''எந்து கௌகலிந்துரா?'', ''ஏமனி மாட்லாடிதிவோ?'' ஆகிய பாடல்களில் வர்ணித்திருக்கிறார் — ''உன் மனசு, உன் சொகஸு, உன் தினுஸே தனி தானப்பா!'', ''உன் பேச்சே பேச்சையா, உன் குலுக்கே குலுக்கையா, உன் தளுக்கே தளுக்கையா!'', ''ஒவ்வொருத்தர் மனத்துக்கும் எப்படி உவக்குமோ அப்படி எப்படித் தான் பேசுகிறாயோ?'' என்றெல்லாம் அவர் வர்ணித்திருப்பதை அம்மையார் ஸாயிராமனிடம், அல்லது ஸாயி கிருஷ்ணனிடம் எழுத்துக்கெழுத்து கண்டு ஆனந்தித்தார். தள்ளாத வயதில் முழுசாக இரண்டு மணி நேரம் பாபாவின் முன் தியாகராஜ கிருதிகளைத் தேன் மடையாகப் பெருக்கி உள்ளம் உருக்கினார்.


பாபா அவருக்கு ஸ்ரீராம விக்கிரஹம் தந்தார். அதைப் பெற்றுக் கொண்ட நாகரத்தினம் 24 மணி நேரத்திக்கு மேல் பாவ பரவசத்தில் மெய்ம்மறந்திருந்தார்.

''இரண்டு வரம் தரவேண்டும் ஸ்வாமி! சாந்தமாகக் கண்மூட வேண்டும். கண் மூடும் காலம் வரையில் நாம ஸ்மரணையில் இருக்க வேண்டும்'' என்று பாபாவிடம் பிரார்த்தித்தார்.

''நிச்சயம் அப்படியே ஆகும்'' என்றார் வரதர்.

அப்படியே, ஓராண்டுக்குள், 1952 மே மாதம், வைசாக பகுள ஏகாதசிப் புண்ணிய திதியில் நாகரத்தினம் நாதப் பிரும்மத்தில் ஐக்கியமானார். ராக சுதா ரஸ பானம் தியாக பலனை அளிக்கும், ஜீவன் முக்தியும் அளிக்கும் என்ற தியாகையர் வாக்கை மெய்ப்பித்த பக்த ரத்தினத்தின் சமாதி அவர் எழுப்பிய ஆலயத்திலேயே நந்தி பீடம் போல விளங்குகிறது.

— 'கன்யா'




உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெது வெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது. முன்னைவிட அதிக ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex®
CEREAL WITH MILK
• சுவை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
ஃபாரெக்ஸ்®-
சுவையுடன் வளரும் வழி.
GX/66/213 TML

"தையல் சொல் கேளேல்'' அப்படீன்னா என்ன அர்த்தம்ப்பா?" என்று என்னருகே வந்து நின்றான் என் மகன் சதீஷ். கையில் தமிழ்ப் புத்தகம்.

என்னிடமிருந்த செய்தித்தாளை மடித்து பக்கத்திலிருந்த ஸ்டூல் மீது வைத்து விட்டு அவனை அருகே இழுத்து மடியில் அமர்த்தினேன். ''என்னப்பா கேட்டே?'' என்றேன். முதலில் அவன் கேட்டதைக் கவனிக்காதவன் மாதிரி.

அவன் மீண்டும் கேட்டான்.

''உங்கம்மாகிட்டே கேட்க வேண்டியது தானே?'' என்றேன் அவனைப் பார்த்து புன்னகைத்தபடியே. காப்பி தம்ளருக்காக அங்கேதான் நின்று கொண்டிருந்தாள் சாவித்திரி. என் புன்னகைக்கு நொடித்துக் கொண்டாள்.

''நீ சொல்லுப்பா'' என்றான் சதீஷ் பொறுமை இழந்தவனாக.

''தையல்னா பெண். தையல் சொல் கேளேல்னா பொம்பளை பேச்சைக் கேட்காதேன்னு அர்த்தம்.''

''ஏம்ப்பா?''

''பொம்பளை பேச்சைக் கேட்டு எவன் உருப்பட்டிருக்கான், சொல்லு'' என்றேன்.

சதீஷ் புரியாமல் விழித்தான்.

''உதாரணமா போன மாசம் எங்க ஆபீஸ்ல அஸாம் கிளைக்கு மாற்றலாகிப் போக வில்லிங்னஸ் கேட்டாங்க. நான் கொடுக்கலாம்னு நினைச்சேன். உங்கம்மா வேணாம்னு சொன்னா. நானும் கொடுக்கலை. வேற மூணு பேர் கொடுத்தாங்க. அவனுகளைத் தடுக்க பெண்டாட்டிகள் இல்லை. பிரம்மச்சாரிகள். இப்போ பாரு அவங்க மூணு பேரையும் அஸாம் போன உடனேயே ரஷ்யாவுக்கு ஒரு வருஷ டிரெயினிங்ல அனுப்பறாங்க இம்னு. பொம்பளை பேச்சைக் கேட்டதனால எனக்கு ஃபாரின் சான்ஸ் போச்சு பார்த்ியா, அதான்'' என்றேன்.

# தையல் சொல் கேளேல்!



சதீஷுக்குப் பாதி புரிந்ததும் புரியாமலு மாய் எழுந்தான். நான் சாவித்திரியைப் பார்க்க அவள் சதீஷிடம் திரும்பி, ''அதை எழுதினது யாருடா?'' என்றாள்.

''ஔவையார்ம்மா''

''.அவளும் பொம்பளைதானே?''

'' ;; ''


''தையல் சொல் கேளேல்னா ஔவை யார் சொன்னதையும் கேட்கக் கூடா துல்லே?'' என்று சொல்லி விட்டு காலி தம்ளரை எடுத்துக் கொண்டு விருட்டென்று வீட்டினுள் சென்று விட்டாள்.

சதீஷ் குழம்பிப் போய் என்னிடம் திரும்புவதற்குள் நான் வேகமாக குளிக்க எழுந்தேன்.

குளித்து சாப்பிட்டு விட்டு கிளம்பும் போது கூட என் பிரமிப்பு என்னை விட வில்லை. கிளம்பும் முன் கேட்டேன், ''சாவித்திரி என்ன ஒரு மூளை உனக்கு? ஒரே கேள்வியில் கருட்டிட்டியே!''

செல்லமாய் நொடித்துக் கொண்டாள்.

''சாயங்காலம் தரகர் அந்தப் பையனைக் கூட்டிட்டு வர்றேன்னு சொல்லியிருக்கார்.



லதாவைத் தயார்ப்படுத்தி வை'' என்று கூறி விட்டு கிளம்பினேன்.

லதா என் தங்கை. செப்புச் சிலை மாதிரி இருந்தும் திருமணம் மட்டும் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. ஜாதகத்தில் ஏதோ கோளாறாம். என்ன கழுதை நட்சத்திரமோ இவள் போனதும் மாமனார் அல்லது மாமியாரை அடிச்சிருமாம். அதற்குப் பயந்து கொண்டே மாப்பிள்ளை வீட்டார் ஒதுங்கிக் கொண்டிருந்தார்கள்.

அதிர்ஷ்டவசமாக தரகர் இப்போது கூப்பிட்டு வருவதாகச் சொன்ன மாப்பிள்ளை ரவிக்குத் தாய் தகப்பன் கிடையாதாம்.

''அப்பா சின்ன வயசிலேயே போய் விட்டார். அம்மா நாலு வருஷத்துக்கு முன்னால். ஏழை பாழையா இருந்தோம் அதனால சொந்தக்காரங்க எல்லாம் ஒதுங்கிக்கிட்டாங்க. நானா உழைச்சேன். பெரிய படிப்புன்னு கிடையாது. அதனால சொந்தத் தொழில் மாதிரி சின்ன மெக்கானிக் ஷாப் வச்சிருக்கேன். மாசம் இரண்டாயிரத்துக்குக் குறைவில்லாமல் வருது. ஒரு விஷயம் சொல்லிக்கிறதுக்கு எனக்கே கஷ்டமாத்தான் இருக்கு. எனக்குக் கல்யாணம்னு வச்சாக் கூட என் சொந்தக்காரங்க யாரையும் கூப்பிட எனக்கு இஷ்டமில்லை. பணம், நகை டிமாண்ட் பண்ணலை. சிம்பிளா கோவில்ல முடிச்சு விட்டாக் கூட போதும்.''

பையன் மாநிறமா கொஞ்சம் லட்சணமா இருந்தான். அவன் பேச்சு வெளிப்படையாக உண்மையாக இருந்தது எனக்குப் பிடித்தது. சொந்தக் காலில் நிற்பவன் தன்னம்பிக்கை மிகுந்தவன் நிச்சயமாய் இவன் எதிர்காலம் நன்றாக இருக்கும்.

தரகரை அனுப்பி விட்டுத் திரும்பினேன்.

''லதா! பையன் எப்படி?''

''உங்க இஷ்டம்ணா'' என்று உள்ளே சென்று விட்டாள்.

''சாவித்திரி! நீ என்ன சொல்ற?''

''எனக்கென்னவோ இந்த இடம் வேண்டாமென்னு தோணுது'' என்றாள்.

திடுக்கிட்டேன். ''ஏன்?''

''உறவுக்காரங்க இல்லாத பையன்னா எப்படியோ என்னவோ. வேண்டாங்க.''

''பையன்கிட்ட குறை கண்டியா?''

''இல்லை.''

''அசிங்கமா இருக்கானா?''

''சேச்சே!''

''சம்பாத்தியம் குறைவா?''

''அப்படி இல்லை.''

சிரித்தேன். ''அப்ப விடு. பாவம்! தானா உழைச்சு முன்னுக்கு வந்திட்டிருக்கான். அவனுக்கு லதா மாதிரி பொண்ணு அமைஞ்சா எவ்வளவு விடுவிடுன்னு பெரிய ஆள் ஆயிருவான் தெரியுமா?''

''வந்து...''

''சினிமாப் படம் ஆயிரம் பார்க்கற. விஷயத்தை எடுத்துக்க மாட்டேங்கறியே. அனாதைங்கற ஒரே காரணத்துக்காக ஒதுக்கறது நல்லதாப் படலை. சொல்லப் போனா நமக்கு நல்லது. நம்ம வீட்டுப் பிள்ளையா இருப்பான். லதாவுக்கு பிரச்னை கிடையாது. நகை நட்டு டிமாண்ட் பண்ணலை...'' என்றேன். கடைசி வாக்கியம் சொல்லும்போதே கூசியது. உள்ளுக்குள் குத்தியது. அந்த ஒரு காரணத்தினால் தான் இந்த இடம் நல்ல இடமாய் எனக்குப் பட்டதோ?

சேச்சே! தலையைச் சிலிர்த்துக் கொண்டேன். என் தங்கைக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப் போகிறேன்.

''என்ன ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறே?'' என்றேன் சாவித்திரியிடம்.

''உங்க இஷ்டம்'' என்றபடி உள்ளே போய் விட்டாள்.

மறுநாள் காலை லதா என்னிடம், ''அண்ணா! என் கல்யாணத்துக்கு இப்போ என்ன அவசரம்?'' என்று ஆரம்பித்தாள்.

நான் என்ன மடையனா? இதற்கு அர்த்தம் புரியாதா என்ன. நேற்று உங்க இஷ்டம்ணா என்று நாணியவள் இன்று இப்படிப் பேசுகிறாள்னா இந்த இடம் வேண்டாம் என்றுதானே! நேற்று இரவு லதாவின் ரூமில்தான் சாவித்திரி தூங்கினாள். விளைவு?

எனக்குள் கருகருவென்று கோபம் பொங்கியது.

''இந்தப் பொம்பளைங்க பேச்சையெல்லாம் கேட்டுட்டிருந்தா பைத்தியம் பிடிச்சு அலைய வேண்டியதுதான். எனக்குத் தெரியும் எது அவசரம் எது நடக்கணும்னு. புரியுதா?'' என்று பாதி சாப்பாட்டில் எழுந்து கிளம்பினேன்.

சாவித்திரி எதுவுமே பேசாமல் டிபன் பாக்ஸை எடுத்து நீட்டியது எரிச்சலை மீண்டும் கிளறி விட்டது.

''எல்லாம் உன் வேலைதானா?''

''சரியாப் போச்சு. இந்த வீட்டில் எது விடிஞ்சாலும் சாவித்திரி தலையில்தானா? அவள்தான் நேற்று ராத்திரியெல்லாம் புலம்பிக்கிட்டிருந்தா?''

''ஏன்? எவனையாவது நேசிக்கிறாளா?''

''சேச்சே! நம்ம பொண்ணைப் பத்தி உங்களுக்கே இப்படி ஒரு அபிப்ராயமா? வாயைக் கழுவுங்க.''

முகத்திலடித்தாற்போல் இருந்தது.

---

''பாட்டி, பிள்ளையார் மேல் போட்டிருக்கும் பூ வாடாமலேயிருக்கே'' என்று விநாயக சதுர்த்திக்கு மறுநாள், புனர்பூஜையின் போது என் 3 வயது பேத்தி ஸௌம்யா காண்பித்தாள். நாங்கள் ஆச்சரியப்பட்டோம்.

ஒரு தட்டில் தனியாக மணல் வைத்துப் பறித்து வைத்த பூ, காய்கறிகளை, ஈர மணல் படும்படி வைத்திருந்தால் இரண்டு நாட்கள் வரை வாடாமலிருக்கிறது.

— எஸ். பாக்கியம்.

• உலகெங்கிலும் பேராதரவு பெற்ற
இந்தியாவின் நம்பர் 1 தையல் இயந்திரம்

# வேறெவராலும் உங்களுக்கு ஓர் உறுதியான இயந்திரத்தை அளிக்க முடியாது.



உலகத் தரம் வாய்ந்த பல்வேறு இயக்க அம்சங்கள் உஷா தையல் இயந்திரங்களில் தைப்பதை மிகவும் வசதியானதாகவும், மிகவும் எளிதானதாகவும் செயல்பட செய்கிறது. ஏன் இது இந்தியாவின் நம்பர் 1 ஆகத் திகழ்கிறதென்றும் பெருமளவில் மற்ற நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்றும காரணத்தை அறிந்து கொள்ளுங்கள்.

**இந்தியாவில் உங்களுக்களிக்கும் உஷா தையல் இயந்திரங்களின் சிறப்பம்சங்கள்.**

உறுதியான, எஃகினாலான ஆறு முக்கிய பாகங்கள் இணையற்ற தேய்மானம் ஏதுமின்றி வருடக் கணக்காக நீடித்துழைக்க வழி செய்கிறது. சர்வதேச மார்க்கெட்டிலும் இணையற்ற அம்சமாகத் திகழ்கிறது.

3-பாயின்ட் டிரஸ் செலக்டர், ஒரு குமிழைத் திருப்புவதன் மூலம பருத்தியிலிருந்து பட்டு வரையிலும் மற்றும் சித்திர வேலை செய்விக்கவும் தையல் நிலையை மாற்றுகிறது. இந்த விசை மற்ற ரகங்களில் இருப்பதில்லை.

- தானாகவே இயங்கும் தன்மையுடைய ஒன்றை அழுத்த பிரஷர் அட்ஜஸ்ட்டர்.
- இவைகளே இந்தப் படத்தில் காட்டியிருக்கும் உஷாவின் ''பிரைமா எக்ஸ்போர்ட்''டின் பிரத்தியேக அம்சங்கள்.
- மற்ற உஷா மாடல்களிலும் இந்த அம்சங்களில் அநேகம் அடங்கியுள்ளன.

**உஷாவின் இதர மனம் கவர் அம்சங்கள்**

- சிறந்த வகை ஷட்டில் (4 உஷா மாடல்களில்) புதிதாகக் கற்றுக் கொள்பவர்களும் ஒரு நிமிடத்திற்கும் குறைவான நேரத்தில் ஷட்டிலை சுத்தப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது.
- உட்புறம் மூடிய நீடில் பார் தூசி படிவதைத் தடுத்து தேய்மானத்தையும் பெரிதும் குறைக்கிறது.
- நாங்கள் உங்கள்மேல் அக்கறை கொண்டுள்ளோம். எனவேதான் நாங்கள் உஷா தையல் இயந்திரங்களை ஏற்றுமதி செய்யும் அமெரிக்கா, யூ.கே., மேற்கு ஜெர்மனி, மற்றும் இதர நாடுகளின் உயரிய தரக் கட்டுப்பாட்டுக்கு இசைவான அம்சங்களை நீண்டகால ஆராய்ச்சியால் தயாரித்து உங்களுக்கு அளித்துள்ளோம்.

**உஷா**

உறுதியான எஃகு பாகங்கள் உறுதியாக நீடித்துழைப்பதற்கு

''லதா, என் கொழுந்தியாளாக்கும்!''

''பார்றா! பொம்பளைங்க கூட்டணியா? விளங்கினாப்லதான். நான் வர்றேன்.''

''அவள் சொன்னது...'' என்று வாசலருகில் இழுத்தாள் சாவித்திரி.

''தையல் சொல் கேளேல்'' என்று கூறி விட்டுக் கிளம்பினேன்.

"உங்ககிட்டே சொல்றதுக்கும் பயமா இருக்கு. சொல்லாம இருக்கவும் முடியலை" என்று முணுமுணுத்தாள் சாவித்திரி இரண்டு நாட்களுக்கப்புறம் ஒரு நாள் மாலையில் காப்பி தம்ளரை நீட்டியபடியே.

''சொல்லு.''

''மாமாவுக்கு உடம்பு முடியாமல் நடராஜ் நர்ஸிங்ஹோம்ல அட்மிட் பண்ணியிருக்காங்க. நீங்க ஒரு நடை போய் பார்த்துட்டு வந்தால் நல்லா இருக்கும். பெரிய மனுஷன்...''

''இதைச் சொல்றதுக்கு பயம் என்ன?''

''உங்களுக்குத்தான் புதுசா பொம்பளை பேச்சை கேட்கறதில்லைன்னு ஞானோதயம் வந்திருக்கே.''

''ஹா... ஹா'' என்று சிரித்தேன். ''இனி மேல் உருப்படப் போறேன்னு அர்த்தம்...''

நொடித்துக் கொண்டாள்.

''சரி. நான் நர்ஸிங்ஹோம் கிளம்பறேன். தரகர் வந்தாரா?''

''இல்லை.''

''வந்தார்னா நாளைக்கு வரச் சொல்லு.''

''சரி''

''ஏன் விட்டேத்தியா சொல்றே?''

''எப்படிச் சொல்லணும்?''

''சாவித்திரி! இந்த இடம் நிஜமாவே உனக்குப் பிடிக்கலையா?''

''லதாவுக்குப் பிடிக்கலை.''

எனக்கு எரிச்சல் வந்தது.

''உனக்குப் பிடிக்கலைன்னு சொல்லு. அதென்ன லதாவுக்குப் பிடிக்கலை. விவரமான பொம்பளை நீ. நான் அஸாம் போறதையும் இப்படித்தான் கெடுத்தே. உனக்குப் பிடிக்கலைன்னா சொன்னே? என்னவோ எனக்கு நல்லதில்லைன்னு கவலைப்படற மாதிரியில்லே உருகினே? முதல் தடவைதான் ஏமாந்திட்டேன். இந்த முறை ஏமார்றதா இல்லை.''

''சரி ஏமாற வேண்டாம்'' என்று உள்ளே சென்று விட்டாள்.

சே! என்ன பெண் இவள்!

ஆஸ்பத்திரியில் சாவித்திரியின் மாமா (எனக்கு தூரத்து உறவில் பெரியப்பா ஆகணும்) ஓ'வென்று அழுதார்.

''அழாதீங்க... என்ன அழுகை?'' என்று தேற்றினேன்.

''பயமா இருக்குடா. டாக்டர் ஒண்ணும் சொல்ல மாட்டேங்கறார்.''

''இருங்க. நானே வேணும்னா டாக்டர் கிட்ட பேசிப் பார்க்கறேன்'' என்று எழுந்து டாக்டர் ரூமுக்குப் போனேன்.

நான் வராண்டாவில் நடக்கும் போது ரவி டாக்டர் ரூமில் இருந்து வெளிப்பட்டுச் செல்வது தெரிந்தது.

அட! இவனுக்கு இங்கென்ன வேலை?

டாக்டரின் எதிரே சென்று உட்கார்ந்த பேரது பெரியப்பா மறந்து போனார். ரவியைப் பற்றி விசாரித்தேன்.

டாக்டர் வியப்பாய் பார்த்தார்.

''சொல்லுங்க டாக்டர்! அந்தப் பையனைத்தான் என் சிஸ்டருக்குப் பார்த்திருக்கேன்.''

டாக்டரின் பதில் அதிர வைத்தது. பையன் நடத்தை கெட்டவனாம். அடிக்கடி கண்ட கண்ட பெண்களிடமும் போய் வியாதி பிடித்துக் கொண்டு இவரிடம் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்பவனாம்.

கடவுளே!

எனக்கு வியர்த்துக் கொட்டியது.

அங்கிருந்து அப்படியே எழுந்து வீட்டுக்குக் கிளம்பினேன். சாவித்திரி! உனக்கு நன்றி சொல்லணும் சாவித்திரி! நீதானே என்னை ஆஸ்பிடலுக்கு அனுப்பி வைத்தாய். வந்ததால்தானே இந்த விஷயம் தெரிய வந்தது!

சாவித்திரியிடம் பதற்றமாய் அவ்வளவும் சொல்லி முடித்தேன். அவள் கைகளை நன்றியுடன் பிடித்து முத்தமிட்டேன்.

சிரித்தாள். ''இதுக்கே இவ்வளவு சொல்றீங்கன்னா, இப்போ இன்னொரு விஷயம் சொல்லப் போறேன். அப்போ என்ன ஆவீங்கன்னே தெரியலை'' என்றாள்.

''என்ன விஷயம் சொல்லு'' என்றேன் ஆவலாய்.

''நீங்க போன கொஞ்ச நேரத்தில் உங்க ஆபீஸ் ஃபிரண்டு நாணு வந்தார். அஸாம்க்கு மாற்றலாகிப் போனாங்களே உங்க ஆபீஸ்ல இருந்து மூணு பேர். ஒரு கலவரத்தில் மாட்டிக்கிட்டு இப்போ சாகப் போழைக்க கிடக்கறாங்களாம். நீங்க நல்ல வேளையா தப்பிச்சீங்கன்னு சொல்லிட்டுப் போக வந்தாராம்.''

வாயடைத்து நின்றேன்.

''இப்போ புரியுதா? சும்மா, பொம்பளை பேச்சைக் கேட்க மாட்டேன். அது இதுன்னு வீராப்பு பண்ணிட்டு திரியக் கூடாது. ஓ.கே?'' என்று சிரித்தாள் கொஞ்சம் கர்வத்துடன்.

''சரி. என்கிட்டே சொல்லிட்ட. ஆனா ஔவையாரே சொல்லியிருக்காளே'' என்றேன் கொஞ்சம் இளக்காரமாக.

''தையல் சொல் கேளேல்னா கேட்காதேன்னு அர்த்தமில்லை. தையல் சொல் கேள் ஏல். அதாவது பொம்பளை பேச்சை பொறுமையா கேட்டு ஏற்றுக் கொள்ளு அர்த்தம். புரியுதா?'' என்று என் கன்னத்தில் தட்டி விட்டு உள்ளே சென்று விட்டாள் சாவித்திரி.

அட!

கலையின் மீது கொண்ட ஆர்வத்தின் காரணமாகத் தங்கள் வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொண்ட பெண்மணிகளைப் பற்றிய கட்டுரைத் தொடர்.

''என்னைக் கல்யாணம் செய்து கொள்பவர் என்னை ஆடவிட மாட்டாரோ என்று எனக்குப் பயமேற்பட்டது. என்னால் சலங்கை கட்டிக் கொள்ளாமல் இருக்க முடியுமென்று தோன்றவில்லை. 'இவர் என் மீது பாசம் கொண்டிருக்கிறார் — என் பரதத்தினை நேசிக்கிறார். இவரையே திருமணம் செய்து கொண்டாலென்ன?' என்ற எண்ணம் எனக்கு எழுந்தது.''

# கலையே என் வாழ்க்கையின் திசை மாற்றினாய்!



அந்தச் சிறுமிக்கு எட்டு வயதிருக்கும். பெயர் சரோஜா. தாயை இழந்து விட்ட அவள் தன் தந்தையுடன் திருவொற்றியூரில் வசித்து வந்தாள். மற்ற நேரத்தில் என்ன செய்தாலும், சாயந்திரம் ஒரு குறிப்பிட்ட வேளையில் எதிர் வீட்டிலேயே அவள் செவிகளும், சிந்தனையும் இருக்கும். அந்த வீட்டில்தான் ஒரு பெண்ணுக்கு பூபாலன் என்பவர் (சுவர்ணமுகி, உஷா ராஜேந்தர் ஆகியோரின் அப்பா) நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். சரோஜாவின் ஆர்வத்தை அறிந்து கொண்ட அவள் அப்பா அவளும் அந்த ஆசிரியரிடமே நடனம் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

முதல் நாள் தன் வீட்டுக்கு நடன ஆசிரியர் வந்த போது சரோஜா கூறியது. 'சார், இன்னிக்கு டான்ஸ் வேண்டாமே.' காரணம் அவள் உடல் முழுவதும் வேனல் கட்டிகள். ''பரவாயில்லே. நல்ல நாள். ஆரம்பிச்சுடலாம்'' என்று அப்பா சொல்ல, பயிற்சி ஆரம்பமானது.

''அன்னிக்கு உடம்பு வலியோடு ஆடினேன். இன்னிக்கு ஒருநாள் ஆடாட்டாலும், மனசு வலிக்கிறது'' என்ற திருமதி சரோஜா காமேஸ்வரன் தன் வாழ்வின் திருப்புமுனைகளைத் தொடர்ந்து விவரித்தார்.

''என் அப்பாவுக்கு நான் பிரபலமாக வேண்டுமென்று ரொம்ப ஆசை. அவருடைய முயற்சியால் எம். எல். பதி என்பவர் இயக்கிய நல்ல வீடு படத்தில் சின்ன வயது பண்டரிபாயாக வந்து நடித்து, நடனமாடினேன். தாய் மகளுக்குக் கட்டிய தாலி, அமர தீபம், ஹம் பஞ்சே ஏக் டால் கே (ஹிந்தி) ஆகிய பல படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்தேன். அமர தீபம் படத்தில் நடிக்கும் போது ஒரு வேடிக்கை நடந்தது. 'நாணயம் மனுஷனுக்கு அவசியம்' என்ற பாடலை சிவாஜி கணேசன் பாட, பிச்சைக்காரச் சிறுமியாக நான் அந்தப் பாடலின் சில வரிகளுக்கு ஆட வேண்டும். சினிமா

வுக்காக நான் கொண்டு வந்திருந்த பட்டுப் பாவாடையை (பிச்சைக்காரி வேஷம் என்பதால்) அழுக்குத் தண்ணீரில் நன்றாக நனைத்துக் கொடுத்து என்னை அணிந்து கொள்ளச் சொன்னார்கள். எனக்கு ஒரே அழுகை. சிவாஜி என்னை சமாதானம் செய்து "பாப்பாவுக்கு ஷூட்டிங் முடிஞ்சதும் புதுப் பாவாடை வாங்கிக் கொடுத்துடுங்க" என்று டைரக்டர் பிரகாஷ் ராவிடம் சொல்ல, அவரும் அப்படியே செய்தார்.

பொன்வயல் என்ற படத்தில் சுசீலா என்ற சிறுமியும், நானும் இணைந்து ஆடிய நடனம் (சீர்காழி கோவிந்தராஜன் பாடிய 'சிரிப்புதான் வருகுதையா' என்ற பாடலுக்கு ஆடியது) பிரபலமடைந்தது. அதற்குப் பிறகு நானும் சுசீலாவும் இணைந்து சுமார் ஐநூறு நடன நிகழ்ச்சிகளாவது அளித்திருப்போம்."

இவரது அடுத்த திருப்புமுனையான திருமணம் இவரது தந்தை பார்த்து நிச்சயித்ததல்ல. ஆனாலும் அதைக் காதல் திருமணமென்றும் முழுக்கச் சொல்லி விட முடியாதாம்.

"நான் நடித்த நல்லவீடு என்ற படத்தின் டான்ஸ் மாஸ்டர் இவர்தான் (அதாவது, திரு. காமேஸ்வரன்) 1955 ஆம் ஆண்டிலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். நடனம்தான் எனக்கும் அவருக்கும் பாலமாக இருந்தது. 1958 ஆம் ஆண்டு அவர் திருமணம் செய்து கொண்டார் — தனது அக்காள் பெண்ணை.

எனக்கு அம்மா இல்லை. அப்போது 'பரதத்தைக் குடும்பப் பெண்கள் கற்றுக் கொள்ளக் கூடாது' என்ற கருத்து உண்டு. எனவே என்னைக் கல்யாணம் செய்து கொள்பவர் என்னை ஆட விட மாட்டாரோ என்று எனக்கு பயமேற்பட்டது. என்னால் சலங்கைக் கட்டிக் கொள்ளாமல் இருக்க முடியுமென்று தோன்றவில்லை. 'இவர் என் மீது பாசம் கொண்டிருக்கிறார் — என் பரதத்தை நேசிக்கிறார். இவரையே திருமணம் செய்து கொண்டாலென்ன?' என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. அவர் தரப்பில் எல்லோரும் — ஆம் எல்லோரும் தான் — இதற்குச் சம்மதித்தனர் (அல்லது எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று சொல்லலாம்). என் அப்பா மட்டும் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. பிறகு வரதட்சணை கொடுத்து என்னைக் கரையேற்றுவது கஷ்டம் என்று பட்டதால் சம்மதித்தார். இந்தத் திருமண ஏற்பாடுகளுக்கு அதிகப் பிரயாசை எடுத்துக் கொண்ட, எங்கள் குழுவில் இப்போதும் ஹார்மோனியம் வாசிக்கும் திரு. சுப்ரமணியத்தை நான் மறக்கவே முடியாது.

இவரது முதல் மனைவியும், நானும் தொடர்ந்து சிநேகிதமாகவே இருந்து வருகிறோம். பணம், பாசம் ஆகிய இரண்டிலுமே என் எல்லையை நான் புரிந்து வைத்துக் கொண்டு அதற்கேற்ப நடப்பதும் ஒரு காரணம்.


என் நிகழ்ச்சிகளில் பலரும் விரும்பியவை பாற்கடல் அலை மேலே (தசாவதாரமும் இதில் சித்தரிக்கப்படும்), க்ஷீரசாகர சயன ஆகிய பாடல்களுக்கு நான் ஆடிய நடனங்கள்.

ஒருமுறை நாக்பூரில் நடனம் செய்யக் குழுவோடு போயிருந்தோம். அங்கே நான் ஆட ஆரம்பித்ததும் ஒரே கலாட்டா. காரணம் பிறகுதான் தெரிந்தது. 'சகுரால்' புகழ் சரோஜா என்று தவறாக அந் நிகழ்ச்சிக்கு விளம்பரம் செய்திருந்தனர் (சகுரால் படத்தில் சரோஜாதேவி நடித்திருந்தார்). விருப்பப்பட்டவர்கள் தொடர்ந்து பார்க்கலாமென்றும் மற்றவர்கள் தங்கள் டிக்கெட் பணத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு போகலாமென்றும் அறிவிக்கச் செய்தோம். பெரும்பாலானோர் தொடர்ந்து பார்த்து, எங்களைப் பாராட்டவும் செய்தனர்.

மற்றொரு முறை சென்னை சௌந்தர்யா ஹாலில் 'நாதர் முடி மேலிருக்கும்' பாட்டுக்குக் காலை மேலே வளைத்து அபிநயம் செய்த போது கால் நரம்பு முறுக்கிக் கொண்டு, காலைக் கீழே இறக்க முடியாமல் போய் விட்டது. திரையை இறக்கி விட்டு எனக்கு, வைத்தியம் பார்த்தனர். சிறிது நேரம் கழித்துத் தொடர்ந்து ஆடினேன்.

திருச்சியில் ஒரு நடன நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு இரவு பதினோரு மணிக்குக் காரில் சென்னைக்குக் கிளம்பினோம். மறுநாள் சென்னை பூந்தமல்லியில் ஒரு கல்யாண ரிசப்ஷனுக்கு என் நடனத்தை ஏற்பாடு செய்திருந்தனர். கார் வழியில் நான்கு இடங்களில் பங்க்சரானது. மாலை 4 மணிக்கு நாங்கள் விழுப்புரத்தில்தான் இருந்தோம். காரை வேகமாக ஓட்டச்





சொல்லி விட்டு நானும், என் கூட வந்த மற்றொரு பெண்ணும் காரின் பின் சீட்டிலேயே மேக்கப், இடை, உடை எல்லாம் மாற்றிக் கொண்டோம். அரக்கப் பரக்கச் சென்னை வந்து உடனே நடனமாடத் தொடங்கிய அந்நாளை என்னால் மறக்க முடியாது.''

நடனத்தைப் பற்றிப் பேசும்போதெல்லாம் இவர் முகத்தில் பரவசம் தெரிகிறது. ''எங்களுக்கு ஈகோவெல்லாம் கிடையாது. அதனால்தான் எங்களின் ஒரே மகள் மகாலட்சுமி, எங்களிடம் நடனம் கற்று அரங்கேறி பல நிகழ்ச்சிகள் செய்த பின்னும், கலாக்ஷேத்திராவில் பயில விருப்பம் தெரிவித்ததும் உடனே ஒத்துக் கொண்டோம்.''

ஒரே துறையில் இருக்கும் இவருக்கும், இவருடைய கணவருக்குமிடையே போட்டி புணர்ச்சி உண்டா?

''போட்டி மனப்பான்மையெல்லாம் எங்களுக்கிடையே கிடையாது. ஆனால் வீட்டில் நிறைய பரதம் சம்பந்தமாக விவாதிப்போம். பொதுவாக பரதத்தின் பழமையை அப்படியே பாதுகாக்க வேண்டுமென்று இவரும், காலத்திற்கேற்ப புதுமைகளைப் புகுத்துவதில் தவறில்லை என்று நானும் கருதுவதால் சில சர்ச்சைகள் நடக்கும். நானும் என் கணவரும் இணைந்து மிஸ்ர தாளத்தில் வர்ணம் உருவாக்கினோம். இதைப் பார்த்து மகிழ்ந்த வீணை பாலசந்தர் இவருக்கு 'மிஸ்ர வர்ணா' என்று பட்டமளித்தார்.''

நான்கு வருடங்களுக்கு முன் மேடையில் ஆடுவதை நிறுத்தி விட்ட சரோஜா தன்னுடைய 'நாட்டியாலயா'வில் பல சிறுமிகளுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அருகிலுள்ள ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இவர் நடன ஆசிரியையும் கூட. இவர் மனத்தில் ஒரு பெரும் குறை உண்டு.

''நான் சிறுமியாயிருந்த போது ஒரு நிகழ்ச்சியில் நடனமாடி முடிக்கையில் இரவு பத்து மணியாகி விட்டது. கடைசி பஸ் போய் விட்டிருக்க, ஜட்காவுக்குக் காசு கொடுக்க வசதியில்லாததால் என் அப்பா என்னைத் தோளில் தூக்கிக் கொண்டு டவுனிலிருந்து திருவொற்றியூர் வரை நடந்தே சென்றது பசுமையாக என் மனத்தில் பதிந்திருக்கிறது. நாட்டியத்தின் மீது கொண்ட காதலால் வாழ்வில் நான் எவ்வளவோ 'இடர்ப்பாடுகளை சந்தித்திருக்கிறேன். ஆனால் இப்போது பரதம் பயிலும் பல மாணவிகள் அரங்கேற்றத்தை ஓர் ஆரம்பமாக எண்ணாமல், அதுதான் லட்சியம் என்பது போல அதோடு நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். அதற்கு மேல் தங்கள் நடன ஞானத்தை விஸ்தரித்துக் கொள்ளுவதில்லை. மேலும் முன்பு மாணவிகளுக்கிருந்த சிரத்தையும், குரு பக்தியும் குறைந்துதான் போய் விட்டன. இந்நிலை மாறினால் நன்றாக இருக்கும்'' என்கிறார்.

— அருண் சரண்யா.

ஒரு கப் பொட்டுக் கடலையுடன் தேவையான அளவு உப்பு, சிகப்பு மிளகாய் சேர்த்து மிக்ஸியில் பொடி செய்து (பொடித்து) பாட்டிலில் வைத்துக் கொள்ளுங்கள். காலை நேர அவசரத்திற்கு இதில் சிறிது எடுத்து, தண்ணீர் விட்டுக் கலக்கி, கடுகு, பெருங்காயம், கறிவேப்பிலை தாளித்து விட்டால் திடீர் சட்னி தயார். இட்லி, தோசை, பொங்கலுக்கு ஏற்றது.


மேலும் இப்பொடியில் சிறிது தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து உருட்டி, துகையல் போல் தயிர் சாதத்திற்கு டிபன் டப்பாவில் வைத்தும் எடுத்துச் செல்லலாம். தேங்காய் சேர்க்காததால் நீண்ட நேரம் ஆனாலும் கெட்டுப் போகாது.

— பாலா.

வெந்தயம் நன்றாக ஊறாவிட்டால், கிரைண்டர், மிக்ஸி இவற்றில் ஈஷிக் கொண்டு, அலம்புவது கஷ்டம். ஆகையால் 1/4 கிலோ வெந்தயத்தை, சுத்தம் செய்து, 1/2 ஆழாக்கு ப. அரிசியுடன் மிஷினில் நைசாக அரைத்து வைத்துக் கொண்டு, தோசை, இட்லிக்கு மாவு அரைத்தவுடன், அலம்பிய தண்ணீரில் ஒரு கரண்டி கரைத்து வைத்துப் பிறகு மாவுடன் கலந்து விடுங்கள். நல்ல சத்து கிடைக்கும். மிருதுவாகவும் இருக்கும். சிறு குழந்தைகளுக்கு நிறைய வெந்தயம் சேர்க்கலாம். பிரசவம் ஆனவர்கள் உளுந்தைத் தவிர்த்து, 2 ஆழாக்கு பு. அரிசிக்கு, 1/4 ஆழாக்கு வெந்தயம் சேர்த்து அரைத்த தோசை, இட்லி சாப்பிடலாம்.

— பார்வதி.

# இருட்டில் பூத்த நெருப்பு!



கும்பகோணம் ஸ்டேஷனில் இறங்கி டவுன் பஸ் ஒன்று பிடித்து சுவாமிமலை ரோடில் பாபராஜபுரத்தில் இறங்கினேன். இடப்பக்கம் காவிரியின் சலசலப்பு. முன்னைப் போல் ஆர்ப்பாட்டம் இல்லை. சாதுவாய் மாறியிருந்தது. கையில் 'ஸூட்கேஸு'டன்' வரும் என்னை ஊர் மக்கள் வினோதமாய் பார்த்தார்கள்.

"இங்கே கிருஷ்ணமூர்த்தி வீடு?"

"அதோ பச்சைக் கதவு போட்டது. விளக்குக் கம்பத்து பக்கத்துல"

பச்சைக் கதவு திறந்து கொண்டு திண்ணையைத் தாண்டி பார்த்த போது உள் தேக்கு மரக் கதவில் பெரிய பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. கல்யாணி எங்கே! வேறு யாராவது சொந்தக்காரர்கள் வீட்டிற்குப் போய் விட்டாளா?

பக்கத்து வீட்டிலிருந்து இரண்டு தலைகள் சடாரென்று வெளிப்பட்டன. "யாரு! கிருஷ்ணமூர்த்தியை தேடிண்டு வந்திங்களா? அவர் ஊர்ல இல்லையே. கல்யாணி கோயிலுக்கு போயிருக்கா. இதோ வந்துடுவா."

ஒரு மூக்குத்தி பேசிற்று.

கிருஷ்ணமூர்த்தி ஊரில் இல்லாதது தெரிந்துதானே வந்திருக்கிறேன். இது பைத்தியக்காரத்தனம் என்று தோன்றிற்று. வலியப் போய் வம்பில் மாட்டிக் கொள்கிறேன் என்று கூட தோன்றிற்று.

கல்யாணி கோவிலிலிருந்து திரும்பி வரும் வரை என்னைப் பற்றியும் நான் எதற்கு இந்தக் குக்கிராமத்திற்கு வந்திருக்கிறேன் என்பது பற்றியும் கொஞ்சம் சொல்லலாம்.

சைதாப்பேட்டையில் கோர்ட்டிற்குப் பின்புறம் புதிதாகக் கட்டப்பட்ட ராஜி அபார்ட்மென்டில் இரண்டாவது மாடியில் ஒரு பிளாட் என்னோடது. சின்னக் குடும்பம். கறுப்பாய் குண்டாய் அழகான மனைவி. மந்தமாய் ஒரே பையன். என் பக்கத்து பிளாட்டில் ராஜாராம். ஒரு தனியார் கம்பெனியில் அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் நான் ஆபீஸர். எனக்குக் கீழே பாங்க் சமாச்சாரங்களை கவனித்துக் கொள்கிறவன் ராஜாராமன். ஆபீஸை விட்டு வெளியே வந்தவுடன் உலகத்தில் உள்ள கெட்ட காரியங்கள் அனைத்தைப் பற்றியும் பேசும் ஒரு புண்ணிய ஆத்மா இந்த ராஜாராமன்.

ராஜாராமின் தூரத்து உறவுக்காரன்தான் கல்யாணியின் புருஷன் கிருஷ்ணமூர்த்தி. தன் அப்பா நான்கு தலைமுறைக்குச் சேர்த்து வைத்த சொத்தை அழிக்க வேண்டுமென்பதற்காகவே இந்த பூமியில் அவதாரமெடுத்தவன். கிண்டியில் அழித்தது போக இப்போது அவனிடம் இரண்டு தலைமுறை சொத்து பாக்கி இருக்கிறது.

ஒருநாள் ராஜாராமன் கிருஷ்ணமூர்த்தி சொத்து அழிப்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது கல்யாணியின் ஞாபகம் வர பிரகாசமானான். கல்யாணியையெல்லாம் வர்ணிக்க முடியாது என்றான். வாழ்க்கையில் கல்யாணியை ஒரு தரம் பார்த்து விட்டால் சொர்க்கம் நிச்சயம் என்றான். தான் இதற்காகவே தஞ்சாவூர்ப் பக்கம் நிலம் விஷயமாக அடிக்கடி போய் விட்டு வருவதாகச் சொன்னான். பிரயோஜனமில்லையாம். கல்யாணி ஒரு நெருப்பு என்று முடித்தான்.

சதா வெத்தலை பாக்கும் அரை வழுக்கையும் — கிருஷ்ணமூர்த்தியின் மனைவியா அந்த அழகுச் சிலை.

'ராஜாராமா! இந்தக் கொடியை எப்படி வளைக்கணும்கிற வித்தை எனக்குத் தெரியும். அதற்கு உன்னோட மஞ்சள் ஸில்க் சட்டையும் அசட்டுச் சிரிப்பும் போறாது.'

அன்றைக்கு ராஜாராமிடம் பேசிய போது நினைத்துக் கொண்டு, ஆசை கொஞ்சம் கொஞ்சமாக வளர அந்தக் கொடியை வளைக்கத்தான் பாபராஜபுரம் காவேரிக் கரையோரம் வந்திருக்கிறேன்.

கல்யாணி வருவதற்கு முன்னால் அவள் வாசனையோ ஜொலிப்போ பிரகாசமோ, சுகந்தமோ ஏதோ ஒன்று முன்னால் வந்தது. நான் சுதாரித்துக் கொண்டு தலையைத் திருப்பினேன். தூரத்தில் மிதந்து வந்து கொண்டிருந்த பெண்தான் கல்யாணியாக இருக்க வேண்டும். அவள் முகத்தில் மின்னிக் கொண்டிருந்த மூக்குத்தி காற்றில் தவழ்ந்து வந்து என்னோடு கை குலுக்கிற்று. ஆமாம் இவள் வர்ணனைக்கு அப்பாற்பட்டவள்தான்.

"என்ன அநியாயம்! கிருஷ்ணமூர்த்திக்கு கத்திச் சண்டை தெரியுமா? வில் வித்தை பயிற்சி உண்டா? போட்டியே இல்லாமல் எப்படி கல்யாணியை அவன் கை பிடிக்கலாம். இதைக் கேட்பார் யாரும் இல்லையா?"

கையில் பிரசாதக் கூடையுடன் நான் எதிர்பார்த்ததே வேறு. பஃப் வைத்த ஜாக்கெட்டுடன் மருதாணி இட்டுக் கொண்டு ஒன்பது கஜத்தை போர்த்திக் கொண்டு தூணில் மறைந்து கொண்டிருக்கும்...

ஜில்லென்று விமலைத் தழைய தழையக் கட்டியிருந்தாள். செந்தூரத்தை மூக்கு நெத்தியைத் தொடும் இடத்தில் இங்க் தெளித்ததாய் தூவியிருந்தாள். கண்ணில் மை இமையோடு கோலம் போர்த்தியிருந்தது. சின்னதாய் ஸ்டிக்கர் பொட்டு. தலை முடிக்கற்றை சமீபத்தில் ஷாம்பூவை ஞாபகப்படுத்தியது. அரை முழம் கதம்பம். கண்ணில் தூசி வந்து விழுந்தது.

அவள் பார்வையில் எனக்குத் தடுமாற்றம்.

அதற்குள் என்னைப் பற்றிய நியூஸ் அவளுக்குப் போக பரபரத்து 'வாங்க' கதவை இழுத்துப் பிடித்துத் திறந்தாள்.

"நான் சுந்தரமூர்த்தி. மெட்ராஸ்ல ராஜா

**கே. மணி**

ராமனோட பக்கத்து பிளாட்ல இருக்கேன். திருச்சிக்குக் கம்பெனி விஷயமா வந்தேன். அப்படியே கிருஷ்ணமூர்த்தியையும் பார்த்துட்டு வந்துடலாம்னு வந்தேன். கிருஷ்ண மூர்த்தி இல்லையா? போன தடவை வந்த போதே இங்க வரணும்னு பார்த்தேன். முடியலை."

"அவர் ஊர்ல இல்லை. மெட்ராஸ் போயிருக்கார்."

"மெட்ராஸ்லா? என்னைக்கு?"

"இரண்டு நாளாயிடுத்து. உங்களுக்குத் தெரியாதா?"

நான் ஒரு நிமிஷம் சுதாரித்துக் கொண்டு, "நான் கிளம்பி ஒரு வாரமாறது. இப்ப ஒண்ணும் கிண்டில ரேஸ் இருக்கறா மாதிரி தெரியலை."

"கிண்டில கிடையாது. ஊட்டிலயும் பெங்களூர்லயும் இருக்கே! கிண்டில 'இண்டர்வன்யூ பெட்டிங் உண்டு"

கல்யாணி சாதாரணமாய் இங்கிலீஷ் பேசியது என்னை ஆச்சர்யப்படுத்தியது.

"ஒரே அசதியாயிருக்கு. குளிக்கணும். அப்புறம் ஒரு சூடா காப்பி தாங்கோ! உங்க காப்பி பற்றி ராஜாராமன் சொல்லாத நாளில்லை. குடிச்சுட்டு நான் கிளம்பணும்"

"என்ன வந்ததும் உடனே கிளம்பறீங்க? ராத்திரி இருந்து சாப்பிட்டு நாளைக்குக் கார்த்தால சுவாமிமலை கிருத்திகை விசேஷம். இருந்து தரிசனம் முடிச்சுண்டு போகலாம். அப்புறம் அவர் கோவிச்சுப்பார்."

குளிக்க வெந்நீர் போட்டுத் தந்தாள். நான் பாதி குளித்துக் கொண்டிருக்கும் போதே 'ராத்திரி என்ன சமைக்கிறது?' என்று பாத்ரூம் வாசலில் குரல் கொடுத்தாள்.

"உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்" என்றேன் நான் பயந்த குரலில். "இதுல என்ன கஷ்டம் இருக்கு? நீங்க இப்படி சங்கோஜமா பேசறதுதான் எனக்குக் கஷ்டமா இருக்கு" என்றாள்.

என்ன சமையல் பண்ணிக் கொண்டிருக்கிறாள் என்று தெரியவில்லை. ஆனால் வாசனை பின் ஓர் அற்புதம் காத்திருப்பதை முன்னாலேயே சொன்னது.

என்ன சாப்பிட்டேன் என்று தெரியவில்லை.

கூந்தலில் கனகாம்பரம். இடுப்பில் மடித்து செருகப்பட்ட புடைவை. அங்கங்கே பளபளக்கும் உடல் மறையும் பிரதேசங்கள், நிமிஷத்துக்கொருதரம் அனாவசியமாய் ஒரு உடல் சிலிர்க்க வைக்கும் சிரிப்பு. கை வளையல்கள் பரிமாறும் போது மோதிக் கொள்ள எனக்குள் எங்கோ கண்ணாடி உடைந்தது.

சாப்பிட்டு முடித்து விட்டு பன்னீர் புகையிலை போட்டுக் கொண்டு கல்யாணி வீட்டு வேலைகளை முடிப்பதற்காக நான் ஊஞ்சலில் ஏதோ புத்தகம் படிப்பதாக பாவ்லா பண்ணிக் கொண்டிருந்தேன்.

கல்யாணி என்னைத் தாண்டிப் போய் வாசல் கதவைச் சாத்தினாள். "நீங்க ஹால்லே படுத்துக்கறீங்களா?"

இரண்டு தலைகாணி ஜமுக்காளம் கொண்டு வந்து போட்டாள். கொஞ்ச நேரம் சப்தம் எதுவுமில்லை. கொல்லைப் புறக் கதவையும் கல்யாணி மூடும் சப்தம் கேட்டது.

சமையல் ரூமில் பாய் விரித்து மணை போட்டு காலுக்கு ஒரு தலைகாணி போட்டுக் கொண்டாள்.

சொம்பில் ஜலம் கொண்டு வந்து என் படுக்கைக்குப் பக்கத்தில் வைத்த போது நான் பொறுக்க முடியாமல் கல்யாணியின் கையைப் பிடித்தேன்.

"இதோ பார் கல்யாணி! இங்கே வர்றதுக்கு முன்னாடி நீ பட்டிக்காட்டுப் பெண்ணா இருப்பேன்னு நினைச்சேன். உன்னைப் பார்த்ததும் என் நினைப்பையே மாத்திண்டுட்டேன்.

வாசற் கதவு சாத்தியிருக்கு. கொல்லைக் கதவையும் நீ சாத்தினதை நான் பார்த்துட்டேன். எல்லாத்தையும் நீ டாண்ணு புரிஞ்சுக்கற. என்னையும் புரிஞ்சுண்டிருப்பேன்னு நினைக்கறேன்.

உன் உடம்பு சாதாரணமானதுன்னு நீ நினைச்சுண்டிருக்க. அது தப்பு. பெரிய ஆளுங்கல்லாம் தான் பெரியவங்கன்னு புரிஞ்சுக்கவே ரொம்ப நாளாயிடுது. உன்னோடது மயிலிறகு தடவிக் கொடுக்கற தேகம். உன்னோட பாதம்லாம் தரைல படவே கூடாது கல்யாணி. அதெல்லாம் அப்படியே காத்துல மிதக்கணும்.

சப்தம் போட்டா அது சுத்தி சுத்தி உன் கிட்டேயே வந்து உன்னையே காயப்படுத்தும். நீ புத்திசாலி இல்லையா?"

கல்யாணி செல்லமாய் ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டு சமையலறைக்குள் பக்க வாட்டில் போனாள். நான் கொல்லைப்புற கதவுக்குச் செல்லும் வழியில் நின்று

உப்புக் கரிப்பில்லாத, தரமான பால் பவுடர் ஒரு கப் எடுத்துக் கொண்டு, இரண்டு டீஸ்பூன் தரமான கோகோ பவு டரைப் போட்டு, ஈரமில்லாத பாத்திரத் தில் கொட்டி நன்றாகக் கலக்கவும். அரை கப் சர்க்கரையைக் கம்பிப் பாகு வந்த வுடன் (அடுப்பை அணைத்து விடவும்). பால் பவுடர் + கோகோ பவுடர் கலவை யைப் பாகில் கொட்டி ஒரு ஸ்பூன் வெண்ணெயும் சேர்த்து நன்கு கிளறி, நெய் அல்லது வெண்ணெய் தடவிய தட்டில் கொட்டி வில்லை போடவும். அருமையான சாக்லேட் தயார். நெய் நிறையச் செலவு இல்லை. உடலுக்கும் நல்லது.

— பார்வதி.


கண்களுக்குக் கூர்மை, குளுமை, இனிமை
ஐடெக்ஸ்
EYETEX
KAJAL
SUPREME
சாஸ்திரிய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது.
எவ்வித தீங்கும் விளைவிக்காது.
பாதுகாப்பானது, பச்சிளம் குழந்தையின்
கண்களுக்குக்கூட!
ஐடெக்ஸ்
50 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
அரவிந்த் லாபரடரீஸ் சென்னை-600 033.
Imageads 2496 R

கொண்டேன்.

கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்தாள். புடைவைத் தலைப்பைப் போர்த்தியிருந்தாள். நான் கட்டிலுக்கு வந்து அமர்ந்தேன். சின்னக் குறுகுறுப்புடன் கல்யாணியும் என் அருகே கட்டிலில் உட்கார்ந்தாள். சற்று முன் ஆர்ப்பாட்டமாய் பரவசப்படுத்திக் கொண்டிருந்த காவிரி ஆறு இதோ நான் தொட்டு விடும் தூரத்தில்.

நான் என்ன ஏதென்று யோசிப்பதற்குள் பழுக்கக் காய்ச்சிய தோசைக் கரண்டி அவள் புடைவைத் தலைப்பிலிருந்து வெளிப்பட்டு என் வலது கையில் இறங்கிற்று.

பதறிப் போனேன் நான். துடித்துப் போனேன் நான். கண்ணில் ஜலம் வந்தது. மூச்சு முட்டிற்று.

ஒன்றுமே நடக்காதது போல் அவள் எழுந்து உள்ளே போனாள். சமையலறையிலிருந்து கல்யாணியின் குரல் வந்தது.

''பக்கவாட்டில் தோட்டத்துக்குப் போக ஒரு கதவு இருக்கு சுந்தரமூர்த்தி. அது திறந்துதான் இருக்கு. பக்கத்து வீட்டு வக்கீல் சுந்தர ராமனோட பையன் ராது இதோ இப்ப தான் துணைக்கு படுத்துக்க வரட்டா மாமின்னு கேட்டுட்டுப் போறான். வரச் சொல்லியிருக்கேன்.''

''வாடா ராது! உனக்கு நூறு வயசு. உன்னைப் பத்தித்தான் பேசிண்டிருக்கேன். ஸார் சுந்தரமூர்த்தி. மெட்ராஸ்லேர்ந்து வரார்.''

ராது என்னைப் பார்த்து ஸ்நேகமாக சிரித்தான்.

''ராது நீ வேணா வீட்டுக்குப் போ! ஸார் எனக்குத் துணைக்கு இருக்கார்'' ராது குதித்துக் கொண்டே ஓடினான்.

கல்யாணி பக்கவாட்டு கதவை வேண்டுமென்றே சத்தப்படுத்திச் சாத்தினாள்.


நான் அவசரமாய் என் துணிமணிகளை மடித்து வைத்த போது, ''இப்போ எங்கே கிளம்புறீங்க? மணி பதினொன்று ஆகிறது. பத்து மணிக்கு மேலே இங்கே பஸ்ஸெல்லாம் கிடையாது. வெளியே 'சோன்னு பனி பெய்யறது' ஆத்தங்கரைல போய் படுத்துக்கப் போறீங்களா? பேசாம படுத்துத் தூங்கிட்டு கார்த்தால டிபன் சாப்பிட்டுக் கிளம்பலாம்.''

அன்று ராத்திரி நான் பட்ட வேதனை ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் கொடுமை. என்னை வெறுப்பேற்றுவதற்காகவோ என்னவோ கல்யாணி குறட்டைச் சத்தத்துடன் தூங்கிக் கொண்டிருந்தாள்.

ராத்திரி ஏற்பட்ட அவமானத்தில், அதிர்ச்சியில் கொஞ்ச நேரத்தில் என்னை அறியாமல் தூங்கிப் போனேன்.

''ஹலோ! குட்மார்னிங். மணி ஏழாயிடுத்து. சாருக்கு இன்னும் தூக்கமா? போய் பல்லைத் தேய்ச்சிட்டு வாங்க. டிபன் காப்பி சாப்பிடலாம்.''

காலையில் எழுப்பினாள் கல்யாணி. குளித்து முடித்து விட்டு பிரகாசமாய் இருந்



க்னாக்லோ, எலெக்டிரால் போன்றவையுடன் வரும் ஸ்பூன்களைச் சேர்த்து வையுங்கள். மாத்திரைகள், காப்ஸூல் அட்டைகள் போட்டு வரும் ஜரிகைத்தான் காலி பாக்கெட்டுகளை (Pouch) சேமியுங்கள்.

ஸ்பூன் பகுதியில் பத்திரிகைகளில் வரும் ஏதாவது குழந்தைப் படத்தின் முகத்தைப் பொருத்தமாக ஒட்டுங்கள். அதன்கீழ் ஜரிகைத்தானைச் சுருக்கம் செய்து பாவாடை போலக் கட்டுங்கள். கைப்பகுதிக்கு இரு சிறு ஜரிகைத்தான்களைச் சுருக்கம் வைத்துப் பொருத்துங்கள் சுவரில் ஒரு சிறு ஆணியை அடித்து மாட்டுங்கள். (கற்பனைக்கேற்ப மேலும் அழகுபடுத்தலாம்.) செலவில்லாத பொம்மை!

— எஸ். பட்டம்மா.

தான்.

நான் பிரஷ்ஷுடன் கொல்லைப்புறத்தில் கிணற்றடிக்குப் போனேன். பிரஷ்ஷில் பேஸ்ட்டைப் பிதுக்கும் போதுதான் கவனித்தேன். நேற்று எனக்கு சூடு வைத்த வலக் கையில் பிசிராய்... என்ன ஏதென்று தொட்டுப் பார்த்த போது ஏதோ மருந்து வாசனை வந்தது.

கல்யாணி நான் தூங்கியவுடன் என் காயத்துக்கு மருந்து போட்டிருக்கிறாளா?

நன்றியுடன் வாய் பேசாது பொங்கலும், காப்பியும் சாப்பிட்டு விட்டு முகத்தாலேயே போய் வருகிறேன் என்று சைகை செய்தேன்.

''அடிக்கடி வந்து போயிண்டு இருங்க. அடுத்த தடவை மெட்ராஸ் வந்தா உங்க வீட்டுக்கு வரேன்! ஒரு நிமிஷம்...'' என்று கல்யாணி உள்ளே போனாள்.

''ராஜாராமனுக்கு நார்த்தங்கா ஊறுகாய்ன்னா உயிர். இந்தப் பாட்டிலை நான் குடுத்தா மாமிகிட்டே கொடுங்க.''

ரப்பர் பேண்ட் சுற்றி என்னிடம் ஒரு பாட்டிலை நீட்டினாள்.

நான் மௌனமாய் அதை வாங்கிக் கொண்டு நடந்தேன்.

தெருமுனை வரை நடந்து சடாரென்று நான் பின்னால் திரும்பிய போது தூரத்தில் கல்யாணி இன்னும் எனக்குக் கையை ஆட்டிக் கொண்டிருந்தது தெரிந்தது.



இன்னிசை பாடும் நேரம்
MIRACLE EYE
SOUND AUTO CONTROL
Ajanta
மியூசிகல் கடிகாரங்களிலே இந்தியாவில் முன்னோடிகள்
Ajanta QUARTZ
the touch of tomorrow's technology
மோர்வி 363 641
0168-212 ATCM
VANITHA
V207
M267
M227
M257
எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கிறது
எச்சரிக்கை: எங்கள் தயாரிப்பு அனைத்திலும் 'அஜந்தா' மார்க் உள்ளதா என பார்க்கவும். போலிகளை கண்டு ஏமாறாதீர்.

# ஆண்கள் பெண்களிடம் தோற்றுப் போக விரும்புவதில்லை!

கேரம் சாம்பியன் திருமதி அனு ராஜுவுடன் பேசிக் கொண்டிருந்த போது அவருக்கும், நகைச்சுவை அரசி மனோரமாவுக்கும் உள்ள ஓர் ஒற்றுமை பளிச்சென்று பட்டது. கதாநாயகியாக நடிக்க ஆரம்பித்து, அப்படம் பாதியில் நின்று போக, நகைச்சுவைப் பாத்திரங்களில் நடிக்க ஆரம்பித்துக் கொடிகட்டிப் பறக்கிறார் மனோரமா. அனு ராஜுவும் விளையாட்டுத் துறையில் அப்படித்தான். டெனிகாய்ட்டிலும், டேபிள் டென்னிஸிலும் சிறு வயதிலிருந்தே ஆசை கொண்டு விளையாடிய அனுராதா தொடர்ந்து அவற்றை முழுமூச்சுடன் ஆட முடியாமல் நிறுத்தும்படியான நிலை ஏற்பட்டது. 'ஆர்த்ரைடீஸ்' எனப்படும் மூட்டு வலியால் பாதிக்கப்பட்டார். விளைவு? ஓடியாடும் விளையாட்டுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியிருந்தது. எனவே கேரம் விளையாட ஆரம்பித்து இன்று அவ்விளையாட்டில் தன் தனி முத்திரையைப் பதித்திருக்கிறார்.

"அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். கேரம் விளையாட ஆரம்பித்ததனால்தான் கிட்டத்தட்ட பதினோரு வருடங்களாக என்னால் ஆட முடிகிறது. கேரம் போன்ற உடல் உழைப்பு அதிகம் தேவைப்படாத விளையாட்டுகள்தான் நம் நாட்டுப் பெண்களுக்கு நீண்ட நாட்கள் ஆடத் தோதானது" என்கிறார்.

உண்மைதான். பம்பாயைச் சேர்ந்த நளினி போலின்ஞ்கர், டில்லியைச் சேர்ந்த விஜயலட்சுமி சோமான்ஜி ஆகியோர் நாற்பது வயதைத் தாண்டிய பின்னும் கிரிக்கெட் வீராங்கனைகளாக இன்னும் விளங்குகின்றனர். சொல்லப் போனால் ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த வாணி சில ஆண்டுகளுக்கு முன்வரை கேரம் விளையாட்டில்தான் கலக்கிக் கொண்டிருந்தார். அவருடைய வயது ஐம்பதுக்கும் மேல்.

"உடல் உழைப்பு அதிகம் தேவைப்படாத விளையாட்டு கேரம்" என்ற அனுவிற்குத் திடீரென்று என்ன தோன்றிற்றோ? வேகமாக, "அதுக்காக கேரம் போட்டிகளில் விளையாடுவது ரொம்பச் சுலபம்னு நினைச்சுடாதீங்க. இதிலே மெண்டல் ஸ்ட்ரெயின் அதிகம். மனத்தில் நிறையக் கணக்குப்



போட வேண்டும். போட்டிகளில் கிட்டத்தட்ட எட்டு மணி நேரம் தொடர்ந்து ஆட வேண்டியிருக்கும். நரம்புகளை முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்,'' என்றார்.

சென்னை வைணவக் கல்லூரியில் பொருளாதாரம் பட்டப்படிப்பு படித்த அனு, திருமணத்திற்குப் பிறகு ஹைதராபாத்துக்குச் சென்றார். அதற்குப்பிறகுதான் கேரம் விளையாட்டில் ஈடுபட்டார். 1978 — இல் ஆட ஆரம்பித்தவர் அடுத்த ஆண்டிலேயே ஆந்திர மாநிலத்தில் நம்பர் மூன்றாக வந்தார். 1984 — இல் நம்பர் ஒன்றாக வந்தார். பிறகு கணவருடன் தானும் சென்னைக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு வந்தார். (அனு



பணியாற்றிக் கொண்டிருப்பது மத்திய சிவில் சர்வீசில்). 1987, 88 ஆகிய இரு ஆண்டுகளிலும் தமிழ்நாடு நம்பர் ஒன்று என்ற பெருமையுடன் தேசிய அளவிலும் 1980 லிருந்து 1987 வரை முதல் நான்கு ராங்குகளுக்குள் வந்திருக்கிறார்.

அடுத்த கேள்வியை நான் அனுவைக் கேட்க ஆரம்பிக்கும்போது, அவர் கணவர் ராஜு "காப்பி சாப்பிட்டுவிட்டுப் பேசலாமே'' என்று தான் கலந்து வந்த காப்பியை நீட்டினார். தன் மனைவி வாங்கிய பரிசுகள், அவரைப் பற்றி வெவ்வேறு நாளிதழ்களில் வெளிவந்த செய்திக் குறிப்புகள் ஆகியவற்றை உற்சாகத்தோடு விவரித்தார். நான் கேட்க வந்த ''உங்கள் கேரம் விளையாட்டிற்கு உங்கள் கணவர் எந்த அளவுக்கு ஒத்துழைக்கிறார்?'' என்ற கேள்வியை மனத்திலேயே விழுங்கிக் கொண்டேன்.

சில மாதங்களுக்கு முன் கேரம் விளையாட்டுகளில் 'அகில உலக அளவில்' ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதன்படி இப்போது ஒரு 'கேமி'ல் வெற்றிபெற 25 பாயிண்ட்டுகள் போதும் (முன்பு 29 பாயிண்ட்டுகள் தேவை) ராணி (சிவப்புக் காய்)யின் மதிப்பு மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளது. ''இதனால் 'ரெட்'டின் மீது குறியாக இருந்த விளையாட்டுக்காரர்களின் கவனம் தங்கள் காய்களைப் போடுவதில் திரும்பியுள்ளது'' என்கிறார் அனு.

''1986 — ஆம் வருடம் பம்பாயில் நடந்த அகில இந்தியப் போட்டியில் வர்ஷா சுகோதரும் நானும் ஆடினோம். அது இறுதிப் போட்டி. முதல் சுற்றில் நானும், இரண்டாவது சுற்றில் அவரும் வென்றோம். மூன்றாவது சுற்றில் எட்டு போர்டுகளை முடித்தபோது இருவரும் சம பாயிண்ட்டுகள் எடுத்திருந்தோம். அப்போது வர்ஷா, நான் அவரை விட ஒரு பாயிண்ட் அதிகமாக எடுத்துவிட்டதாக எண்ணி, நான் 'வென்றதற்காக' எனக்குக் கைகொடுத்துவிட்டு நகர்ந்தார். ஆனால் அவரைத் தொடர்ந்து ஆடச் சொன்னார்கள். இது தொடர்பாகப் பம்பாய், தமிழ்நாடு ஆகிய அணிகளுக்கிடையே சிறிது பரபரப்பு ஏற்பட, எனக்கு டென்ஷன் உண்டாக, அந்தப் போட்டியில் நான் தோல்வியடைந்தேன்'' என்று நினைவுகூரும் அனுவுக்கு அவர் பணிபுரியும் அரசு அலுவலகத்தில் அவர் விளையாட்டுத் திறமைக்காக இரண்டு ஸ்பெஷல் ஊதிய உயர்வுகள் கொடுத்துக் கௌரவித்துள்ளனர்.

ஸ்டாம்புகள் சேமிப்பது, லக்ஷ்மி, சிவசங்கரி ஆகியோரின் நாவல்களைப் படிப்பது ஆகியவை அனுவின் விருப்பங்களாம். போட்டி நடக்கும் நாட்களில் தூக்கமே வராமல் படுக்கையில் புரண்டவாறு இருப்பாராம்.

கேரம் விளையாட்டை ஆண்கள் விளையாடுவதற்கும், பெண்கள் விளையாடுவதற்கும் ஏதாவது வேறுபாடு உண்டா? ''உண்டு'' என்கிறார் அனு. ''ஆண்கள் புதிது புதிதாக ஸ்ட்ரோக்குகள் ஆடத் தயங்க மாட்டார்கள். அஃபென்ஸ் ஆடுவது அவர்கள் வழக்கம். பெண்கள் பொதுவாக அப்படி ஆட மாட்டார்கள். இதற்கு ஒரு முக்கியக் காரணம் ஆண்கள் பல விளையாட்டு க்ளப்புகளில் பல்வேறு வகையான போட்டியாளர்களுடன் விளையாட முடிகிறது. பெண்களுக்கு அந்த வாய்ப்பு மிகக் குறைவு. ஆண்களைப் பற்றி இன்னொன்றும் கூற வேண்டும். எங்கள் அலுவலகத்திலேயே கேரம் போட்டிகள் வந்தால் எனக்குச் சில சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. பெண்கள், ''ஆமாம், நீ விளையாடினால் எங்களுக்கு ஏது வாய்ப்பு?'' என்பார்கள். அதனால் சில சமயம் விளையாட்டாக ஆண்களோடு போட்டியிட்டு வெற்றி பெற்று வந்தேன். அதை ஆண்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனோ இந்த ஆண்கள் பெண்களிடம் தோற்றுப் போகவிரும்புவதே இல்லை.''

**— ஜி. எஸ். எஸ்.**

கோ-ஆப்டெக்ஸ்

# கோலம்

இல்லத் தேவைகளை இனிதாக்கவல்ல
தன்னிகரில்லா துணி அங்காடி
843, அண்ணா சாலை, சென்னை
(அண்ணா சிலைக்கு எதிரில்)

நவநாகரிகத்திற்கேற்ற நேர்த்தியையும் தனித்தன்மையையும்,
நல்ல உறுதியையும் வெளிப்படுத்தும் நெசவுத்திறன்! உங்கள்
சிந்தையைச் சிலிர்க்கச் செய்யும் கண்கவர்
வண்ணமும் கலைமிளிரும் வடிவமைப்பும் கொண்ட
தன்னிகரற்ற துணிவகைகள்!

உங்கள் இல்லத்திற்குத் தேவையான படுக்கை
விரிப்புகள், மேசை அலங்கார விரிப்புகள்,
திரைச் சீலைகள், தலையணை உறைகள்,
கைக்குட்டைகள் துவாலைகள்...
போன்ற எல்லா வகையான
துணிரகங்களும் எப்போதும்
கிடைக்குமிடம் –
'கோலம்'



DIPR 1084/89/ELEGANT

BLACK/

[redacted]



# டிபனோ டிபன்!

குடும்பத்தில் அன்றாடம் பிரச்னைகள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் மிகச் சுலபமான பிரச்னைகளை கூட தலைவலியாக்கிக் கொண்டு தினந்தோறும் மனத்தை அலட்டிக் கொள்கின்றனர் குடும்பத் தலைவிகள் பலர்.

நான் இரண்டு, மூன்று விடுகளுக்கும், மாதர் சங்கங்களுக்கும் சென்று அளவளாவிக் கொண்டிருக்கும் போது, ஒரு தலைவி சொன்னார்.

''இன்று என்ன டிபன் செய்கிறதென்றே தெரியவில்லை. மாவும் கிடையாது. பெரிய தலைவலி'' என்றார்.

இன்னொருவர் சொன்னார். ''ஒரு வத்தக் குழம்பு வைத்து, அப்பளம் சுட்டு, தொகையல் அரைத்து. இப்படி ஏதாவது சமையலா? செய்து விடலாம். இந்த டிபன் பிரச்னை மண்டையை உடைக்கிறது'' என்று அலுத்துக் கொண்டார்.

மேலும் இன்னொரு மாமி கூறினார்: ''சின்ன வாண்டுப் பயலிலிருந்து, வயசானவா வரை இந்தக் காலத்தில் ''டயட் டயட்'' என்று உயிரை எடுக்கிறார்கள். எனக்கு எண்ணையில்லாமல் ஏதாவது பண்ணு'' என்கிறாள் என் பெண். நிறைய காய்கறிகள் பண்ணு என்கிறார் என் கணவர். ''வாயு பதார்த்தமே சேர்க்காதே,'' இந்தக் கிழங்கு, புழுங்கெல்லாம் வேண்டாம்

என்கிறார் என் மாமனார். ''தினம் இட்லி, தோசைதானா'' என்று ஒரு மைல் ஓடுகிறான் என் சின்னப் பையன். தினம், என்னதான் டிபன் செய்கிறதென்று நினைத்து, நினைத்து பி.பி.யே வந்து விடும் போலிருக்கு'' என்று ஆதங்கப்பட்டார் அந்த மாமி.

இந்தக் காலத்தில் உணவு விஷயத்தில் எல்லோருமே ரொம்பக் கண்டிப்பாய் இருக்கின்றனர். நான் ''டயட்டில் இருக்கிறேன்'' என்று சொல்வது எல்லோருக்கும் ஒரு பெருமையாகப் போய் விட்டது. மேலும் எனக்கு ஆப்பிள் ஜூஸே போதும், இல்லையெனில் ஆரஞ்சு ஜூஸ் வேண்டும். இனி தினம் இளநீர் குடிக்கப் போகிறேன். தினம் சாதம் வேண்டாம், இரண்டு சுக்காவே (ரொட்டி) போதும் என்றும், 'பாய்ல்ட்' வெஜிடபிள்ஸ் தினம் சாப்பிட வேண்டும் என்றும் அமர்க்களப்படுத்தும் இளசுகளும் உண்டு. இதனால் தாய்மார்கள் தினம் என்ன டிபன் செய்வது என்று தவிக்கின்றனர். மேலும் இந்த 'டயட்' என்ற காரணத்தால் மிச்சமாகும் இட்லி, உப்புமா, அடை முதலியவற்றை வீணாக்கக் கூடாதென்று மிச்சமில்லாமல் தின்று தீர்க்கும் தாய்மார்கள் பானை போல் வயிறு பெருத்து, உடம்பு ஊதுவதுதான் மிச்சமாகிறது.

இதையெல்லாம் தவிர்க்க எதையும் திட்டமிட்டு செய்தால் சுவை மிகுந்த, செலவு குறைந்து சிற்றுண்டிகளைச் செய்து எல்லோருக்கும் அளிக்கலாம். ''மனமிருந்தால் மார்க்கமுண்டு''

பொதுவாக இப்போது இட்லி மாவை எடுத்துக் கொள்ளலாம். அதில் ஐந்து வகை சிற்றுண்டி தயாரிக்கலாம்.

1. கடையில் விற்கும் சின்னக் குழி வைத்த இட்லித் தட்டு வாங்கிக் கொண்டால் அதில் குட்டி இட்லிகள் வார்த்து சாம்பார் இட்லி, தயிர் இட்லி செய்யலாம்.
2. மறுநாள் வெங்காயம், தக்காளி, கேரட் இன்னும் காய்கறிகள் இருந்தால், அதை சிறிது காரட் சேர்த்து கறி செய்து தோசை வார்த்து, அதன் மேல் வெஜிடபிள் கறியைப் பரப்பி ஊத்தப்பம் செய்யலாம்.
3. மறுநாள் வெஜிடபிள் பிரட் தோசை செய்யலாம்.
4. அதற்கும் மறுநாள் இட்லி வார்த்து, உதிர்த்துக் கொண்டு வெஜிடபிள் கறி செய்து ருசிக்கலாம்.
5. அதற்கும் மறுநாள் இட்லி மாவில் சிறிது அரிசி மாவு, மைதா, மிளகு, ப. மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்துமல்லி சேர்த்து தேங்காய் துருவலும் சிறிது சேர்த்து அப்பள மாவில் குண்டு, குண்டாக வெள்ளையப்பம் செய்யலாம். இது குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.

எப்படிப் பார்த்தீர்களா? இட்லி மாவில் ஐந்து நாட்கள் ஓட்டி விட்டோம்!

இதைத் தவிர பிரட்டை மிக்ஸியில் போட்டு உதிர்த்து, காரப் பொடி, உப்பு சேர்த்து வெஜிடபிள் கறி சேர்த்து 'வெஜிடபிள் பிரட் உப்புமா' செய்யலாம். எல்லோரும் விரும்பிச் சாப்பிடும் உணவு இது. பிறகு ரவா அடை, சேமியா ரவா இட்லி, சேமியா, தேங்காய்ப்பால், பிரட், காய்கறிகள் சேர்த்த புலவ், ஆலு பரோட்டா, விஜிடபின் சப்பாத்தி, தால் சப்பாத்தி, டாலச் சப்பாத்தி, ஆப்பம், பிசாட் தோசை, டோக்ளா, உ. கிழங்கு வெங்காயம், காய்கறிகள், பிரட் போட்ட அவல், இடியாப்பம், (இப்போது எல்லோருக்கும் சௌகரியமாய் ரெடிமேடில் கிடைக்கிறது) ரவா விஜிடபின் உப்புமா, தவலை அடை, வெண் பொங்கல், காஞ்சிபுரம் இட்லி என சிற்றுண்டிகள் எத்தனையோ இருக்கின்றன. இவைகளை ஓரளவு எண்ணெய் விட்டுப் பண்ணலாம். காய்கறிகள், இஞ்சி சேர்ப்பதால் வைட்டமின் நிறைந்ததாகும். எல்லாக் காய்கறிகளும் கிடைக்காவிடில் வெங்காயம், தக்காளி, கேரட் இவையே போதுமானது.

விடுமுறை தினங்களில் எல்லோரும் வீட்டில் இருப்பதால் வாரம் ஒருமுறை அல்லது 15 நாட்களுக்கொருமுறை எல்லாம் வைத்து சூடாக மசால்வடை, பூரி, பஜ்ஜி, பரோட்டா, போண்டா, மசால் தோசை, கட்லெட், சமோசா என்று ஜமாய்க்கலாம். இப்பொழுதெல்லாம் நிறைய வீடுகளில் சப்பாத்தி, சப்பாத்தி என்று சப்பாத்தியை சரணடைந்திருக்கின்றனர். அவர்களுக்கு மேலே கூறியபடி வித விதமான சப்பாத்திகள் தயார் செய்து கொடுக்கலாம். எல்லாச் சிற்றுண்டிகளுக்கும் தொட்டுக் கொள்ள பொதினா சட்னி, கொத்துமல்லி சட்னி, தேங்காய் சட்னி, மாங்காய் சட்னி, வெங்காயம், தக்காளி சட்னி, காய்கறிகள் போட்ட கொத்ஸு, பாசிப் பருப்பு, காய்கறிகள் சேர்த்த தால், வெங்காயக் கறி, பயறு, தக்காளி கறி என்று எவ்வளவோ இருக்கின்றன.

இது போல நாம் ஒரு வாரத்திற்கென ''டைம்டேபிள்'' போட்டுக் கொண்டு, தினம் வகைக்கு ஒன்று என்று செய்து கொடுத்தால், அப்புறம் பாருங்களேன்? எல்லோரும் சமையலறையில் உங்களை தலைப்பைப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள்.

— சுபத்ரா

குழந்தைகள், பெற்றோரை ஏமாற்றிவிட்டு அடிக்கடி மண், கற்களை விழுங்கி விடுவதுண்டு. பின்னர் வயிற்று உபாதையினால் சிரமப்படுவதுமுண்டு. வெள்ளை முள்ளங்கிச் சாற்றைக் குழந்தைக்குப் புகட்டினால் மண், கல் வெளியே வந்துவிடும். இது ஒரு நல்ல மருத்துவ முறை!

— ஆர். ராஜேஸ்வரி.



• உமா சங்கரி



• லட்சுமி



• கோகிலா

# எங்கள் வீட்டு வேலைக்காரி!

**கோகிலா:**

"ஊர் உலகத்தில் எத்தனையோ விதமான வேலைக்காரிகள் இருக்கலாம். எங்கள் வீட்டு வேலைக்காரி வடிவு செய்த ஒரு காரியம் யாரும் சொன்னால் கூட நம்ப மாட்டார்கள்.

ஒரு சமயம் என் தோழி ஒருத்தியின் திருமண ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை நெருங்கிய சமயம் நான்கு பவுன் நகை இல்லாமல் தோழியின் அப்பா தவிக்கத் துவங்கி விட்டார். நாலு பவுன் கிடைத்து விட்டால் திருமணம் நடந்து விடும் என்ற இக்கட்டான நிலையில் அவர் பல இடங்களில் உதவி கேட்டும் கிடைக்கவில்லை. அவருடைய உறவினர், நண்பர்கள் கூட அவருக்கு உதவவில்லை. என் தோழி என்னிடம் வந்து நிலைமையைச் சொல்லி அழுததை வேலைக்காரி வடிவும் கேட்டு விட்டாள். உடனே கொஞ்சம் கூட தயங்காமல் வடிவு அவள் திருமணத்திற்குச் சேர்த்து வைத்திருந்த நான்கு பவுன் நகையைக் கொண்டு வந்து தந்து விட்டாள். என் தோழி உணர்ச்சிவசப்பட்டு வடிவு காலில் விழுந்து வணங்கி நன்றி தெரிவித்து வாங்கிச் சென்று திருமணம் செய்து கொண்டாள். ஒரே வருடத்தில் ஆறு பவுனாக வடிவுக்குத் திரும்பத் தந்தாள்.

**உமா சங்கரி:**

"இன்றைய சமுதாய அமைப்பில் வீட்டு வேலைக்காரி என்பவள் மிக முக்கியமான பெண்மணி. நம்பிக்கையான நல்ல வேலைக்காரி கிடைக்க நாம் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

எங்கள் வீட்டு வேலைக்காரி ராஜாத்தி அமைதியாக, மெதுவாக பேசுவாள். யார் வீட்டு வம்பும் பேச மாட்டாள்.

ஒருமுறை என் கணவர் ,ஊருக்குப் போகும் சமயம் என் வீட்டில் வந்து எனக்குத் துணையாய் இரவில் படுத்துத் தூங்கினாள். மறுநாள் என் இரண்டு பவுன் மோதிரத்தைக் காணவில்லை. அவள் மீது சந்தேகப்படுவதா... திணறினேன். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவளும், நானும் வீடு முழுக்க தேடினோம். கடைசியாகக் குப்பையில் கிடந்தது மோதிரம். அதையும் ராஜாத்திதான் எடுத்துக் கொடுத்தாள். அவளைச் சந்தேகப்பட்டதற்குப் பிராயச்சித்தமாக வேறொரு சமயம் எதற்கு என்று சொல்லாமல் இரண்டு மாதச் சம்பளத்தைக் கொடுத்த போது அவள் விழித்தாள்!

**லட்சுமி:**

"பேச்சி என்ற எங்கள் வீட்டு வேலைக்காரி பேச்சியம்மாள் பெருமையைப் பற்றி ஒரு நாவல் கூட எழுதலாம். வேலைகள் செய்வதில் வல்லவள். மகா கெட்டிக்காரி. என் பிறந்த ஊரான திருச்சிக்கு என் பெண்கள் இருவரையும் அவளுடன்தான் அனுப்பி வைப்பேன். ஒரு சமயம் குழந்தை செயினைத் திருட வந்த திருடனை அடித்து விரட்டி வீர சாகசமும் பேச்சி செய்திருக்

கிறாள்! எங்கள் வீட்டு விசேஷங்களில் மாடாக உழைப்பாள். அவளுக்காக மாதந் தோறும் ஒரு தொகையை பேங்கில் சேமித்து வருகிறேன்.



• ஜெயலட்சுமி



• பட்டம்மாள்



• செண்பகம்

**பட்டம்மாள்:**

எங்கள் வீட்டுக் குழந்தைகள் வீட்டை விட்டு இறங்கி ரோட்டிற்குப் போனால் கல்யாணி ஓடிப் போய் தூக்க மாட்டாள். 'அம்மா... குழந்தை போகுது.. போகுது' என்று இருந்த இடத்திலிருந்தே குரல் மட்டும்தான் கொடுப்பாள். 'ஏனோ உடனடியாக செயல்படத் தோன்றவில்லை' என்று மனம் விட்டுச் சொல்லுவாள். அவளை அது பற்றிக் கிண்டல் செய்வோம். என் அம்மா எழுபது வயதில் நோய்வாய்ப் பட்டு எழுந்திருக்க முடியாமல் இருந்த இடத்திலேயே சிறுநீர், மலம் கழித்த போது கொஞ்சம் கூட அருவருப்பு பாராமல் சுத்தம் செய்த கல்யாணியின் மற்ற குறைகள் எங்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

**செண்பகம்:**

''எங்கள் மீனாட்சி அக்கம் பக்கம் வீடுகளில் நடந்த தமாஷான விஷயங்களை சொல்லிக் கொண்டேதான் வேலை பார்ப்பாள். பேசாமல் அவளால் வேலை பார்க்கவே முடியாது. ஒரு சமயம் அவளை ''பேசாமல் இன்று மட்டும் நீ வேலை பார்த்தால் ஐம்பது ரூபாய் தருகிறோம்'' என்றேன். அவளும் பணத்திற்கு ஆசைப்பட்டு ஒப்புக் கொண்டாள். அன்று முழுவதும் அவள் ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போனாள். 'அம்மா... நீங்க ஐம்பது ரூபாய் என்ன... ஐந்து லட்சமே கொடுத்தாலும் என்னாலே பேசாமல் இருக்க முடியாது' என்று சொல்லி எங்களைச் சிரிக்க வைத்தாள். சிரிக்க சிரிக்கப் பேசும் அவள் வாழ்க்கையோ சோகமயமானது.

**ஜெயலட்சுமி:**

''வீட்டு வேலைக்காரியை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நான் சில தடவை கோட்டை விட்டதுண்டு. இருபது வயது வேலைக்காரியை வீட்டில் வேலைக்கு வைத்த ஒரே வாரத்தில் டேப்ரிக்கார்டரைத் திருடிக் கொண்டு ஓடி விட்டாள். பிறகு கஷ்டப்பட்டு அவளை தேடிப் பிடித்து டேப்ரிக்கார்டரை மீட்டோம். அடுத்து ஒரு முப்பது வயது வேலைக்காரியை வேலைக்கு வைத்த போது அவள் நாங்கள் இல்லாத நேரத்தில் வீட்டில் இருக்கும் பலசரக்கு சாமான்களை கடத்த ஆரம்பித்து விட்டாள். விஷயம் தெரிந்து அவளையும் அனுப்பி வைத்தோம். கடைசியாக அறுபது வயது அப்பாவி கிழவிதான் நல்ல வேலைக்காரியாக எங்களுக்குக் கிடைத்தாள். ஆனால் ஒரு சங்கடம். அவளை வேலை வாங்குவதற்குள் எங்களுக்குத் தொண்டை கட்டி விடும். காரணம் அவளுக்குச் சரியாகக் காது கேட்காது. 'பாத்திரத்தை தேய்த்து வை' என்றால் துணியைத் தோய்த்து வைப்பாள். ஆனால் செய்யும் வேலையில் குறை இருக்காது. எப்படியானால் என்ன, எங்கள் ராஜம், ஜம்...ஜம் என்று வேலைகளைச் செய்து கொண்டுதான் வருகிறாள்.

பேட்டி: **விஜயா கண்ணன்.**

# எல்லாமே பேச்சில் தான் இருக்கிறது!

'மதுரைக்கு வழி வாயிலே' என்பார்கள். 'வாயுள்ள பிள்ளை பிழைக்கும்' என்பதும் உங்களுக்குத் தெரியும்.

உங்கள் குரலை நீங்கள் கேட்டதுண்டா? இல்லையெனில், 'டேப்'பில் பதிவு செய்து கேளுங்கள். அல்லது அறையின் ஒரு மூலையில் நின்று, காதை குவித்துக் கொண்டு பேசிப் பாருங்கள். குரலின் தன்மை புரிய வரும்.

விருந்திலாகட்டும், வியாபார ஸ்தலத்திலாகட்டும், டெலிஃபோனிலாகட்டும்... இந்தக் குரல்தான் உங்களை இப்படிப்பட்டவர் என்று மற்றவர்களுக்கு உணர்த்துகிறது.

டாக்டரின் இதமான குரல்தான் நோயாளியை குணப்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது. விற்பனை பெண்மணி தனது நம்பிக்கை தொனிக்கும் பேச்சின் மூலம் வாடிக்கையாளர்கள் தலையில் நிறைய பொருட்களை கட்டி விட முடியும். ஒரு ரவிக்கைத் துண்டுதான் எடுக்கப் போயிருப்பீர்கள். லேட்டஸ்ட் டிஸைன் புடைவைகளை 'சும்மா பாருங்கள்' என்று காண்பித்து வாங்கத் தூண்டும் லாகவம் பேச்சில் தானே இருக்கிறது!

சிலர் முணுமுணுப்பது போல் பேசுவார்கள். காதில் விழாது. 'என்ன மேடம்?' என்று திருப்பிக் கேட்டு நீங்கள் செவிடராக மற்றவர்கள் கருதும் நிலைக்குத் தள்ளப்படுவீர்கள். ஒரு சிலரோ 'ஜெட்' வேகத்தில் பேசி 'கிர்'ரென்று தலை சுற்ற வைத்து விடுவார்கள். நிறுத்தி நிதானமாகப் பேசும் குணம் நம்மில் எத்தனை பேரிடம் உள்ளது?

இண்டர்வியூவிற்குப் போகும் பெண் நிறைய தயார் செய்து கொண்டு போயிருப்பாள். தேர்வு செய்யும் கமிட்டியினர் கேள்வி கேட்கும் போது, திடீரென அவளுக்குத் தொண்டையில் பாறாங்கல் அடைத்துக் கொண்டது போலாகி விடும். வேலை கிடைத்தாற் போலத்தான்.

இதற்கெல்லாம் என்ன செய்வதாம்? வார்த்தைகளை ஒழுங்காக உச்சரிக்க வேண்டும். நீங்கள் பேச்சின் மூலம் சாதிக்க, நாக்கு, உதடு, பற்கள் சரிவர ஒத்துழைத்தால் தான் முடியும்.

பேச்சில் குறைபாடுள்ளவர்கள் தினமும் 30 நிமிடமாவது நிலைக்கண்ணாடி முன்



அமர்ந்து உயிரெழுத்துக்களை சீராக உச்சரித்துப் பழக வேண்டும். பத்திரிகை அல்லது புத்தகத்தை உரக்கப் படிக்கலாம். முதலில் மெதுவாக... பிறகு வேகமாக.

சிலேட்டில் பலப்பத்தை இழுப்பது போல 'கிறீச்'சென்று ஒலிக்கும் பெண்மணிகள் ஆண்களைப் பொறுத்தவரை கெட்ட கனவுதான். இதற்குத் தொண்டையிலும், தாடையிலும் ஏற்படும் இறுக்கந்தான் காரணம்.

சிலர் கனஸ்வரத்தில் பேசுவார்கள். கேட்பவர்களுக்கு 'ஐயோ பாவம்' என்றிருக்கும். அவர்கள், ஆழ்ந்த சுவாசிப்புடன் வாக்கிங் போவது நல்லது. திரும்பி வந்ததும் ஒரு நியூஸ் பேப்பரை எடுத்து உரக்கப்

படிக்கலாம்.

நல்ல குரல் சுவாசக் கட்டுப்பாட்டை பொறுத்ததேயன்றி, சுவாசப் பையின் திறனை பொறுத்ததல்ல.

சிலருடைய குரல் எந்த ஜீவனுமின்றி ஒலிக்கும். கேட்பவர்களுக்கு வறண்ட பாலைவனத்தில் நடப்பது போலிருக்கும். 'போர்' என்று கூவத் தோன்றும். இது போல் 'டல்வாய்ஸ்' உடையவர்கள், வெற்றிகரமாக திகழும் அண்டை வீட்டு பெண்மணியின் பேச்சைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். தானும் குரலில் அந்த நயத்தை சேர்த்துக் கொள்ள வேண்டும். அடிக்கடி சிரித்துப் பழகுவது நல்லது. ஹோ, ஹா, ஹி, ஹூ போன்ற லயமான சொற்களை உபயோகிக்க வேண்டும்.

ஒழுங்கான பயிற்சியின் மூலம் ஒருவர் தன் குரலை உயர்த்தவும் முடியும். தணிவாக்கவும் முடியும். வாய் விட்டு பாடுதலும், படித்தலும் நல்ல பயிற்சியாகும்.

'கமாண்டிங் வாய்ஸ்' உள்ளவர்களுக்கு எங்குமே மரியாதை கிடைக்கிறது.

சும்மா பேச்சுக்கு சொல்வதாக




நினைத்து விடாதீர்கள். நீங்களே 'டெஸ்ட்' பண்ணிக் கொள்ளலாம். பக்கத்து போர்ஷன் மாமியை எடுத்துக் கொள்ளுங்களேன். காப்பிப் பொடியோ, அஞ்சோ பத்தோ எத்தனை கம்பீரமாக கேட்டு வாங்கிக் கொண்டு விடுகிறார்!

விஷயத்தை எத்தனை சுருக்கமாக பேசுகிறார்களோ, அவர்கள்தான் கெட்டிக்காரர்கள். வளவளவென்று பேசுகிறவர்கள் நேரத்தை மட்டுமின்றி, நண்பரையும் இழந்து விடுகிறார்கள். நாலு வார்த்தையில் ஒரு விஷயத்தை சொல்லத் தெரியாதவர், ஒரு மணி நேரம் பேசினாலும் புரியுமா என்ன!

— தேவநாதன்

பிரஷர் குக்கரை உபயோகப்படுத்தாத நேரங்களில் மூடி வைக்கக் கூடாது.

— சவிதா.









❛❛எனது நம்பிக்கைக்கு உரிய
மைசூர் சந்தன சோப் வழங்கிடும்
மகத்தான புதிய படைப்பு❜❜
அறிமுகப்படுத்துகிறோம்
புதிய
"BEST QUALITY"
Mysore BAR
100% BLUE DETERGENT
from the makers of TOTAL DETERGENT BAR
FROM THE HOUSE OF MYSORE SANDAL SOAP
உங்களுக்கு விருப்பமான மைசூர் சாண்டல் சோப் தயாரிப்பாளர்கள் ஒரு இனிய அற்புதத்தை அளிக்கிறார்கள்.
மைசூர் டிடர்ஜென்ட் பார்:- நூறு சதவிகித நீல டிடர்ஜென்ட் பார் ஆன இது உங்களது துணிகளுக்கு மென்மையான சலவை அளிக்கிறது. ஒவ்வொரு சலவைக்கும் பின்னும் புதுமையான ஒளிமிக்க தோற்றத்தை துணிகளுக்கு அளிக்கிறது.
மைசூர் டிடெர்ஜென்ட் பார்:- டிடர்ஜென்ட் பார்களிலேயே சிறந்தது பல சலவைகளை அளிக்கும் சக்தி வாய்ந்தது.
சக்தி வாய்ந்த வெளுக்கும் தன்மையால்
உங்கள் ஆடைகளை பிரகாசிக்கச் செய்கிறது
FROM THE HOUSE OF MYSORE SANDAL SOAP
கர்நாடகா சோப்ஸ் அண்ட்
டிடெர்ஜென்ட்ஸ் லிட்.
பெங்களூர் 560 055.

குறுநாவல்

குடிவந்த் இரண்டு தினங்களுக்குள் தேவகியும் உமாவும் படு சிநேகிதிகளாகி விட்டார்கள். எத்தனையோ ஜன்மத்து நட்பு போல ஏராள நட்பை ஏற்படுத்திக் கொண்டு விட்டார்கள். தேவகியின் புருஷன் சோமுவே கேலி செய்யும் அளவுக்கு அப்படி இறுக்கமாகிப் போனார்கள்.

தேவகிக்கு அந்த ஊர் புதிது. ஜனங் களும்தான்! கணவன் சோமு கவர்ன் மெண்ட் உத்தியோகஸ்தன் என்பதால் நிலை யாய் ஐந்து வருடங்கள் கூட ஓர் ஊரில் வசிக்க முடியாத வாழ்க்கை. குடிவந்த ஊரைப் புரிந்து கொண்டு, அதன் விலை வாசிகளை, மனிதர்களை, பொழுது போக்கு அம்சங்களை அப்போதுதான் முழு சாய்த் தெரிந்து கொண்டிருப்பார்கள். அதற் குள் வேறோர் ஊருக்கு மாற்றலாகி விடும்.

இப்போது சரி, அதிகக் கஷ்டமில்லை. குழந்தை வாசுவுக்கும் மூன்று வயசுதான் ஆகிறது. அவன் பெரியவனாகும் போது தான் கஷ்டம். பள்ளியும் படிப்பும் மாறும் போது நன்றாகப் படிப்பானோ என்னவோ? முதலில், பள்ளியில் இடம் கிடைப்பதே இமாலயக் கஷ்டமாயிற்றே...!

"என்னக்கா... மூணு வயசாகுது! இன் னும் உங்க பிள்ளை வாயிலே விரல் போட் டுக்கிறான்?"

வந்த அன்றைக்குத் தேவகியிடம் இப் படிக் கேட்டாள் உமா. தேவகிக்கு எரிச்சல். உடம்பு கொள்ளாத எரிச்சல். 'என் பிள்ளை விரலையும் போட்டுக் கொள் வான்... உரலையும் போட்டுக் கொள் வான்... உனக்கென்ன வந்தது?' எனக் கேட்பதற்கு நாக்கு நுனி வரை நினைத்து விட்டுக் கஷ்டப்பட்டு மௌனம் காத்தாள்.

பொதுவாகவே சட்டென்று உணர்ச்சி வசப்படும் தேவகி அந்தச் சந்தர்ப்பத்தில் அமைதி அனுஷ்டித்தாள் என்றால் அதற்கு ஒரே காரணம்தான் இருந்தது.

'புதிய ஊரில் மிகச் சிரமப்பட்டு வாட கைக்குக் கிடைத்த வீட்டை, வீட்டுச் சொந்தக் காரியின் மகளுடன் சண்டை போட்டுக் கெடுத்துக் கொள்ள வேண்டாமே...' என மனசில் சிந்தனை ஓடிற்று. அமைதியை அடைகாத்தாள். என்றாலும் இதயத்தில் கோபமிருந்தது. ஊமைக் கோபம்.

ஆனால், தேவகியின் கோபம் ரெண்டு நிமிஷங்கூட நீடிக்கவில்லை. நீடிக்க விட வில்லை உமா.

கைவண்டியில் வழிய வழியச் சாமான் களை ஏற்றிக் கொண்டு வீட்டிற்கு வந்த தேவகியின் நெஞ்சில் பயம் அறுவடை ஆனது. இத்தனை சாமான்களையும் எப் படி மாடி வரைக்கும் கொண்டு செல்வது என்ற பயம். பீரோ, ஆட்டுக்கல், அம்மி, பாத்திரங்கள், மேசை, நாற்காலி என நிறை மாதக் கர்ப்பிணியாய் வண்டி பிதுங்கிக் கொண்டு நின்றது. சோமுவும் தேவகியும் பத்து வருடத் திருமண வாழ்க்கை நடத்தி யதன் அடையாளங்களாய் வண்டியின் உச்சி வரைக்கும் சாமான்கள். —

வேம்பத்தூர் லலிதா



பாடாய்ப் படுத்தும் வாசுவையும் கவனித்துக் கொண்டு, வண்டியில் இருந்து எந்தப் பொருளும் காணாமற் போகாமலும் பார்த்துக் கொண்டு இத்தனை சமாசாரங்களை மாடி வரைக்கும் எப்படிக் கொண்டு போவது? மலைத்துப் போனாள் தேவகி. அவளது கலவரத்தை நீடிக்க விடாமல் உதவிக்கு வந்தாள் உமா. 'நமக்கென்ன வந்தது... குடித்தனக்காரர்கள் எப்படியாவது ஏற்றிக் கொள்ளட்டும்' எனச் சும்மா இருக்காமல் அத்தனை படிக்கட்டுகளிலும் ஏறி இறங்கி, பூரா சாமான்களையும் அவள் மாடியில் ஏற்றிய லாகவம்... அசந்து போனாள் தேவகி...! 'ச்சே... அவசரப்பட்டு இந்த நல்ல பெண்ணிடம் சண்டை போட்டுக் கொள்ள இருந்தோமே!'' என்று நினைத்தாள்.

''நீ எதுக்கும்மா கஷ்டப்படறே? நாங்க பார்த்துக்கிறோம்'' சம்பிரதாயத்துக்குச் சொல்லிப் பார்த்தாள். உமா கேட்டால் தானே? ஓடி ஓடி உதவி செய்தாள். அது மட்டுமில்லாமல் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் வீட்டுக்குள் இடம் பார்த்து நிரப்பித் தேவகி ஒழுங்குபடுத்துவதில் மும்முரமாயிருக்கும் போதே, எவர்சில்வர் பேசினில் எதையோ மூடிக் கொண்டு வந்தாள் உமா.

உப்புமா!

''உமா... எதுக்கு இதெல்லாம் கொண்டு வர்றே?''

''சும்மா இருங்க அக்கா! வந்த அன்னிக்கு நீங்க இத்தனை வேலை பார்த்ததே அதிகம். நாளையிலேருந்து அடுப்பு பத்த வையுங்க போதும். குழந்தைக்குப் பால்கூட எடுத்து வந்திருக்கேன்...''

கல்மிஷம் இல்லாமல் பழகியது மட்டுமில்லை. சமயமறிந்து உதவியும் செய்த உமாவை நிரம்பவும் பிடித்துப் போயிற்று தேவகிக்கு.

'அக்கா அக்கா' என்று அவளும் தேவகியிடம் நிரம்ப ஒட்டுதலாயிருந்தாள்.

உமா தேவகியை விட ஏழெட்டு வயது சின்னவள். அவளுடைய குழந்தைத்தனமும் சுறுசுறுப்பும் மேலும் ஐந்து வருடம் இளையவளாகக் காண்பித்தது.

சாதத்துடன் சேர்ந்து மேல் தட்டில் கூட்டுக்கு வேக வைக்கும் பொழுது கூட்டு அதிகம் குழைந்து விடுகிறது. இதைத் தவிர்க்க சாதம் குக்கரில் வைத்து விட்டு மூடி போட்டு ஆவி வந்தபின் கூட்டுக்கு போட்டு வைத்திருக்கும் பாத்திரத்தில் ஃபிரிட்ஜில் வைத்த தண்ணீரை விட்டு குக்கரில் வைத்து மூட வேண்டும். இத னால் நன்றாக வேகும். ஆனால் அதிகம் குழையாது. எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

— ஜனனி ராம்துரை.

மாடி போர்ஷன் வாடகைக்கு விட்டு விட்டுக் கீழே உமா குடும்பத்தார் வசித்தனர். உமாவைத் தவிர அவளுடைய அம்மாவும், பாட்டியும் அந்தக் குடும்பத்தில் இருந்தார்கள். தன் புருஷன் வடக்கே மருந்து ஆலையில் வேலை பார்ப்பதாக உமா தெரிவித்தாள்.

'நீ, ஏன் உன் புருஷனுடன் போகாமல் இங்கே இருக்கிறாய்?' என உமாவிடம் மேலும் நெருக்கமான சமயத்தில் விசாரிக்க வேண்டும் என்று தேவகி நினைத்துக் கொண்டாள்.

பீரோவை சுவர் மூலையில் சமர்த்தாக உட்கார வைத்து, ஆணி அடித்து சாமி படங்களை உயரத் தொங்க விட்டு, பாத்திரங்களை முறைப்படுத்தி... ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து சீர் செய்வதிலேயே பொழுதை .கரைத்துக் கொண்டிருந்தாள் தேவகி.

கண்ணாடி பாட்டில்களை குழந்தைக்கு எட்டாத உயரத்தில் வைத்து, பரண் மீது ஸ்டெப்னி பாத்திரங்களை ஏற்றி, வீட்டை பூரா குளிப்பாட்டி... ஏ அப்பா! எத்தனை வேலைகள்...

சாயங்காலத்துக்கு மேல் திரும்பவும் வந்தாள் உமா.

''அக்கா...! தொந்திரவுக்கு மன்னிக்கணும்.''

''வா உமா! எனக்கு ஒன்றும் தொந்திரவில்லை... உனக்குத்தான்.''

''அக்கா, காய்ச்சலுக்கு பேக்ட்ரீம் மாத்திரை கொடுக்கலாமா?''

''யாருக்குக் காய்ச்சல்?''

''என் குழந்தைக்கு''

''அடப் பாவமே... எத்தனை வயசாகுது?''

''எட்டு மாசமாகுது...''

''கொடுக்கலாம் உமா! இருந்தாலும் டாக்டரை கன்ஸல்ட் பண்றது நல்லது. பீடியாட்ரிக் டேப்ளட்தானே? ம்... எத்தனை நாளா காய்ச்சல்?''

பதில் சொல்ல வந்த உமா துள்ளி எழுந்தாள். ''குழந்தை அழறான்... நான் போகறேன்...'' மானாக எழுந்து ஓடினாள்.

''கீழே ஹாலிலே குழந்தை அழற சப்தம் மாடியில் இத்தனை அறைகளைக் கடந்து இந்தப் பெண்ணுக்குக் கேட்டிருக்கிறதே...!'' என, உமா போனதும் அங்கே வந்த தேவகியின் புருஷன் வியப்பு காண்பித்தான்.

''அதுக்குப் பேர்தாங்க தாய்மை...! உடம்பு எங்கேயிருந்தாலும் மனசுப் பூரா குழந்தையைச் சுத்தி தவழ விடறவதான் தாய்...'' என்றாள் தேவகி.

''இவளோட புருஷன் என்ன பண்றாராம்?''

''எங்கேயோ போபால்லே வேலை பார்க்கிறாராம்...''

''இந்தப் பெண் அவர் கூடப் போகலை?''

''இதோ பாருங்க...! நீங்க எப்படி இந்த ஊருக்கும் வீட்டுக்கும் புதுசோ அதை விட

அதிகமாவே நான் புதியவள். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?''

''போபால்லே அவ புருஷனிருக்கிற சங்கதி எனக்கா தெரிஞ்சது? உனக்குத் தானே?'' என அவளை மடக்கினான் சோமு. இந்தச் சமயத்தில் மாடிப்படியில் தடதடத்து ஏறி வந்த உமா,

''வாசல்கதவை லாக்போடலாமாக்கா...? யாரும் வெளியே போகப் போறதில்லையே?''

''இல்லை உமா...! லாக் போடலாம். ஆங்... அது சரி, குழந்தைக்கு எப்படி இருக்கு? டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போறியா?''

''இல்லைக்கா...! எங்க பாட்டி, 'கஷாயம் கொடு, போதும்'ன்னு சொல்லிட்டா..''

''காய்ச்சலை வச்சிக்கிட்டிருக்கக் கூடாது உமா...''

''வாஸ்தவம்தான்...! பாட்டிக்குத் தெரியலையே!''

''குழந்தை உன்னோடதா பாட்டியோடதா?''

தேவகி இதழ் கடைசியில் சிரித்தபடி உள்ளே போனாள். தன் பிள்ளைக்கு வாங்கி வைத்திருந்த மாத்திரையில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

''பெண் குழந்தையா... பிள்ளையா?''

முகத்தில் வெட்கச் சிவப்பு.

''பிள்ளைதான்க்கா... அவனோட அப்பாவாட்டம் நல்ல சிவப்பு...''

''என்ன பேர் வச்சிருக்கே?''

''முதல் குழந்தைக்கு அவரோட அப்பா பெயரையே வைக்கணும்ன்னுட்டார். வைத்தீஸ்வரன்னு வைச்சு வைத்தின்னு கூப்பிடறோம்...''

''குழந்தைக்கு என்ன கொடுக்கிறே?''

''எட்டு மாசமாறது... என்கிட்டேதான் குடிக்கிறான்.''

''அதுதாம்மா நல்லது...''

''என்னத்தை நல்லது போங்கோ...'' அலுத்துக் கொண்டாள். பார்வையை ரகசிய வட்டம் வீசி பக்கத்தில் யாருமில்லை என்று உறுதி செய்து கொண்டதும் குரலை தணித்து. ''பல்லு முளைக்கப் போறது போலிருக்கு.. அப்பப்ப கடிச்சு விட்டுறான்.. படவா..''

அப்புறம் ரெண்டு பேரும் நிறையப் பேசினார்கள். எட்டு மாசத்திற்கே அவன் அடிக்கும் லூட்டி, அவன் பிறந்த நாளைக்குத் தன் நாத்தனார் மோதிரம் பிரசண்ட் பண்ணியிருப்பதாக அறிவித்தது, எப்படியும் ஒரு பெண் குழந்தையாவது பெற்றுக் கொள்ள வேண்டியதன் அபிலாஷை என எல்லாவற்றையும் தெரிவித்தாள் உமா.

தேவகி சும்மா இருப்பாளா? (அதைவிட 'சும்மா இருக்கலாமா?' என்பதே சரி.) இப்போது கல்யாணமான உமா இத்தனை சங்கதிகள் பேசும்போது பத்து வருஷ தாம்பத்தியத்தில் அவள் எவ்வளவு விஷயங்கள் பேச வேண்டும் – பேசினாள்!

மணிக்கணக்காக இவர்கள் பேச்சு நீண்டு

பூந்தி லட்டுக்கு, பூந்தி செய்யும் பொழுது, சிலருக்கு முத்து முத்தாக வரவில்லை என்பது பெரிய குறை. அதற்கு பூந்தி தேய்க்கும் கரண்டியில், சிறிது எண்ணெய் தடவி விட்டு, பின் கரைத்து வைத்துள்ள மாவை சிறு கரண்டியால் எடுத்து விட்டு, லேசாக தட்டினால் போதும் முத்து முத்தாக விழும். அதோடு மாவில் ஒரு ஸ்பூன் நெய் அல்லது டால்டா, அல்லது ஆயில் வெது வெதுப்பான சூட்டில் விட்டுக் கலந்து பூந்தி தேய்த்தால் முத்து முத்தாக விழும்.

— பாலா.

கொண்டிருக்கவும் சோமு அலுத்துப் போய்த் தூங்க ஆரம்பித்து விட்டான்.

குழந்தைக்கு பிளாஸ்கில் பால் ரெடி பண்ணி விளக்குகளை அணைத்துவிட்டுத் தேவகி பக்கத்தில் வந்து படுக்கும் போது லேசாகக் கண் விழித்துவிட்டுத் தூக்கத்தின் இரண்டாவது அத்தியாயத்துக்குப் போனான்.

''தூங்கிட்டீங்களா...?''

''தூங்கறது மட்டுமா...? நீ பேசி முடிச்சு வர்றதுக்குள்ளே நான் வேலையிலிருந்து ரிடையரே ஆயிடுவேன்... அப்படி என்னதான் பேசுவீங்களோ...? ஆமா, அந்தப் பெண் ஏன் புருஷன் கூட இருக்காம பிறந்த வீட்டிலே இருக்காளாம்?''

''அடடா... அதை கேட்க மறந்துட்டேனே...!''

''உடனே இப்ப இறங்கிக் கேட்க ஓடிராதே... அப்படி என்னதான் மணிக்கணக்கா பேசுவீங்களோ...'' கொட்டாவி விட்டான் சோமு. கலபத்தில் தூங்கியும் போனான்.

மறுநாள் காலை உமாவின் அம்மா, ''சாமானெல்லாம் எடுத்து வச்சியாம்மா... வீடெல்லாம் சௌகரியமா இருக்கு இல்லையா?'' என்றபடி மாடி ஏறி வந்தாள்.

அவளிடம் ஞாபகமாக தேவகி, ''உங்க பேரனுக்கு இப்ப காய்ச்சல் எப்படி இருக்கு?'' அக்கறையுடன் விசாரித்தாள்.

பெருமூச்சு விட்டாள் செண்பகம் மாமி. கண்களில் தத்தளித்தாள். இதற்குள் சோமு, ஆபீஸ் கிளம்பத் தயாராய் தேவகியை சமீபிக்கவும் ஒன்றும் பேசாமல் கீழே இறங்கிப் போய் விட்டாள்.

''அப்ப நான் ஆபீஸ் போயிட்டு வரேன் தேவகி...''

''ம்... சாயங்காலம் சீக்கிரம் வந்துடுவீங்க இல்லே?''

''எதுக்குக் கேட்கிறே?''

''ரெண்டு பேரும் உமாவோட குழந்தையைப் பார்த்துட்டு வருவோம்...''

''ஏழு மைல் தள்ளியா போகப் போறோம்.. மாடி இறங்கினா அவங்க வீடு தானே! இதுக்கு ஆபீஸ் விட்டு நான் சீக்கிரமே வேற வரணுமாக்கும். வா, இப்ப

கூட போய்ப் பார்த்துட்டு அப்படியே நான் கிளம்பறேனே!''

''உங்களுக்கு ஏதாவது தெரியுதா? குழந்தையை வெறுங் கையோட பார்க்கப் போவாங்க? நீங்க வரச்சே ஒரு வயசுக் குழந்தைக்கு சேருகிற மாதிரி ஏதாச்சும் டிரஸ் எடுத்துக்கிட்டு வாங்க... சும்மா போகக் கூடாது..''

''ஓஹோ... பார்மாலிட்டிஸ்...! மகாராணி உத்தரவு...'' என சிரித்து விட்டுக் கிளம்பினான்.

கணவனை ஆபீஸ் அனுப்பி விட்டு, கறிகாய் வாங்குவதற்குக் கீழே இறங்கின தேவகி வாசல் திண்ணையில் கண்களில் ஈரத் திரையுடன் உட்கார்ந்திருந்த உமாவைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனாள்.

''உமா... என்ன இது?'' என்றதும் சமாளித்து கண் துடைத்தாள்.

''எதுக்கு இப்படிச் சோகமா உட்கார்ந்திருக்கே!''

''ப்ச்... ஒன்றுமில்லைக்கா...''

''பொய்...! முகத்திலே உற்சாகத்தையே காணோமே... என்னடி ஆச்சு?''

அவளுடைய கண்களில் மேலும் ஜலம் கொப்பளித்தது.

''குழந்தை ராத்திரியெல்லாம் தூங்கவேயில்லை... காய்ச்சல்...''

''அசடு...! டாக்டர்கிட்டே கூட்டிண்டு போன்னு நான் நேத்திக்கே சொல்லலை. அந்த மாத்திரை கொடுத்தியா... இப்ப எப்படி இருக்கு?''

''பரவாயில்லை அக்கா! இப்ப தூங்கறான். சின்னச் சப்தம் கேட்டாலும் எழுந்துருவான். மெள்ளவே பேசுங்க...'' என்றாள்.

'நோயுற்ற குழந்தை தூங்க வேண்டுமென்பதில்தான் அந்தத் தாய்க்கு எவ்வளவு அக்கறை?'

''நேத்திக்கு அவனுக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டினேன். வெந்நீரிலேயே நம்ம முழங்கையை விட்டுப் பார்த்தா நமக்கு அது இதமா இருக்கணும். அப்போதானே அந்தக் சூட்டைக் குழந்தையும் தாங்கும்? உடம்பெல்லாம் முதல்லே கடலை மாவுலே தேய்ச்சுக் குளிப்பாட்டிட்டுத் தலைக்கு ஜலம் விட்டேன். முதல்லே தலைக்கு ஜலம் விட்டால் ஜலதோஷம் பிடிச்சிண்டுறும். உடனே துண்டாலே தலையைத் துவட்டிட்டுச் சாம்பிராணிப் புகை போட்டுட்டேன். அப்படியிருந்தும் குழந்தைக்கு ஜுரம் வந்துடுத்தேக்கா...''

அவளின் விழிகளில் சர்வ ஜாக்கிரதையாகக் குழந்தையைக் கவனித்தும் அதற்கு உடம்புக்கு வந்து விட்டதே என்ற கவலையிலும் துக்கத்திலும் கண்ணீர் கிளம்பினது.

தேவகி ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த போது தூளித் துணியின் வெள்ளை மடிப்பு காற்றுக்கு சன்னமாய் அசைந்து கொடுத்தது.

''குழந்தையை வேணா வந்து பாருங்களேன் அக்கா...'' என்றாள் உமா.

''இப்ப தூங்கறான். சாயங்காலம் ஆகட்டும் உமா. அவரும் வந்திடுவார்...''

தற்செயலாக தலை திருப்பின தேவகி அக்கம் பக்கத்து வீடுகளில் சில பெண்கள் சேர்ந்து கொண்டு தன்னைப் பார்த்துப் பரிகாசமாக சிரிப்பதை பார்த்தாள். 'எதற்காக இவர்கள் என்னைச் சுட்டிக் காட்டி கேலி பேசுகிறார்கள்?' சுருக்கென்று கோபம் காண்பித்தாள். ஒன்றும் சொல்லாமல் கிடுகிடுவென மாடி ஏறிப் போனாள்.

மாலை பாபா சூட்டையும், பிஸ்கெட் பாக்கெட்டையும் சுமந்து கொண்டு தேவகியும், சோமுவும் கீழிறங்கி வந்தார்கள். இவர்



கள் பிரவேசத்தைப் பார்த்ததும், செண்பகம் மாமியின் கண்களில் 'மளுக்'கென்று கண்ணீர் உடைந்தது. துயரத்தால் மார்பு விம்மித் தணிந்தது.

''உமா எங்கே?'' என்றாள் தேவகி. மாமி முந்தானை நுனியில் கதறினாள். பக்கவாட்டில், வெளியே தாழ்போட்டிருந்த அறையைக் காண்பித்தாள்.

''உமா உள்ளேயா இருக்கிறா?''

''ம்'' — குரல் தழுதழுத்தது.

''பின்னே வெளியே தாழ்ப்பாள் போட்டிருக்கீங்க... ஏன்?''

''இன்னிக்கு அமாவாசை இல்லையா?'' என்றாள் உமாவின் அம்மா. பேச்சுக் குரல் கீச்சுக் குரலாயிருந்தது

தேவகி நெற்றியில் வியந்தாள்.

''அமாவாசையா இருந்தா என்ன?''

அதற்குப் பதில் சொல்ல முடியாமல் அந்த அம்மாள் தலையிலடித்துக் கொண்டு 'ஓ'வென கதறினாள். தேவகியின் வயிற்றில் சன்னமாக 'திடுக்' எட்டிப் பார்த்தது. அத்தனை துக்கமும் அணை மீறிக் கொண்டு அழுகையாக சங்கமிக்க பிரவாகமாக கண்ணீர் கண்ணீர் மற்றும் கண்ணீர்.

சோமுவுக்கு மார்பில் முயல் உதைத்தது.

''எ... எதுக்காகம்மா... நீங்க அழறீங்க? உங்க பெண்ணுக்கு என்ன?''

''நீ... நீங்களெல்லாம் நினைக்கிற மாதிரி



'ஸார், தந்தி' என்ற குரல் கேட்டவுடன் நமக்குப் பதற்றம் ஏற்படுகிறது. அதைப் பார்த்த ஒரு தபால் ஊழியர் கூறியது: அவர் கையில் கொண்டு வரும் உறையின் நிறத்தைக் கொண்டே அது எப்படிப்பட்ட செய்தி என்று முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்.

வெள்ளை உறை—சாதாரணச் செய்தி.
நீல உறை — துக்க(இறப்பு)ச் செய்தி.
பூப்போட்ட உறை—வாழ்த்துச் செய்தி
இப்படி இனங்கண்டு கொள்ளலாம்.

— ஆர். ஜானகி.

---

கிடையாது ஸார் உமா! அவ சித்தம் கலங்கினவள். ஊர்க்காரரெல்லாம் சொல்றது போல அவளுக்குப் பைத்தியம். இன்றைக்கு அமாவாசை இல்லையா... அதனாலதான் அவளை அடைச்சுப் போட்டிருக்கு...'' கதறினாள். முகம் வாடல் கத்தரிக்காய் தினுசில் இருந்தது.

அவர்களுக்கு இதயத்தின் மையமான பிரதேசத்தில் இடி விழுந்த தினுசில் ஏராளத்துக்கு வலி எடுத்தது. உமாவுக்குப் பைத்தியமா? பார்த்தால் அப்படியா தோன்றியது?

''உமாவுக்கு நிச்சயம் பண்ணியிருந்தது அவளோட அத்தை பிள்ளையைத்தான்! குழந்தையிலேருந்து ஒருத்தருக்காக ஒருத்தர்ன்னு வளர்ந்து வந்தாங்க... கல்யாண நிச்சயம் கூட ஆச்சு... அந்தப் பையனுக்கு போபால்லே கெமிஸ்டா வேலை! மாப்பிள்ளை அழைப்பன்னிக்கு கரெக்டா பிளைட்லே வந்து சேர்ந்துறதா சொல்லியிருந்தான். நாங்களும் எதிர்பார்த்து கல்யாண மண்டபத்திலே கோலாகலமா காத்துக்கிட்டிருந்தோம். அவன் வரவேயில்லை அன்னிக்கு பூரா...! மறுநாள் காலைல வந்தான் செய்தியா! ஆமா... போபால் விஷ வாயுலே இறந்து போனவங்க பட்டியல்லே அவனும் ஒருத்தனா ஆயிட்டான்.'' மேலும் தொடர முடியாமல் ''அய்யோ அதை எப்படிச் சொல்லுவேன்'' முகத்தில் கதறலுடன் அறைந்து கொண்டாள் மாமி.

தேவகியும் அவள் புருஷனும் முகத்தை சலவையிலிருந்து வந்த சவமாக மாற்றினர்.

''அந்தச் சம்பவமும் எங்க அலறலும் ரொம்பப் பாதிச்சுடுத்து உமாவை. 'ஐய்யோ... அத்தான்'னு ஒரு அலறல் போட்டா பாருங்கோ அவ்வளவுதான். புத்தி பெரண்டு போயிடுத்து அவளுக்கு. புடைவை ஜாக்கெட்டை கிழிக்கிற பைத்தியமில்லை. தன்னுள் தானே அடங்கி விட்டாற்போலிருந்த அவளுக்கு தனக்கு அத்தைப் பிள்ளையுடன் கல்யாணமாகி விட்டதாகவே எண்ணமும், நம்பிக்கையும் உண்டாயிருச்சு. அவன் கூட குடும்பம் நடத்திக் குழந்தையும் பெத்துண்டதாகவே கற்பனையிலே வாழ்ந்துண்டிருக்கா. அவ அந்த 'கற்பனையிலே தன்னை இழந்து பேசுவதையும் பழகுவதையும் கண்டா அவளை பைத்தியம்ன்னே சொல்ல முடியாது....'' ஜீவநதியாக கண்களில் கண்ணீர்.

தேவகியும் சோமுவும் எச்சில் விழுங்கினார்கள். அவர்களால் நம்பவே முடியவில்லை.

லட்சுமி பாட்டி — மாமியின் அம்மா — தள்ளாத வயதில் தள்ளாடிக் கொண்டே வந்தாள். அவளுடைய சொற்களும் ஈரம் சொட்டச் சொட்ட இருந்தன.

''நான் செண்பகம்கிட்டே படிச்சுப் படிச்சு சொன்னேன் இந்த வீட்டை வாங்க வேண்டாம்ன்னு. கேட்கலை இவ! பத்து அம்பது வருஷத்துக்கு முன்னாலே இதிலே சின்ன வயசு பொண்ணு ஒருத்தி புருஷன் பண்ணின கொடுமைகளிலே புத்தி சுவாதீனமில்லாம செத்துப் போனா. அதிலேயிருந்து இந்த வீட்டிலே ஏதாவது ஒரு பெண்ணுக்கு சித்த பிரமை ஆயிடும். எங்க உமாவுக்கும் இந்த வீட்டிலே் குடியேறினதுக்கு அப்புறமாதான் பைத்தியம் பிடிச்சது...'' கதறினாள்.

''நாங்க அம்மாவும் பெண்ணும் ரெண்டு விதவைகள் இந்த வீட்டுக்குப் போதாதா...? கல்யாணம் ஆகாமலே உமா வாழ்க்கையை இழந்துட்டு உட்கார்ந்திருக்கா...'' மீண்டும் 'கோ'வென்று குரலெடுத்துக் கதறினாள் செண்பம் மாமி.

தேவகியும் சோமுவும் மனசு பூராவும் கஷ்டம் உடுத்தினார்கள்.

தேவகி தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

''மாமி...! உமாதான் ரகளை பண்றவ கிடையாதுன்னு சொன்னீங்களே...! பின்னே எதுக்காக பூட்டி வைச்சிருக்கீங்க?''

''சாதாரண நாளிலே அவ சமர்த்துதான்ம்மா.... ஆனா, அமாவாசை, பௌர்ணமின்னா அவ பண்ற களேபரம்... அப்பா! எங்க ரெண்டு பேருக்கும் பிராணன் போயிடும்... ராத்திரி ஆக ஆகக் கதவை இடிப்பா பாருங்கோ... அந்த இடி... வீடே இடிஞ்சுடும் போல பயமாயிருக்கும். இந்த ரெண்டு நாள்லேயும் காலம்பறவே ஒரு கயிறை எடுத்துக் கட்டிப் போட்டுடுவோம் அவளை... அப்படியிருந்தும் எங்க ரெண்டு பேரையும் தள்ளி விட்டுட்டுப் பல சமயம் தெருவிலே இறங்கி ஓடியிருக்கா. வயசான காலத்திலே நாங்க ரெண்டு பேருமா இருட்டிலே கண்ணும் தெரியாம வழியும் புரியாம அவளை அடக்கறதுக்குப் பலமும் இல்லாம படற பாடு இருக்கு பாரு... தெய்வத்துக்குத்தான் தெரியும்... தேவகி... எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா? உங்க வீட்டுக்காரர்தான் செய்யணும்...''

''சொல்லுங்க... என்ன செய்யணும்?''


''உமாவுக்குப் போலீஸ்காரன்னா எப்பவுமே பயம். அவ ரகளை பண்ற சமயம் யாராவது ஒரு ஆம்பிளை கையிலே ிரம்பை எடுத்துண்டு தரையிலே டமார்

# அடுத்த வீட்டில் கலர் டிவி களிப்பு. ராமு வீட்டில் மனைவியின் நச்சரிப்பு.

# லக்ஷ்மி விலாஸ் பாங்கின் புதிய கடன் இணைந்த டெபாசிட் திட்டம் அவருக்கென்றே உள்ள திட்டம்.



லக்ஷ்மி விலாஸ்
பாங்கின் புதிய
சர்வமங்களா திட்டம்.



இந்தத் திட்டம் ரெகரிங் டெபாசிட் திட்டத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. டெபாசிட் செய்யும் காலம் — 24,36,48 மற்றும் 60 மாதங்கள். திட்டம் முடிவடையும் நாளில் மொத்தத் தொகையைப் போல் இரு மடங்குக்கு (ரூ. 25,000) மேற்படாமல்) கடன் தொகை பெற்றுக் கொள்ளலாம். இந்தக் கடன் தொகையை நுகர்வோர் பொருட்களான ஸ்கூட்டர், மோபெட், ஃப்ரிஜ், கலர் டிவி, மியூசிக் சிஸ்டம், வி.சி.ஆர். போன்றவற்றை வாங்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். இக்கடன் தொகையை முதலில் டெபாசிட் செய்தது எவ்வளவு மாதமோ, அத்தனை மாத தவணையில் திருப்பிச் செலுத்தலாம்.

**The Lakshmi Vilas Bank Ltd.**

கரூர் 639 001

சேர்மன்: ஐ. சதா சிவ குப்தா

எங்களது நோக்கம்
உங்களுக்கு உதவுதல்


ஸ்ரீபெட்
'DREAMFLOWER'
எங்கே வேண்டுமானாலும் எடுத்துச்
செல்லக்கூடிய தண்ணீர் பாட்டில்கள்.
உங்களுக்குத் தேவையான, சுத்தமான குடிநீரை
நீங்கள் போகுமிடமெல்லாம் எடுத்துச்
செல்லலாம். உங்கள் கைப்பைகளுக்குள் வைத்துக்
கொள்ளக்கூடிய, அழகிய வடிவமுள்ள
பாட்டில்கள். கைக்கு அடக்கமான, கசிவில்லாத,
அரை லிட்டர் கொள்ளக்கூடிய (ட்ரீம்ஃப்ளவர்)
பாட்டில்கள் வெளியிடங்களுக்கு எடுத்துச்
செல்வதற்கு ஏற்றவை.
ஸ்ரீபெட் பாட்டில்களும் ஜாடிகளும்
கண்ணாடிபோல உள்ளேயிருப்பதை
பளிச்சென்று காண்பிப்பவை.
உடையாதவை. உணவுப் பொருட்களைப்
பத்திரப்படுத்துவதற்கு ஏற்ற தகுதியும் தரமும்
வாய்ந்தவை. நெடியற்றவை.
கனமில்லாதவை. உபயோகிக்க
வசதியானவை.
60 டிகிரி சென்டிகிரேட் வரை
உஷ்ணத்தைத் தாங்கக்கூடியவை.
SHRIRAM GROUP COMPANIES
MADRAS
பெட் இண்டஸ்டிரியல் கன்ஸ்யூமர்
பாக்கேஜ் பிரைவேட் லிமிடெட்,
3வது மாடி, மூகாம்பிகா
காம்பிளெக்ஸ்,
4, லேடி தேசிகாச்சாரி சாலை,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன்: 73768/74960/73038.
ADWAVE/PET/3822 TAM A

டமார்னு தட்டி 'நான் போலீஸ்காரன்! இப்ப சொன்னபடி கேட்கிறாயா இல்லையா'ன்னு கத்தினாப் போதும். பெட்டிப் பாம்பா அடங்கிடுவா! அது ஒன்றுக்குத்தான் அவ பயப்படறது. இன்னிக்கு ராத்திரி உமா ரகளை பண்ணினா உன் வீட்டுக்காரர் அப்படி அவளை அதட்டணும்... கொஞ்சம் எங்களுக்காகச் செய்வீங்களா சார்...?''

தேவகியும் சோமுவும் பார்வையில் சங்கடம் பரிமாறிக் கொண்டார்கள்.

''நா... நான் எப்படி அந்தப் பெண்ணை... எனக்குப் பாவமாயிருக்குதுங்க...'' என்றான் சோமு.

''சங்கடமே பட வேண்டாம்... அவளோட நல்லதுக்குத்தானே இதைச் செய்யறோம்...? தவிர, ராத்திரி நேரம் எங்களை மீறிக் காணாமல் போயிட்டான்னா எங்கேன்னு போய்த் தேடுவோம்? அப்படி ரெண்டு மூணு தரம் தொலைஞ்சு போய் மறுநாள் காலம்பறதான் கிடைச்சா... ராத்திரி முழுக்கத் தூங்காம நானும் அம்மாவும் எவ்வளவு அவஸ்தைப் பட்டிருப்போம் தெரியுமா...? நீங்க வேற ஒண்ணும் பண்ண வேண்டாம்... பிரம்பை எடுத்துச் சுவத்திலே ரெண்டு தரம் தட்டி அவளைப் பயமுறுத்தி இந்த காம்போஸ் மாத்திரையை விழுங்க வைத்தால் போதும். ராத்திரி ஒழுங்கா அவளும் தூங்குவா... நம்பளும் தூங்கலாம்...'' என்றாள்.

இன்னமும் சோமு அவஸ்தையில்தான் இருந்தான். ஆபீஸில் ஏதேனும் விழாக்களில் அமெச்சூர் நாடகம் போடும் போது இவனை 'நடிக்கிறாயா?' என்று கேட்கும் சமயம் காத தூரம் ஓடுவான்... அப்படிப் பட்டவனுக்குத் திமிர் வேஷம் கொடுத்தால் தயங்கத்தானே செய்வான்.

உத்தரத்தில் தொங்கிய உமா குழந்தையின்(!) தூளியை மெள்ள எட்டிப் பார்த்தாள் தேவகி. சின்ன மரப்பாச்சிக்குத் துணி சுற்றித் தூங்கப் பண்ணியிருந்தாள். 'இந்தக் குழந்தைக்குத்தானா பேக்ட்ரீம் மாத்திரை வாங்கிப் போனாள்?'

ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் சன்னமாய்ப் பார்வையை வீசிய போது அறையின் மூலையில் முழங்காலில் முகம் வைத்து அழுது கொண்டிருந்த உமாவைப் பார்க்க முடிந்தது.

கண்களில் வெறித்த நோக்கும் தலையை விரிக்கப் போட்டுக் கொண்ட பாணியும்... நேற்றைக்குப் பார்த்த சாந்த சொரூபியான உமாவா இவள்? இதயத்தில் 'இடுக்!' மனசை துன்பம் கவ்வியது.

''உமா...'' மெள்ளக் கூப்பிட்டுப் பார்த்தாள்.

விருட்டென்று தலை நிமிர்ந்தாள். பார்வை அலைந்தது. தேவகி அகப்பட்டதும் ஆவல் அப்பிய முகத்துடன் ஜன்னலுக்கு ஓடி வந்தாள்.

''வாங்க அக்கா... வைத்தியைப் பார்த்தீங்களா...?''

''ம்... ஆங்... வைத்தீஸ்வரனைத்தானே? பார்த்தேன்... நீ சொன்ன மாதிரி சிவப்பா அவன் அப்பா ஜாடையோடதான் இருக்கான். இப்ப காய்ச்சல் தேவலைதானே?''

''பரவாயில்லைக்கா.... காலம்பற பசியோட பாலைக் குடிச்சான். மப்பு தட்டியிருந்திருக்கு... வசம்பு த ட வி னே ன் பாருங்கோ... துப்புரவாச் சரியாயிருச்சு... இப்ப எடுத்து விடணும்... ம... செண்பகம்...'' என்று அம்மாவை அதட்டிக் கூப்பிட்டாள்.

செண்பகம் மாமி எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்..

கதவைத் திறடி... குழந்தைக்கு நான் பால் கொடுக்கணுமில்லே?'' ஜன்னல் இடைவெளி வழியே அலறல் கொடுத்தாள்.

தேவகி சுதாரித்து, ''உமா... அவன் நல்லா தூங்கறான்... இப்ப எழுப்புவானேன்? அப்புறமா பாலைக் கொடுத்துக்கலாம்...'' என்றாள்.

இந்தச் சமயத்தில் உமா சமாதானமாகி விட்டது மட்டுமில்லாமல் தேவகியின் கையிலிருந்து அந்தப் பொருள்களையும் பார்த்து மலர்ந்து போனாள்.

''என் குழந்தைக்கா அக்கா சட்டை வாங்கிட்டு வந்திருக்கீங்க?''

''உம்...'' அவளிடம் நீட்டினாள். உறை பிரித்த போது உமாவே ஒரு குழந்தையாகி முகத்தில் உற்சாகம் அணிந்தாள்.

''டார்க் ப்ளு... நல்ல செலக்ஷன்... அவன் கலருக்கு எடுப்பா இருக்குமில்லையாக்கா... ஜாஸ்தி விலையோ?'' இமைகள் அப்போதுதான் பிறந்த கோழிக் குஞ்சின் சிறகுகள் போல் புத்தம் புதுசாய் சிலுப்பிக் கொண்டன.

''விலை கிடக்கட்டும்.. இந்தா பிஸ்கெட் பாக்கெட். நாளைக்குக் காலம்பற அவனுக்குக் கொடு...''

ஆசையாக வாங்கி, ஏதோ அபூர்வ வஸ்து போல் பாகம் பாகமாக வேடிக்கை பார்த்தாள். முகத்தில்தான் என்ன சந்தோஷம்?

''என் குழந்தையை நீங்க பார்த்தீங்கதானே?''

''ஆமா... இதோ இப்பதான் பார்த்தேன். நல்லா தூங்கறான்னு சொன்னேனே...''

''அப்படி இருக்கறச்சே எல்லோரும் என் குழந்தையைக் காண்பிச்சா எகத்தாளமா சிரிக்கிறாக்கா...! நான் பைத்தியமாம்...'' என்றாள் ஏக்கமாக.

நாம் வழக்கமாக செய்யும் அடையில் (பருப்பு) இரண்டு உருளைக் கிழங்கை வேகவைத்து மசித்து போட்டுக் கலந்து அடை செய்து பாருங்கள். அடை மிருதுவாக இருப்பதுடன் சுவையாகவும் இருக்கும்.

— பாலா.

''அப்படிச் சொல்றவங்கதான் பைத்தியம்'' தேவகிக்குக் குரல் கம்மியது.

இவர்கள் உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சமயம் பக்கவாட்டில் செண்பகம் மாமி ஜாடையாக என்னவோ சர்க்கஸ் பண்ணிக் காண்பித்தாள்.

பிரம்பையும் மாத்திரையையும் அவனிடம் தந்து உமாவை மிரட்டும்படி சைகையில் காண்பிக்க, அவன் இன்னமும் தயங்க கண்களில் ஈரத்துடன் மாமி கையெடுத்துக் கும்பிட்டாள்.

''நான் போலீஸ்காரன் வந்திருக்கேன்...''

தனது குரல் சோமுவுக்கே ஆச்சரியமாக இருந்தது. கனகச்சிதமான டயலாக்கோடு முகத்தில் வரவழைத்துக் கொண்ட கடுமையுடன் தான்தானா இவ்வளவு அற்புதமாக போலீஸ் கதாபாத்திரத்தைச் செய்வது' என வியந்து போனான்.

டமார் டமார் என சிவகாசி ஓசையுடன் ஜன்னல் கம்பிகளில் ஓங்கித் தட்டவும் உமாவின் முகப் பிரதேசம் பூராவும் என்னமாய் பய ரேகைகள்?

''அ.... அடிச்சுராதீங்க ஸார்...! நா..

அன்று உறவினர்கள் வந்திருந்தனர். காலை டிபனுக்கு ஒரு ஈடு இட்லி எடுத்ததும் பார்த்தால், இட்லி கெட்டியாக இருந்தது. உளுந்து போதவில்லை போலும்! மீதி மாவை தோசையாக வார்த்து விடலாம் என நினைத்த நேரத்தில், வந்திருந்த பெண்மணி, நாலு பச்சை அப்பளங்களை தண்ணீரில் நனைத்து, மிக்ஸியில் போட்டு ஒரு நிமிடம் ஓட விட்டு, மாவில் கலந்தார். அதற்குப் பின், வார்த்த இட்லிகள் பூ மாதிரி இருந்தன!

— எஸ். பட்டம்மா.

நான் ஒண்ணும் பண்ணலை... பயமாயிருக்கு... என்னை ஒண்ணும் பண்ணிராதீங்கோ...''

''உம்...'' என உறுமலுக்குப் போனான். திரும்பவும் ஆக்ரோஷமாய் ஜன்னலைத் தாக்க குலைநடுங்கிப் போய் உமா சப்த நாடியும் ஒடுங்கி சுவர் மூலையில் சேர்ந்து கொள்ள....

''ஒழுங்கா... இந்த மாத்திரை சாப்பிடு! இல்லை... பார்த்துக்க...!'' காற்றில் பிரம்பை ஓங்க, போலீஸ்காரர் வேஷம் பலிக்கவே செய்தது.

''**மா**மி! நல்ல டாக்டர்கிட்டே உமாவை கூட்டிப் போய் காட்ட வேண்டியதுதானே?''

'உஸ்....' அடி வயிற்றிலிருந்து பெரிய சைஸ் காற்றெடுத்து நீளமாய் வழிய விட்டாள் மாமி.

''காட்டாத டாக்டர் இல்லை... பார்க்காத வைத்தியமில்லை தேவகி...! ஒரு நிலத்தையே வித்து இவளுக்கு பைத்தியம் பார்த்தாச்சு! ப்ச்... பிரயோஜனமில்லை. வேலூர் போய் கரெண்ட் வச்சு பார்த்துட்டோம். குற்றாலம் ஃபால்ஸ்லே குளிச்சுட்டு ஒரு மாசம் அங்கே சித்த வைத்தியம் கூட ட்ரை பண்ணினோம். ஒண்ணும் முன்னேற்றம் தெரியலை. இப்படி எத்தனையோ. இனிமே அவளுக்கா குணமானாதான். இப்பவும் கூட அடையார்லே ஒரு சைக்கியாட்ரிஸ்ட்கிட்டே மாசம் ஒரு தடவை கூட்டிக்கிட்டு போயிண்டுதான் இருக்கோம். இந்தத் தடவை போறப்போ நீயும் வேணா கூட வாயேன்'' கூப்பிட்டாள் மாமி.

**வ**கிடின் துவக்கத்தில் செந்தூரம் தீற்றியிருந்தாள் டாக்டர். வொய்ட் க்ளாஸ் கூடுதல் கம்பீரத்தைத் தந்தது. வெள்ளை கவுனில் விரயமாய் பைக்குள் அடிக்கடி விரல் செலுத்தினாள். சுழல் நாற்காலியில் அமர்ந்தபடி வார்த்தைக்கு வலிக்குமே என்று மிக மெள்ள பேசினாள்.

''உமாவுக்கு வந்திருக்கிறது மனநோய்...! நாங்க மருத்துவ பாஷையிலே மனச்சிதைவுன்னு சொல்லுவோம். கல்யாணத்தன்னிக்கு அவளுக்கு ஏற்பட்ட ரணம் மகத்தானது. அந்த ரணம் எப்ப ஆறும்ன்னு உத்தரவாதம் எதையும் தர முடியாது நாங்க. அது மட்டுமில்லாம இந்த நோயை மேலும் வளர்க்கக்கூடிய பல அம்சங்களை அவளுக்கு நெருக்கமானவர்கள் செய்துக்கிட்டிருக்காங்க... ஒவ்வொரு மனச் சிதைவு நோயாளியும் குணமாகாம இருக்கிறதுக்கு இது ஒரு வலுவான காரணம்...''

தேவகி ஆச்சரியம் காண்பித்தாள்.

''நோயை அவளுக்கு நெருக்கமானவங்க மேலும் வளர்க்கிறாங்களா...? அதெப்படி டாக்டர்?''

''ஆமாம்மா! உதாரணமா இந்த வகை நோயாளியை நாம ரூமிலே அடைக்கவோ, கட்டிப் போடவோ உதைச்சு பயமுறுத்தவோ கூடாது. அந்த உத்தி அத்தனையும் மனநோய்க்கு அதிகப்படியான உரம்! சூழ்நிலை மற்றும் தங்களோட சௌகரியங்கள் காரணமா, இந்த நோய் பிடிச்சவங்களை எல்லா உறவுக்காரங்களுமே அடைக்கப் போடவும் கட்டிப் போடவும் பலாத்காரமா தூங்கப் பண்ணவும்தான் பார்ப்பாங்க. இது அத்தனையும் இந்த வியாதியை அதிகப்படுத்தற விஷயங்கள்னு யாரும் உணர்வதே இல்லை. தொந்தரவு பண்ணாம இருந்தா சரின்னு தீர்மானிக்கிறாங்க... அது தப்பு! வியாதியை குணமாக்கறதுதான் சரி... இதிலே யாரையும் குற்றம் சொல்ல வரலை நான். அவங்களோட கோணப்படி இதுக்கு நியாயமான காரணங்களை அவங்க வச்சிருக்கலாம். இந்தியா மாதிரி தேசத்திலே மனச் சிதைவு ஒரு துரதிர்ஷ்டமான நோய்தான். ஆனா உலகத்திலே பைத்தியக்காரர்கள் அதிகமாயிருக்கிற தேசத்திலே இந்தியாவும் ஒண்ணுங்கிறது பரிதாபத்துக்குரிய விஷயம்...''

''சரி டாக்டர்... உமா மற்ற விஷயங்

களிலே, பைத்தியம் பிடிச்சிருக்கிற மாதிரியே நடந்துக்கலையே?''

''மனச் சிதைவு உள்ளவங்களோட எல்லா செயல்களுமே நடைமுறைக்கு மாறு பட்டு இருக்கும்னு நாம் நினைக்கிறோம்மா... இது தப்பு! உமா விஷயத்துக்கு வருவோம். அவளோட மனசிலே பட்ட காயம் ரொம்ப ஆழமா, கூர்மையா பட்டு அவளோட ஆழ் மனத்திலே கண்ணுக்குத் தெரியாத ரணத்தை ஏற்படுத்திருச்சு. பொதுவா மனப் பிளவுன்றது — ஐ மீன் ஜனங்களோட பாஷையிலே சித்த பிரமை— ஒரு நோய் இல்லை. நோய்க்கான அறிகுறி. அவ்வளவுதான்! இந்த மனப்பிளவு ஏற் பட்டவங்களோட காதிலே ஒரு இரைச்சல்



சதா கேட்டுக்கிட்டேயிருக்கும். அந்த இரைச்சலோட கட்டளைக்கு ஏற்ற மாதிரி தான் இவங்க செயல்படறது! கிணற்றில் குதி... குதின்னு அந்தக் கட்டளை இருந்தா இவங்க யோசனையே பண்ணாம குதிச்சிடுவாங்க...''

''அய்யோ....''

''இவங்க, தானா பேசிக்கிற மாதிரி பல சமயம் தோணும். காதிலே விழற இரைச்சலுக்குப் பதில் தர்றதுக்காகதான் இவங்க பேசறது! மனசிலே ஏதாவது ஒரு கற்பனையை வசதியா வளர்த்து வச்சுக்கிட்டு அதிலேயிருந்து விடுபட முடியாம அந்தக் கற்பனைக்கு கை கால் ரத்த ஓட்டம் கொடுத்து பிரம்மாண்டமா மனசிலே உலா வரச் செய்வாங்க. அந்தக் கற்பனை பிம்பத்தோட ரியாக்ஷன்தான் இவங்களோட அத்தனை செயல்களும்...''

''ஆபரேஷன் ஏதாவது செய்தா உமாவுக்குக் குணமாகாதா டாக்டர்?''

''உமாவோட மூளையிலே கட்டியோ, புண்ணோ இருந்தா நீங்க சொல்றது சரி. மனப் பிளவு நோய் உள்ளவங்களோட மூளைக்கும் சாதாரண ஜனங்களோட மூளைக்கும் எந்த வித்தியாசமும் தெரியறதில்லைம்மா... மூளையில் செல்களிலே கண்ணுக்குத் தெரியாத மின்காந்த அலை மாற்றம் இருக்கான்னு இன்னும் சரியா தெரியலை. அது விஞ்ஞானத்துக்கே புரியாத புதிர்....''

''உமாவோட பாட்டி, அந்த வீட்டு ராசிப்படி ஏதாச்சும் ஒரு பெண்ணுக்குப் பைத்தியம் பிடிக்கும்ன்னு சொல்றாங்களே... இது உண்மைதானா?''

''ஒரு டாக்டரா இருந்துக்கிட்டு நான் எப்படி இதை உண்மைன்னு சொல்லுவேன்?'' சிரித்தாள். அடுக்கு வரிசை தப்பாத பற்கள்.

''மனப்பிளவு நோய்க்கு, ஒரு கட்டிடம் தனிப்பட்ட முறையிலே காரணமா இருக்கவே முடியாது. அகஸ்மாத்தா, இதுக்கு முன்பு குடியிருந்த ஒன்றிரண்டு பெண்களுக்கும் அந்த 'டிசீஸ்' இருந்திருக்கலாம். தற்செயல்! அடுத்தடுத்து அங்கேயுள்ள ஒவ்வொரு பெண்ணுக்கா வர அது பிதுரார்ஜிதா சொத்தா... முன்பு அங்கே குடியிருந்தவங்களுக்கும் வீட்டை வச்சிருந்தவங்களுக்கும் ஏன் வந்ததுன்னு எனக்குத் தெரியாது... உமாவுக்கு வந்ததுக்கான காரணங்களைத்தான் சொல்ல முடியும். பொதுவா, சட்டுனு உணர்ச்சிவசப்படறவங்களுக்கு வியாதி வர்றதுக்கான வாய்ப்பு அதிகம்...''

''..................''

''உமாவை அமாவாசை பௌர்ணமிக்கு அடைச்சுப் போடாம இருக்கணும்.. அந்தத் தினங்களிலே அவகிட்டே மேலும் நெருக்கமா அன்பா நெருங்கணும். கொஞ்சம் கஷ்டங்களை சகிச்சுதான் ஆகணும். அப்ப, படிப்படியா குணமாக சான்ஸ் உண்டு...''

''உமா வீட்டிலே வேற ஆண் துணை இல்லை. அம்மாவும் பாட்டியும்தான்.. அவங்க என்ன பண்ணுவாங்க டாக்டர்?''

''நான் என்னங்க செய்யட்டும் அதுக்கு? ட்ரீட்மெண்டை சொன்னேன். தட்ஸ் ஆல்... பை தி பை மிஸஸ் தேவகி...! இவ்வளவு ஆர்வத்தோட உமாவை விசாரிக்கிற நீங்களே ஏன் அவளுக்கு முடிஞ்ச உதவியைப் பண்ணக் கூடாது?''

''கண்டிப்பா பண்றேன் மேடம்...!'' என்றாள் தேவகி, கண்களில் உறுதியுடன்.

**பௌ**ர்ணமியன்றைக்கு செண்பகம் மாமியும் பாட்டியும் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் உமாவை பூட்டவோ கட்டிப் போடவோ கூடாது என்பதில் கண்டிப்பாக இருந்தாள் தேவகி. ''நான் பார்த்துக்கறேன் மாமி...''

''உமா... எங்கே கிளம்பறே? வா வைத்திக்கு எண்ணெய் தேய்ச்சுக் குளிப்பாட்டுவோம்....''

உமா முகத்தில் புன்னகையுடன் அமர்ந்தாள்.

எண்ணெய், கடலை மாவு, தண்ணீர் எல்லாம் நிஜம். குழந்தை மட்டும் பொம்மை.

வாளி நீரில் விரல் செலுத்திப் பார்த்தாள் உமா. தேவகி எதிர்பாராத சமயத்தில் சடாரென்று செம்பைத் தூக்கித் தலையில் வீசினாள். நெற்றி முன்புறம் அபாரமாக புடைத்துக் கொள்ள, தேவகிக்கு மண்டை 'விண், விண்' என வலித்தது. சட்டென்று கோபத்துக்குப் போனவள் உடனே சமாளித்து இன்ஸ்டண்ட் சிரிப்பைச் சிந்தி, ''ஏன் உமா... என்னை அடிச்சே?'' என்றாள். தலையில் கன்னாபின்னா வலி. கண்களில் மில்லியன் கணக்கில் பூச்சி பறந்தது.

''குழந்தைக்குக் குளிராது...? வெந்நீர் வைக்க வேணாம்...! அறிவிருக்கா உனக்கு?''

சட்டென்று நாக்கு கடித்தாள் தேவகி. அத்தனை ராத்திரியில் அடுப்பு ஏற்றி வெந்நீர் கடப் பண்ணி, உமாவுக்கு திருப்தி ஏற்படும் வகையில் கலந்து குழந்தையைக் குளிப்பாட்டி அப்புறம் சாம்பிராணி புகை போட்டு...

பொம்மையை பொம்மைக்கான அலட்

---

வீட்டில் பரணின் மேலுள்ள மரப் பெட்டிகள், பழைய டிரங்க்குகள் வந்தவர்கள் கண்ணில் படும்படி அசிங்கமாக இருக்கும். எனவே அவற்றின் பக்கங்களில் பழைய காலண்டரின் படங்களை (அவை இயற்கை காட்சிகளாகவும், பறவைகளாகவும், பூக்களாவும் இருந்தால் நன்றாக இருக்கும்) பசை தடவி ஒட்டி வைத்தால், அவை கண்டா முண்டா சாமான்களோடு இருந்தாலும் அறை துப்புரவாகி வீட்டிற்கு அழகையும் கொடுத்து விடும்.

— உமா.

# நாங்கள் இருவர்—உங்களின் இருவர்!

***சுத்தம் செய்வதை***
***சுகமானதொரு***
***வேலையாக்க***
***விகிசால்***
***உபயோகியுங்கள் !***




**விகிசால் TCX**

எந்தவிதமான திராவக கலப்பும் அற்ற கழிவறை சுத்தம் செய்யும் முறையில் எவற்றையும் மிஞ்சும் மிகச் சிறந்த, பாதுகாப்பான லிக்விட் க்ளீனர். கறைகளை நீக்கும் எலுமிச்சை கலவை முறை. கிருமிகளை அறவே அழிக்கும் தன்மையுடையது. உபயோகிக்கும் முறையில் தீங்கற்றது.




**விகிசால் EXL**

இனிய நறுமணம் நிறைந்த, அழுக்கினை அகற்றி பொலிவினைக் கூட்டும் விகிசால் லிக்விட் க்ளீனர்! உங்கள் இல்லத்தில் உள்ள ஃப்ரிட்ஜ், டி.வி. ஸ்கிரீன், டைனிங் டேபிள், வெட் கிரைண்டர், மிக்ஸி, மொசைக் தரை, கார், மோட்டார் சைக்கிள், பீங்கான் மற்றும் கண்ணாடி சாமான்கள், L.P.G. ஸ்டவ், பாத்திரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்கும், பளபளப்பிற்கும் மிகச் சிறந்தது!

குறைந்த விலை—நிறைந்த பலன்! உபயோகிப்பீர் விகிசால்—உங்கள் பொருட்களின் உன்னதம் காப்பீர்!




தயாரிப்பாளர்கள்
விக்ரிஷா இண்டஸ்ட்ரி, No. 1, 8வது தெரு, நங்கநல்லூர்,
சென்னை-600 061. போன் : 48 21 598

சியத்துடன் தூக்கினால் போச்சு... குழந்தைக்கான ஜாக்கிரதையுடன் பக்குவமாய் சுமந்து தலையை மெலிசாய் துவட்டி, உமா 'எடுத்து விட்ட' பிற்பாடு தூளிக்குள் பத்திரமாக மிக மெள்ள வைத்து தாலாட்டுப் பாட வேண்டும்.

''அவன்தான் தூங்கிட்டானே... நீயும் வா உமா... வந்து படுத்துக்கோ... முதல்ல சாப்பிடு!''

''ம்ஹூம்... எனக்குப் பசிக்கலை!''

''நீ நல்லா சாப்பிட்டாதான் குழந்தைக்குக் கொடுக்கிறதுக்கு உனக்குப் பால் ஊறும்... இல்லையா?''

நெற்றி மத்தியில் 'கோடு போட்டுக் கொண்டு யோசித்து, சம்மதித்து, சாப்பிட்டு வைத்திக்கு அருகாமையில் தலை வைத்து...

அப்படியிருந்தும் அவ்வப்போது ஆவேசமாக எங்கேயோ கிளம்பிப் போவாள்.

''உமா எங்கே போறே...?''

''நான் எங்கே வேணா போவேன்...! நீ யாருடி கேட்க...?'' கண்களில் ஏராளத்துக்கு வெறி வைத்திருப்பாள்.

''குழந்தை பாதியிலே முழிச்சு அழ மாட்டானா? பால் தர வேணாம்?''

கொஞ்சம் கொஞ்சமாய் தாஜா செய்து திரும்பவும் படுக்க வைக்க வேண்டும். வேறு சில சமயங்களில் குழந்தையையும் தூக்கிக் கொண்டே கிளம்புவாள். கேட்டால் ''ஒரு வயசாகிறதுக்குள்ளே அவனுக்கு சுவாமி மலையிலே மொட்டை அடிக்கணும். வேண்டுதல்...'' என்பாள்.

''ராத்திரி பஸ் கிடையாது... காலையிலே போகலாம்... இப்ப கிளம்பினா குழந்தைக்கும் உடம்புக்கும் ஆகாது...''

சமாதானம் ஆனாலும் ஆவாள். மீறி சில சமயம் சண்டித்தனம் எல்லை தாண்டி உச்சக்கட்டம் தொட்டு அத்தனை பேரையும் தாக்கி விட்டு வீதிக்கு ஓடும் போது தேவகி மூச்சு முட்ட மாடியேறி அவசரகதியில் கணவனை எழுப்புவாள், வேறு வழியே இல்லாமல்.

''என்னங்க... கம்பெடுத்துக்கிட்டு போலீஸ்காரரா போங்க. அப்பதான் வழிக்கு வருவா...''

''நமக்கு அர்த்தராத்திரியிலே இது தேவையா தேவகி! பேசாம ரூமிலே அடைச்சு பூட்டாம...'' என்பான் சோமு.

''ஏதோ இந்த ஊருக்கு வந்ததுக்கு ஞாபகார்த்தமா இந்தச் சேவை செய்துட்டு போகலாம்னு பார்க்கறேங்க...! உமாவுக்கு குணமாச்சுன்னா இந்தக் குடும்பம் என்ன சந்தோஷப்படும்?''

''பின்னே எதுக்கு, இப்ப அந்தப் பெண்ணை மிரட்டச் சொல்றே?''

''கையை மீறிடுச்சுன்னா வேற வழி...? அதுவும் தவிர கண்டினியூஸா அன்னியோன்யமா இருந்தோம்ன்னா கண்டிப்பா குணமாகத்தாங்க செய்யும்! பிகினிங்லே இந்தக் கட்டத்தை எல்லாம் தாண்டித்தான் ஆகணும். இப்ப நீங்க வேகமா கிளம்பறீங்களா இல்லையா?''

பீட்ரூட், தக்காளி இவைகளில் ஸ்விட் பச்சடி செய்யும் போது, வெறும் சர்க்கரையோ அல்லது வெறும் வெல்லமோ போட்டுச் செய்தால் எவ்வளவு போட்டாலும் இனிப்பு வராது. ஆகவே 2/3 பாகம் வெல்லமும் மீதி சர்க்கரையும் சேர்த்தால் சுவையும் கூடும், செலவும் குறையும். பீட்ரூட்டுடன் வாழைப் பழம் சேர்த்தால் சுவையோ சுவை. இது குழந்தைகளுக்கு தோசை, சப்பாத்திக்கும் தொட்டுக் கொள்ள உகந்தது.

— சாந்தா ராமசாமி.

முணுமுணுத்தபடி எழுந்து ஓடினான்.

அதற்கப்புறம் ரெண்டு மூணு சந்தர்ப்பங்களில் உமா வாசல் தாண்டவேயில்லை. நம்பிக்கை துளிர் விட்டது தேவகிக்கு.

உமாவின் அம்மாவும் பாட்டியும் கூட தேவகியைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்கள். ஒரிருதரம் உமா வெளியேறின போதும் தேவகி தேடிப் போனதும் அவளது அன்பை மீற அவளால் முடியவில்லை. பூமி பார்த்துக் கொண்டு தேவகியின் பின்னால் மேரியின் ஆட்டுக் குட்டி போல வந்து சேர்ந்தாள்.

சில தினங்களுக்கு அப்புறம்...

''என்னங்க... கொஞ்சம் வேகமா எழுந்திருங்க...'' தேவகியின் குரலில் பதற்றம்.

பெரிய சைஸ் கொட்டாவியுடன் தூக்கம் விலகாத முகத்துடன் எழுந்து உட்கார்ந்தான் சோமு.

''உமாவைக் காணலைங்க....''

''உன்னோட இதே ரோதனையாப் போச்சு... உமா என்ன உனக்குத் தங்கையா, மகளா?'' எரிச்சலுடன் சொல் வீசினான்.

தேவகி அடிபட்ட பார்வை பார்த்தாள்.

''அதென்னவோ தெரியலைங்க... அந்தப் பெண் மேலே எனக்கு என்னவோ பரிவு கிளம்பி ஆவேசமா வளர்ந்துருச்சு... சொந்தமா எனக்குத் தங்கையிருந்தாக் கூட இவ்வளவு அன்பு வைக்கிறேனோ என்னவோ? அவளை தேவலையாக்கிக் காட்டணும்ன்னு எனக்குள்ளேயே சவால் வளர்த்துக்கிட்டு வரேன்...''

''நல்லா வளர்த்தே போ... இப்ப நான் என்ன செய்யணும்?''

''உமாவைக் காணோம்... தேடணும்...''

''எவ்வளவு நேரமா காணோம்?''

''தெரியலை... இப்ப... நான் எழுந்திருச்சு பார்க்கும் போது அவ இல்லை... வைத்தியையும் காணோம்.''

''வைத்தியா?''

''அதாங்க அவளோட குழந்தை...''

சோமு பெருமூச்சுடன் அவளைக் கோபமாய் பார்த்தான்.

''இப்ப அவளை நான் எங்கேன்னு போய்த் தேடுவேன்? ராத்திரி நேரம் எனக்கு ரொம்ப அவசியம் பாரு! நீ செய்யறது எனக்குச் சுத்தமா பிடிக்கலை தேவகி...''

தேவகி கணவனை நெருங்கி தலைகோதி அவனைக் கெஞ்சினாள். அவளுடைய அண்மையில் அவன் கோபம் குறைந்தது.

''இப்ப நான் எங்கே போய்த் தேடுவேன் உமாவை?''

''குழந்தையை தூக்கிட்டு அவ போயிருக்கிறதாலே ஏதாவது கோயில் குளம்ன்னு தேடிப் போனா கண்டிப்பா அகப்படுவா.. குழந்தையோட வேண்டுதலுக்கு முடியிறக்கணும்ன்னு அவ அப்படி செய்திருக்கலாம். நீங்க ஒரு பக்கம் கோயில்களா தேடுங்க... நான் அவளோட அம்மாவை கூட்டிக்கிட்டு போய் வேறொரு பக்கமா தேடறேன்...''

''நம்ப வாசலை இப்படியே விட்டுட்டு போகலாம்ன்னு சொல்றியா?''

''பாட்டியம்மாவை மாடியிலே வந்து குழந்தைக்குத் துணையா படுத்துக்கச் சொல்றேன்...''

எரிச்சலுடன் சட்டை பேண்ட்டுக்குள் புகுந்தான். கால்களில் செருப்பு உடுத்தி முணுமுணுத்தபடி வீதி பிரவேசித்தான்.

ஏறத்தாழ எல்லா கோயில்களின் வாசற்புறமும் தேடியாகி விட்டது. தெய்வங்கள் கூட பாதுகாப்பு கருதி வாசல் பூட்டிக் கொண்டு உள்ளே சிறையிருந்தன.

தேவகியைக் கவலை அப்பிக் கொண்டது. 'கடவுளே... அந்தப் பெண் கிடைக்க வேண்டுமே...! அப்புறம் இவர்கள் முகத்தில் நான் விழிப்பதே முடியாத காரியமாகி விடும்...'

முழங்கால்களுக்குக் கீழே வலி தெறித்தது. அவ்வளவு நடை. தனக்கே இத்தனை வலி என்றால் வயசான செண்பகம் மாமிக்கு எவ்வளவு வலிக்கும்.

ஒவ்வொரு கடவுளும் 'உமாவைப் பற்றி எனக்குத் தெரியாது' என்றது.

ரெண்டு மூணு மணி நேர அலைச்சலில் ஏமாற்றமும் வலியும்தான் மிச்சம்...

செண்பகம் மாமியின் வயிற்றில் பகீர் உருவாகி கலவரம் காண்பித்தாள். தேவகிக்கும் பயம் தொற்றிக் கொண்டது என்றாலும், ''கவலைப்படாதீங்க...'' என் வீட்டுக்காரர் ஏதாவது ஒரு கோயில்லே அவளைப் பார்த்து வீட்டுக்குக் கூட்டி வந்திருப்பார்...'' எனச் சமாதானம் சொன்னாள்.

வீட்டிற்கு வந்த தேவகிக்கும், மாமிக்கும் சந்தோஷமான சந்தோஷம். காரணம், உமா வீடு திரும்பியிருந்தாள்.

சேகர் போலிக் கோபத்துடன் தரையில் கம்பால் விளாசிக் கொண்டிருந்தான்.

''பேசாம படுத்துத் தூங்கு... என்னமாவது சப்தம் வந்ததோ அம்புட்டுதான்... கொன்னு போட்டுருவேன்...'' பிரம்பை விர் விரென்று அசைத்தான்.

''அ.... அடிக்காதிங்கோ ஸார்... எனக்குப் பயமாயிருக்கு...'' குழந்தைப் பொம்மையை மார்புடன் அணைத்துக் கொண்டாள் பயத்தில். முகத்தில் உழுதாற் போல அச்சக் கோடுகள்.

''மூச்... சப்தம் போடக் கூடாது... பேசாம உள்ளே போய்ப் படு... இந்தா இந்த மாத்திரையை முழுங்கு...''

உமா உள்ளே முடங்கினதும் வெளியே தாழ் போட்டான். தேவகி மெள்ள நெருங்கி... ''அ... அப்பவே வந்துட்டீங்களா? எங்கேயிருந்தா இவ?''

அடி வயிற்றிலிருந்து பெரிய சைஸ் காற்றெடுத்து வழிய விட்டான்.

''அப்பா... அதை ஏன் கேட்கறே? பொன்னம்பலம் சாலை தாண்டி சேரிகள் பக்கமா ஒரு பாழடைஞ்ச கோயில்லே உட்கார்ந்திருக்கிறா குழந்தை பொம்மையோட... ஆண் பிள்ளைகளே நுழைய பயப்படற பகுதி. நடுநிசி நேரத்திலே ஒரு பொண்ணு உட்கார்ந்துக்கிட்டு... ச்சே..! எனக்கு ரொம்பப் பயமா போச்சு... அப்புறம் வழக்கம் போல போலீஸ்காரன் வேஷத்திலே இவளை மிரட்டி கூட்டி வந்தேன்...''

மோவாயில் கை வைத்து கேட்டுக் கொண்டிருந்தாள் மாமி.

''தேவகி... மாசம் ஒன்றிரண்டு நாள் பூட்டி வைக்கிறதிலே தப்பில்லை. திறந்து வச்சு காப்பாத்தறதுதான் ரிஸ்க். டாக்டருக்கு என்ன... சொல்லிட்டுப் போயிருவா..! இப்ப உமா கிடைக்காம போயிருந்தா என்ன பண்றது... சொல்லுங்க?'' அதட்டினான் சேகர்.

அதற்கு அடுத்த அமாவாசைகளில் தேவகிக்கே உமாவைத் திறந்து வைத்து கண்காணிக்க பயம் பிடித்துக் கொண்டது. கதவைப் பூட்டி வைக்குமாறு மனச் சங்கடத்துடன் தெரிவித்து விட்டாள்.

ராத்திரியெல்லாம் கதவில் அட்டூழியத்துடன் மோதி உமா கிளப்பின ரகளையில் யாருமே தூங்கவில்லை. சேகர்தான் போலீஸ்காரனாக கிளம்பிப் போய் அதட்டி அவளை அமைதிக்கு அனுப்ப வேண்டியிருந்தது.

சில தினங்களுக்குப் பிறகு...

**தே**வகி....'' ஏதோ சொல்ல வந்த

---

இடியாப்பத்தை எலுமிச்சம் சாறு விட்டுத் தயாரிப்பது எல்லோருக்கும் தெரிந்ததே! அதிகப் புளிப்பற்ற கெட்டித் தயிரை விட்டு, பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலையுடன் கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம் முதலியவற்றைத் தாளித்துக் கொட்டி, இடியாப்பத்தைப் போட்டுக் கிளறி, காலை டிபனைத் தயாரித்து விடலாம். என் வீட்டில் இதைத்தான் எல்லோரும் விரும்பி ஒரு வெட்டு வெட்டுவார்கள். நீங்களும் செய்யலாமே!

— காந்தாமணி.

# ஸ்லீப்பர் பாதுகாப்பு

**கொசுக்களை ஒழித்திட குட் நைட் ஒன்றுதான் சர்வதேச SP வாக்குறுதி தருவது.**

ஜப்பான் நாட்டு சுமிட்டோமோ விலிருந்து இறக்குமதி பெற்ற இரசாயனப் பொருள்கள் மற்றும் உள்-உறுப்புக்கள், என்றும் மாறாது நிலைநிறுத்தப்படும் சர்வதேச நிர்ணயத் தரங்கள்.

இவற்றுக்கெல்லாம் அங்கீகாரமாக குட் நைட்டுக்கு, பெருமதிப்புமிக்க SP முத்திரை வழங்கப்பட்டது : தரத்தின் சின்னமாக, உலகில் **மிகச் சிலவற்றுக்கே அளிக்கப்பட்ட விருது. இதனை இந்தியாவில் வென்றுள்ளது குட் நைட் ஒன்றுதான்.**

**சுமிட்டோமோவின் கறாரான சர்வதேச நிர்ணயத் தரங்களுக்கு இணங்க, சுமிட்டோமோ பைரத்ராயிடு** கொண்டு தயாரிக்கப் பட்டது குட் நைட் என்பதற்கு உத்தரவாத முத்திரை எஸ்பி.

ஆகவேதான், மிகப்பல மக்கள் கொசுக்களுக்கு "குட் நைட்" போட்டு விடை கொடுக்கின்றனர். அவர்களுக்குத் தெரியும் ஸ்லீப்பர் பாதுகாப்புக்கு நம்பிக்கையானது குட் நைட்.




இனிய தூக்கம் இன்பக்கனா
பாதுகாக்கும் குட் நைட்

## குட் நைட்

**SP என்றால்**
**சுமிட்டோமோ பைரத்ராயிடு.**

Creative Unit 7544 Tam

செண்பகம் சொல்ல முடியாமல் தொண்டைப் பிராந்தியத்தில் துக்கம் அடைத்தது.

''மா.... மாமி... என்ன ஆச்சு? ஏன் அழறீங்க?'' திடுக்கிட்டாள் தேவகி.

''எல்லாம் உமா விஷயமா தாண்டிம்மா! அவ ரெண்டு மாசமாச்சு குளிச்சு... எனக்கு என்ன பண்றதுன்னே, தெரியலை.''

''என்ன சொல்றீங்க?''

''ஆமாம்மா... இன்னும் அவளோட பாட்டிக்குக் கூட விஷயம் தெரியாது. கிழம் அதிர்ச்சியிலே பிராணனை விட்டுறும்ன்னு நான் சொல்லலை... உன்கிட்டேதான் சொல்லியிருக்கேன்.. மனசு கிடந்து படபடன்னு அடிச்சுக்கிடுது. ஒரு வாய் ஜலம் கொடேன்...''

தேவகிக்கே தண்ணீர் தேவையாயிருந்தது. நாக்கு உலர்ந்து போயிருந்தது.

''உமா கர்ப்பமா? எப்படி மாமி இது சாத்தியம்...?''

''சாத்தியமோ இல்லையோ... ஆனா இது சத்தியம். நேத்திக்கு ராத்திரிதான் எனக்கே சந்தேகம் தட்டித்து. அடிக்கடி வாந்தி எடுக்கிறா. பாத்ரூம் உள்ளேயிருந்து சாம்பல் எடுத்துச் சாப்பிடறா... பயந்து போய் கார்த்தாலே லேடி டாக்டர்கிட்டே கூட்டிண்டு போய்க் காட்டினேன். கன்ஃபார்மா சொல்லிட்டா. மூணு மாசமாம். எனக்கு வயத்திலே புளியைக் கரைக்கிறதுடி! ஏற்கெனவே சித்த பிரமை.. இதிலே கர்ப்பம் வேறே... உமாவோட வாழ்க்கை இப்படி நாசமா போயிடுத்தேடிம்மா...'' கேவல் கேவலாய் அழுகை சிதறினது.

தேவகி எச்சில் விழுங்கினாள். துக்கத்தை விழுங்க முடியாமல் அவளாலும் அழத்தான் முடிந்தது.

''அவளைக் கெடுத்தது யாராம் மாமி? எப்ப நடந்ததாம் அந்தச் சம்பவம்?''

''தெரியலையே தேவகி... அமாவாசை தோறும் இவ ராத்திரியானா ஓடறா... எவன் கெடுத்தானோ? ஒருத்தனோ நாலஞ்சு பேரோ யாருக்குத் தெரியும்...?''

தேவகி இறந்த வாயுடன் திடுக்கிட்டாள்.

''உமாகிட்டேயும் விசாரிச்சு பார்த்துட்டேன். சொல்லத் தெரியலை.''

''இப்ப என்ன செய்யறது மாமி?''

''அதுதாண்டி எனக்கும் தெரியலை. கையும் ஓடலை. காலும் ஓடலை. எங்கேயாவது ரகசியமா போய் இவளுக்கு அபார்ஷன் பண்றதுதான் நல்லது...''

''மா....மி''

''பின்னே, என்னை என்னம்மா பண்ணச் சொல்றே? ஏற்கெனவே சந்தி சிரிக்கிறது. கன்னித் தாயா வேறே போனா ஊரார் காரித் துப்ப மாட்டாளா...? இவளுக்குக் குழந்தை பிறந்து அந்தக் கன்றாவியையும் வேறே தாங்கிக்கச் சொல்றியா... குழந்தைக்கு எந்த எழுத்தை இன்ஷியலாப் போடறது சொல்லு? உமாவுக்கு மட்டுமில்லை... நாலைஞ்சு பேரா அவளை சூறையாடியிருந்தான்னு வச்சுக்கோ... பிறக்கப் போற குழந்தைக்கு யாரு அப்பான்றது? அவளைக் கெடுத்தவங்களுக்கே தெரியாது. பகவானுக்குத்தான் தெரியும். அந்த பகவானே எங்களை பம்பரமா சுழல விட்டு வேடிக்கை பார்க்கிறச்சே நாங்க யாரைப் போய் கேட்க முடியும்?'' 'ஹோ'வென்று கதறினாள் மாமி.

சப்தம் கேட்டு உள்ளேயிருந்து சேகர் எட்டிப் பார்க்கவும்,

அலறிக் கொண்டிருக்கும் ஆர்மோனியத்தை நோட்டமில்லாமல் அழுத்தி மூடினது போல் சட்டென்று சகல ஸ்வரங்களும் அடங்கிப் போனாள்.

''ஏம்மா நிறுத்திட்டீங்க...? எல்லாத்தையும் நான் கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். உங்களோட அத்தனை கஷ்டத்துக்கும்

---

அஜீரணத்தின் காரணமாக நாம் கடைகளில் சோடா வாங்கிக் குடிக்கும் போது, வெறும் சோடாவைக் குடிக்காமல் சோடா பாட்டிலைத் திறந்தவுடன் அதில் ஒரு சிட்டிகை உப்பைக் கலந்து குடிப்பதால் ஜீரண சக்திக்கு உதவியாயிருப்பதுடன் வாயுவில் இருக்கும் நச்சுத்தன்மையையும் அகற்றி விடுகிறது!

— புவனாப்ரியன்.

---

இந்தச் சண்டாளிதான் காரணம்... உமாவை ரூமிலே வச்சு பூட்டிக்கிட்டே இருந்திருந்தா ஒரு வம்பும் இல்லை. இப்ப பாருங்க எத்தனை பெரிய இடியை சுமந்துக்கிட்டு வந்திருக்கா அந்தப் பொண்ணு... எல்லாம் இவளாலேதான்...'' திட்டினான்.

தேவகி கீழுதட்டைக் கடித்து கொஞ்சம் கொஞ்சமாக அழுகைக்கு முயன்றாள்.

மாமி 'டக்'கென்று சொன்னாள்.

''தேவகியை ஏன் திட்டறேள்...? அவளோட நோக்கம் எவ்வளவு உயர்ந்ததுன்னு யோசியுங்கோ...! பெத்தவ நான். உமா மேலே எனக்கு இல்லாத அக்கறையும், பொறுப்பும் அவளுக்கு இருந்திருக்கு. நானும் கூடவே இவ கூட தூக்கம் முழிச்சிருந்தேன்னா உமா வீட்டை விட்டு கிளம்பறதுக்குள்ளேயே பிடிச்சிருக்கலாம். சலிப்பு, தூக்கத்திலே ஆர்வம் எல்லாம் சேர்ந்து என்னை சின்ன தியாகம் பண்ணக் கூட தகுதியற்றவளா ஆக்கிடுத்து. இது, என்னோட தப்புக்குக் கிடைச்ச தண்டனை. கொஞ்ச நாள் சிநேகிதத்துக்காக உமாவைக் காப்பாற்ற தேவகி எடுத்துக்கிட்ட முயற்சிகளுக்கு கோயில் கட்டிக் கும்பிடணும்...'' என்றது தேவகிக்கு ஆறுதலாயிருந்தது.

''சரி... இப்ப உமா பிரச்னைக்கு என்ன தான் முடிவு எடுத்திருக்கீங்க?''

''அதான் தெரியலை. யாரு கெடுத்தான்னு தெரியலை. இந்த நிலைமையிலே அபார்ஷன் பண்ணறதுதான் சரின்னு தோணறது....''

சேகர் ஏதோ யோசித்தான்.

கருச்சிதைவு பண்ணுவதென்றே தீர்மானம் நிறைவேறிற்று. தூரமாயிருந்த பகுதியில் ஒரு நர்சிங் ஹோமில் அந்தரங்கமாய் சேர்க்கப்பட்டாள் உமா.

தேவகிதான் துணைக்குக் கூட இருந்தாள் அவளுடன்.

டி அண்ட் சி செய்து முடித்ததும் காய்ச்சலில் அத்துடன் வலியில் மயக்கமாய் என்னென்னவோ பிதற்றினாள் உமா.

தேவகியின் ரத்த அணுக்களில் மின்சார அதிர்ச்சி. தலையில் பிட்யூட்டரிக்குள் நன்கு சுரண்டியது அவளுக்கு. சிறிது சிறிதாய் தேவகியின் மூளைப் பிரதேசம் கட்டுப்பாடிழந்து கொண்டு வந்தது. போதாக்குறைக்கு உமா வேறு அலறிக் கொண்டே எழுந்து போய் ஆஸ்பத்திரியின் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டு விட்டாள். அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

டி அண்ட் சி சிகிச்சை முடிந்ததும் உமா புலம்பினது தேவகியின் காதில் விடாமல் எதிரொலித்தது. ''வே.... வேணாம் போலீஸ்காரர் ஸார்...! நா... நான் இன்னொருத்தரோட மனைவி.. என்னைக் கெடுத்துராதிங்கோ... வாழ்க்கையை நாசம் பண்ணிராதிங்கோ.. என் புருஷனும், குழந்தையும் அனாதையாயிடுவா(!) நான் செத்துப் போயிடுவேன். வை... வைத்திக்கு அப்புறம் அம்மா கிடையாது...! யோசிச்சுப் பாருங்க.. உங்காத்து தேவகியை யாராவது கெடுத்தா எப்படியிருக்கும்? தேவகியக்கா செத்துப் போய் குழந்தை வாசு அனாதையாதானே இருப்பான்? சொன்னாக் கேளுங்கோ ஸார்..! சொன்னா...! அப்புறம் நான்...! குழந்தை அனாதையா?''

தேவகியின் நெஞ்சு திரைறத் திரை உண்மை வந்து அடைத்துக் கொண்டது. போலீஸ்காரன் ஆயுதத்தை பயன்படுத்தித் தன் புருஷன் உமாவை பயமுறுத்தி ஏதோ ஓர் இருட்டுப் பிரதேசத்தில்...

அதைப் புரிந்து கொண்ட தேவகியால் உமா செத்துப் போனதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆம். உமாவின் பிணத்தை வெளியே கொண்டு வந்து கிடத்தும் போது தேவகி முழுக்க பைத்தியமாகி இருந்தாள்.

பிரேதத்தை மலங்க மலங்க பார்த்தாள்.

லேடி டாக்டர் தேவிக்கு 'மனச்சிதைவு' ஏற்பட்டதற்கு ஏதாவது ஒரு காரணம் சொல்லக்கூடும். அது சரியானதாக இருக்கவும் கூடும்.

ஆனால், பாட்டியின் கூற்றுப்படி அந்த இல்லத்தில் இன்றைக்கு வரை ஒரு பெண் பைத்தியமாகிக் கொண்டிருக்கிறாள்.

இதோ. அடுத்த பைத்தியம் ரெடி.




இப்பொழுது உங்கள் தேவைக்கேற்ப புத்துணர்ச்சியுடன் கூடிய சில்லென்ற மில்க் ஷேக் தயார். உங்களுக்கு மிகவும் பிடித்த சுவையைத் தேர்ந்தெடுங்கள். அருந்தி மகிழுங்கள். தினம் தினம் மனதிற்கேற்றபடி ருசியை தேர்ந்தெடுங்கள். அருந்தி மகிழுங்கள். ராஸ்பெரி, ஸ்ட்ராபெரி, பாதாம்மில்க,ரோஸ்மில்க, ஆரஞ்சு, ஏலக்காய் அல்லது பிஸ்தா போன்ற நறுமணங்கள். உங்கள் சிந்தனைக்கேற்றபடி பிஸ்தாவும் குங்குமப்பூவும் சேர்த்து கூட. இதுபோன்று நாளுக்கு நாள் ருசியை மாற்றிக்கொண்டே போகலாம். அருமையான நிறங்கள். புஷ் புட் நிறங்கள். ரோஸ், பச்சை, ஆரஞ்சு அல்லது மஞ்சள். சிந்தனையை செயலாற்றுங்கள், இத்துடன் ஐஸ்க்ரீமை சேருங்கள் அல்லது கட்டி ஆடையை கலந்து கடைந்து பருகுங்கள் ஆகா, ம்ம்... தெவிட்டாத தீஞ்சுவை.

**BUSH**

புஷ் ஃப்ளேவர்ஸ்
மற்றும் கலர்களில்
சர்வதேசப் புகழ்
பெற்ற பெயர்




18 ஃப்ளேவர்-
களுக்கும் மேல்

BUSH BOAKE ALLEN
(INDIA) LIMITED
St. Thomas Mount
Madras 600 016.

*Marketed by Parry's.*

Sista's-BBAL-699/87 TAM A






**பொருள்: சுவைத்த உணவு**

## முதல் பரிசு:

### காய்கறி கார புட்டு

தேவையான பொருட்கள்:

கோதுமை ரவை (சம்பா) — 200 கிராம்.
பயத்தம் பருப்பு — 200 கிராம்.
உப்பு — தேவையான அளவு.
கடுகு — 1 டீஸ்பூன்.
உளுத்தம் பருப்பு — 1 டீஸ்பூன்.
டால்டா (அ) எண்ணெய் — 50 கிராம்.

வேண்டிய காய்கறிகள்:

காரட் (அ) பீட்ரூட் — 200 கிராம்.
காலிஃப்ளவர் — 1 சிறிய பூ.
பச்சைப் பட்டாணி — 50 கிராம்.
வெங்காயம் — 2.
உருளைக்கிழங்கு — 2.
கொத்துமல்லித் தழை — 1 கட்டு.
பச்சை மிளகாய் — 6.
இஞ்சி — சிறு துண்டு.
தேங்காய் — 1 மூடி.
எலுமிச்சம்பழம் — 1.

செய்முறை: பயத்தம் பருப்பைத் தண்ணீரில் ஊற வைக்கவும். கோதுமை ரவையை வெறும் வாணலியில் சிவக்க வறுக்கவும். வறுத்த ரவையைத் தண்ணீரில் ஊற வைக்கவும். காரட் அல்லது பீட்ரூட்டை பூப் போல் சீவி வைத்துக் கொள்ளவும். ஊறிய பயத்தம் பருப்பைத் தண்ணீர் விடாமல் நைசாக அரைக்கவும். அரைத்த விழுதுடன் ஊற வைத்த கோதுமை ரவை, சீவிய துருவல் திட்டமாக உப்பு சேர்த்துக் கரைக்கவும். கரைத்த மாவை இட்லித் தட்டில் ஊற்றி வேக விடவும். வெந்தவுடன் எடுத்து ஆற வைத்து நன்றாக உதிர்த்து வைத்துக் கொள்ளவும்.

பட்டாணி, உருளைக்கிழங்கு, காலிஃப்ளவர், இவைகளைச் சிறிது உப்பு, மஞ்சள் பொடி போட்டு வேக விடவும்.

(காலிஃப்ளவரை உப்புத் தண்ணீரில் போட்டு எடுத்தால் அதில் உள்ள புழுக்கள் வந்துவிடும்.)

வெங்காயம், இஞ்சி, மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். மல்லித் தழையையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயைத் துருவிக் கொள்ளவும்.

அடி கனமான பாத்திரத்தில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு போட்டு வறுபட்டவுடன் நறுக்கிய வெங்காயம், இஞ்சி, மிளகாய், போட்டு வதக்கவும். வதங்கியவுடன் ஆவியில் வெந்த கோதுமை கலவையைக் கொட்டி நன்கு கிளறவும். ஆறியவுடன் எலுமிச்சம் பழத்தைப் பிழியவும்.

— எஸ். ஜெயலட்சுமி, கடலூர் — 1.

## இரண்டாம் பரிசு:


### சீரகக் குழம்பு பாத்

தேவையான பொருட்கள்:

அரிசி — 2 ஆழாக்கு
புளி — சிறிய எலுமிச்சை அளவு
உப்பு — தேவையான அளவு
மஞ்சள் தூள் — ஒரு சிட்டிகை
சீரகம் — 2½ டீஸ்பூன்
கடுகு — ½ டீஸ்பூன்
பெருங்காயம் — சிறிதளவு
மிளகாய் வற்றல் — 5 அல்லது 6
உளுத்தம் பருப்பு — 1 டீஸ்பூன்
குழம்பு அல்லது ரசம் பொடி — 1 டீஸ்பூன்
அரிசி மாவு — 2 டீஸ்பூன்
நெய் — 3 டீஸ்பூன்
எண்ணெய் — 3 டீஸ்பூன்

செய்முறை:

புளி, உப்பு இரண்டையும் 2½ டம்ளர்




* ஜெயலட்சுமி



* கல்யாணி



* லக்ஷ்மி





வெதுவெதுப்பான டம்ளர் நீரில் ஊற வைக்கவும். அரிசியைத் திட்டமாக நீர் ஊற்றி குக்கரில் வேகவைத்துக் கொள்ளவும்.

புளி உப்பைக் கரைத்து, மஞ்சள் தூளைப் போட்டு சில நிமிடங்கள் கொதிக்க விடவும். சீரகத்தைப் பொடி செய்யவும். எண்ணெய் விட்டு, கடுகு, பெருங்காயம், உளுத்தம் பருப்புப் போட்டு, பருப்பு சிவந்தவுடன் பொடி செய்த சீரகத்தைப் போட்டு கிளறி அடுப்பை விட்டு உடனே இறக்கி விடவும்.

கொதித்துக் கொண்டு இருக்கும் புளித் தண்ணீரில் பொடியைப் போட்டு, மாவைக் கரைத்து ஊற்றி இரண்டு கொதி வந்தவுடன் வாணலியில் தயாரித்து வைத்துள்ள கலவையைக் கொட்டி, பொங்கிவரும் சமயத்தில் அடுப்பை விட்டு இறக்கிவிடவும்.

குக்கரிலிருந்து சாதத்தை ஒரு அகலப் பாத்திரத்தில் கொட்டி, நெய்யை ஊற்றிக் கிளறி சீரகக் குழம்பை அதில் ஊற்றி கரண்டியால் நன்கு கலந்து மூடி வைக்கவும். ஐந்து நிமிடங்கள் கழித்து உபயோகிக்கவும்.

சீரகக்குழம்பு பாத்தை சூடாக, சுட்ட அப்பளம் அல்லது பருப்புத்துவையலுடன் சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். இது மழை காலத்திற்கு மிகவும் நன்றாக இருக்கும்.

எஸ். கல்யாணி
சென்னை — 91

**மூன்றாம் பரிசு:**

## பருப்பு அப்பம்

தேவையானவை:


பச்சரிசி 2 கப்
து. பருப்பு 1 கப்
உ. பருப்பு ½ கப்
மிளகு 1 ஸ்பூன்
மிளகாய் 4 வற்றல்
பெருங்காயம் துண்டு 1
உப்பு திட்டமாய்
பச்சைமிளகாய் 2
கறிவேப்பிலை, மல்லித்தழை சிறிது
இஞ்சித்துண்டு சிறிது
எண்ணெய் ரீபைண்ட் ஆயில்

செய்முறை:

பச்சை அரிசி, உ. பருப்பு இரண்டையும் ஊறவிட்டு மிளகு, மிளகாய், காயம், உப்பு இவற்றுடன் மிக்ஸியில் ரவையாக அரைத்து வைத்து விட வேண்டும். அதைப் புளிக்க விட்டு மறுநாள் 1 கப் துவரம் பருப்பை ஊறவைத்து அரைத்து, அத்துடன் முதல் நாள் அரைத்துப்புளித்த கலவையும் சேர்த்துக் கலந்து ஒரு சுற்று அரைத்து எடுக்கவும். (கரண்டியால் ஊற்றும் அளவு மாவு தயாரித்து) இதில் கறிவேப்பிலை, மல்லித்தழை, இஞ்சித் துண்டு கலந்து, எண்ணெயை வாணலியில் காயவைத்து, அதில் நிதானமான சூட்டில் ஒவ்வொரு கரண்டியாக ஊற்றி கார அப்பம் தயாரிக்கவும். இது அப்பம் போல நல்ல விட்டமாக நன்கு உப்பி வரும். நடுவில் கத்தி அல்லது கம்பியால் குத்தினால் மத்தியபாகம் மாவின்றி வேகும்.

வெல்ல அப்பம் போன்ற சிறு புளிப்பு ருசியாகவும், வடை போலவும், அப்பம் போன்று காரமாகவும், அடை போன்ற வாசனை ருசியுடனும் இருக்கும்.

ஜெ. லக்ஷ்மி
புது டில்லி — 3



## பரிசுப் பொருட்கள்:

### ஆறுதல் பரிசு:

### ஜுகல் பந்தி

தேவையான பொருட்கள்:

பயத்தம் பருப்பு — 100 கி
அவல் — 100 கி
ஓட்ஸ் — 50 கி
ஜவ்வரிசி — 100 கி
முந்திரிப் பருப்பு — ரூ. 2/—
தேங்காய்த் துருவல் — ஒரு சிறிய கப்

தேவையான காய்கறிகள்:

உருளைக்கிழங்கு (மசித்தது) — ¼ கி
காரட் — 200 கி
பட்டாணி — 200 கி
பெரிய வெங்காயம் — 200 கி
குடமிளகாய் — 1
பச்சைமிளகாய் — 5
இஞ்சி — சிறுதுண்டு
கறிவேப்பிலை, கொத்தமல்லி — கொஞ்சம்
பெருங்காயம் — தேவையான அளவு
உப்பு — தேவையான அளவு
பொரிக்க எண்ணெய் — தேவையான அளவு
தாளிக்க சாமான்கள்
எலுமிச்சம்பழம் — தேவைக்கேற்ப

செய்முறை:

முதலில் ஜவ்வரிசியையும், அவலையும் பாசிப் பருப்பையும் தனித்தனியே நீரில் ½ மணிநேரம் ஊறவிடவும். காய்கறிகளைப் பொடிப் பொடியாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். பின் வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, பெருங்காயம் தாளித்து காய்கறிகளைப் போட்டு நன்றாக வதக்கவும். மசித்த உருளைக்கிழங்கையும் போடவும். பின்பு ஜவ்வரிசி, அவல், பாசிப் பருப்பை தண்ணீர் இல்லாமல் ஒட்டப் பிழிந்து போட்டு ஓட்ஸையும் போடவும். தேவையான உப்பு போட்டு, நன்றாக வதக்கவும். கடைசியில் முந்திரியை நெய்யில் பொன்நிறமாக வறுத்துக் கலக்கவும். இறக்கி பரிமாறும் போதுஎலுமிச்சம் பழம் பிழிந்து கொள்ளலாம்.

சாருமதி ரவிச்சந்திரன்
சென்னை — 34.

### ஆறுதல் பரிசு:

### தூத் ஜிலேபி

தேவையான பொருட்கள்:
மைதா — 1 கப்
பால் — ¾ லிட்டர்
சக்கரை — 200 கிராம்
சமையல் சோடா — 1 சிட்டிகை.
கடலை மாவு — 1 தேக்கரண்டி
தயிர் — 1 மேஜைக்கரண்டி
கேசரி பவுடர் — தேவைக்கேற்ப
ஏலக்காய் — 4
எண்ணெய் — 250 கிராம்
அலங்கரிக்க உலர்ந்த பழங்கள்

செய்முறை:

மைதாவை சோடா உப்புடன் சலித்து கடலை மாவுடன் கலந்து தயிர், நீர் விட்டு தோசை மாவைவிட சிறிது கெட்டியான பதத்தில் கரைக்கவும். 3,4 மணி நேரம் ஊறிய பிறகு ஜாங்கிரி பிழிவது போல் துணியில் ஓட்டை போட்டு எண்ணெயில் பிழியவும். தட்டில் எடுத்து ஆறவைக்கவும். பாலை சர்க்கரை, ஏலக்காய், ஜிலேபி பவுடர் கலந்து ½ லிட்டராகக் காய்ச்சி ஒரு அகலமான பேசினில் போட்டு பரிமார ½ மணி முன்பு ஜிலேபிகளை ஊறப் போடவும். அதற்குப் பிறகு உலர்ந்த பழங்களால் அலங்கரிக்கவும்.

சுசிலா பீமன்
திருச்சி — 21

# சிரிக்கத் தெரிந்தால் போதும்!



ஜோக்' கடிக்கவும், அதை ரசித்துச் சிரிக்கவும் மனிதர்களுக்கு மட்டுமே முடிகிற காரியம். என்றாலும், சிலர் எப்போதும் உம்மணாமூஞ்சியாகவே இருப்பார்கள். சிரிக்கத் தெரியாத மனிதரிடம் ஏதோ கோளாறு இருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டும்.

மனந்திறந்த சிரிப்பு உடலுக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கும் உதவுகிறது. உணர்ச்சிகளை ஒருநிலைப் படுத்துகிறது.

இறுக்கமான சூழ்நிலையை இலகுவாக்க ஒரு சிரிப்பே போதும். 'இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது சேற்றிலும், களைப்பிலும் சிக்கி, மரணத்தின் விளிம்பில் நின்றாலும், அந்த அபாயகரமான சூழ்நிலையில் சிரித்தார்களாம் யூனிட் கமாண்டர்கள்.' அது நம்மாலும் முடிகிற காரியம் தான், என்கிறார் டாக்டர். ஹெர்மன் ரைபர் என்ற ஆராய்ச்சியாளர்.

## 'துன்பம் வரும் வேளையிலே சிரிங்க':

'நோயின் பிடியில் சிக்கி ஹாஸ்பிடலிலிருந்து எப்பதான் டிஸ்சார்ஜ் ஆவோமோ?' என்று ஏங்கும் பேஷண்டுகளுக்குச் சிரிப்பு ஓர் அருமையான மருந்து. அவர்கள் சீக்கிரமே வீடு திரும்பலாம்.

சூழ்நிலைகளுக்கேற்ப நீங்கள் அட்ஜஸ்ட் செய்து கொள்ளச் சிரிப்பு கைகொடுக்கும். 'சாதாரண மனிதன் ஒருவன் சிரிக்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தில் எந்த ஒரு நபராவது சிரிக்காமலிருந்தால் அவருடைய மனநலம் பற்றிச் சந்தேகிக்க வேண்டியிருக்கும்' என்கிறார் மனோதத்துவ நிபுணரான டாக்டர் ஜேகப் லெவின். 'நம்பிக்கையில்லாத, நிராசையுற்ற பேர்வழிகள்தான் நகைச்சுவை உணர்வே இல்லாதவர்களாயிருப்பர்.' இது டாக்டர் ரோஸ் எல். கோஸரின் கருத்தாகும்.

## சந்தோஷத்தின் முகவரி:

பத்திரிகைகளில் வரும் தமாஷ்களை விரும்பிப் படிப்பவரும், கார்ட்டூன் மற்றும் காமெடி படங்களை ஆவலோடு ரசிப்பவரும், ஏனையோரைவிட மனநலம் மிக்கவர்களே!

சிலர் மிகபுத்திசாலிகளாயிருப்பார்கள். ஆனால் சிரிக்க வேண்டிய நேரத்தில் மட்டும் ஏனோ முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டு விடுவார்கள். அவர்களுடைய பயமெல்லாம் எங்கே சுயக் கட்டுப்பாட்டை இழந்து விடுவோமோ என்பதுதான். அப்படிப்பட்டவர்கள் வேண்டுமென்றே நகைச்சுவையை விலக்குவார்கள்.

'களைப்பைப் போக்கும் அரிய மருந்து சிரிப்புதான்' என்கிறார் டாக்டர். ஆன் வில்லியம்ஸ். நரம்புகள் 'டென்ஷன்' ஆனால் உடல், மூளை இயக்கமெல்லாம் ஸ்தம்பித்து விடும். அந்நிலையில் சிரிப்புதான் சஞ்சீவியாகச் செயல்படுகிறது.

சிரிக்கின்றநேரத்தில் அடங்காத சினமோ, ஆத்திரமோ வருமா என்ன? செயற்கைத் தனமில்லாத சிரிப்பு உங்களுக்கு ஒரு சுகானுபவம்.

சிரிப்பு... அது சந்தோஷத்தின் முகவரி! எத்தனைக்கெத்தனை சிரிக்கிறோமோ அத்தனைக்கத்தனை ஆனந்தமுறுகிறீர்கள்.

## தீப்பொறி போல்...

நகைச்சுவை உணர்வில் மலரும் சிரிப்பு ஒருவரின் அறிவுத் திறனுக்கு எடுத்துக் காட்டு. அர்த்தமற்று வழிவது அசட்டுத் தனத்தின் அடையாளம். நகைச்சுவை வாழ்வின் இன்றியமையாத அம்சம். தீப்பொறி பட்டாற்போல் சிலர் பளிச்சென்று விரைந்து சிரிப்பர். அந்த

'விரைவு' அவர்களின் அறிவுக் கூர்மையை அல்லவா வெளிச்சப்படுத்துகிறது!

வலுக்கட்டாயமான புன்னகை கூட வசந்தக் காற்றின் இனிமையை ஏந்தி வரக் கூடும். நீங்கள் 'டல்'லாக உணரும் போதெல்லாம் சிரித்துப் பழகுங்கள். அதைவிட சுறுசுறுப்பு தரும் டானிக் வேறில்லை.

சிரிப்பும் ஓர் உடற்பயிற்சிதான். நீங்கள் சிரிக்கும் போது வயிறு, மார்பு, தோள் பகுதி தசைகள் புத்துணர்ச்சி பெறுகின்றன. நீங்கள் ஏராளமான பிராண வாயுவையும் சுவாசிக்க முடியும்.

சிரிப்புதான் பிரச்னைகளை இலேசாக்குகிறது. சரியான கோணத்தில் பார்க்கச் செய்கிறது.

**'பிரிஸ்கிரிப்ஷன்':**

பவித்ரா ஒரு குடும்பத் தலைவி. ஏகப்பட்ட பிரச்னைகளை இழுத்துப் போட்டுக்



கொண்டு சதா டென்ஷனாகிறவள். உச்சகட்டமாக உடம்புக்கு வந்து ஹாஸ்பிடலில் சேரும்படியாயிற்று. "டாக்டர்! எனக்கு பி.பி. இருக்குமோ, ஷுகரும் இருக்கலாம்" என்று இல்லாத நோயெல்லாம் இருப்பதாக எண்ணி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். 'நோய் உடம்பில் இல்லை, உள்ளேதான்' என்பது டாக்டரின் அனுமானம். அவர் அவளுடைய திருப்திக்காக மருந்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். பவித்ராவின் கணவரை அழைத்து, "உங்கள் மனைவியை நிறைய காமெடி படங்களை விடியோவில் பார்க்கச் செய்யுங்கள்" என்றார். 'விழுந்து விழுந்து சிரித்தே எழுந்து கொண்டாள் பவித்ரா.

இந்தியர்களாகிய நமக்கு அத்தனை நகைச்சுவை உணர்வு இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒன்றுமில்லாததற்கெல்லாம், 'ஆகா, ஊகூ' என்று உணர்ச்சி வசப்படுவதுதான் நம் இயல்பாக உள்ளது. நம்மில் எத்தனை பேர் பிரச்னைகளை லைட்டாக எடுத்துக் கொள்கிறார்கள்?

'மூடி'யானவர்களை விட தமாஷ் பேர் வழிகளுக்குத்தான் நிறைய நண்பர்கள்! நிறைய ஜோக்குகளையும், நகைச்சுவைக் கதைகளையும் படியுங்கள், நினைவில் வையுங்கள். நேரம் பார்த்து எடுத்து விடுங்கள். பார்ட்டியே உங்களால் களைகட்டி விடும். மிக மோசமான சூழ்நிலையைக் கூட ஒரு சின்ன ஜோக் மாற்றிவிடும்.

குழந்தைகளைப் பாருங்கள்! அவர்கள் சிரிப்பு போலியானதில்லை, ஒத்திகை பார்த்துக் கொண்டதில்லை. அதில் 'ஜீவன்' உள்ளது. பூவின் மலர்ச்சியைப் போல் இதழ் விரிந்த புன்னகை நிஜமானது.

**'கிச்சு, கிச்சு':**

ராகவனும், சுமித்ராவும் அடிக்கடி விவாதத்தில் இறங்கி விடுவார்கள். ஒருமுறை ரொம்ப சீரியஸாகி விட்டது. ராகவன் பார்த்தான். 'இந்த நிமிஷமே இவளை 'கூல் டவுன்' செய்தாக வேண்டும். இல்லையேல் மனைவி கோபித்துக் கொண்டு பிறந்தகம் 'பேக்'காகி விடுவாள். தர்மசங்கடமான சூழ்நிலையில் ராகவன் அவளை எப்படி வழிக்குக் கொண்டு வந்தான் தெரியுமா?

"சுமி! நம்ப கல்யாணத்துக்கு முன்னாடியே நீ புத்திசாலி. இப்போ என்னோட புத்திசாலித்தனமும் உன்னண்டை வந்துடுத்து" என்றான் நயமாக. சுமித்ரா குபீரென்று சிரித்து விட்டாள். சூழ்நிலையின் இறுக்கம் ஒரே நொடியில் 'ஸ்மூத்'தாகி விட்டது.

**'A to Z':**

சிரிப்பதால் சந்தோஷம் நமக்கு மட்டுமா வருகிறது! மற்றவர்களுக்கும்தான். ஸோ... சிரிப்பே ஒரு சேவை. மலர்ந்த முகமுடையவர்கள், மற்றவர்கள் மனத்தில் சிறந்த இடத்தைப் பெற்று விடுகிறார்கள். மகிழ்ச்சி என்பது ஜொலிக்கிறது வைரத்தைப் போல, பிரதிபலிக்கிறது கண்ணாடியைப் போல.

சிரிப்பினால் அழகு மட்டுமல்ல, ஆயுளும் கூடுகிறது. எங்கே, சிரியுங்கள் பார்க்கலாம்!

**— தேவநாதன்**

குழந்தைகளுக்கு பள்ளியில் மதிய உணவிற்கு சப்பாத்தி செய்து கொடுக்கும் போது, 1 பங்கு மாவிற்கு, ¼ பங்கு பால் பவுடர், ¼ பங்கு பொட்டுக் கடலை மாவு கலந்து, பிசைந்து சப்பாத்தி செய்யவும். சத்தும், சுவையும் கூடும்.

— ஆனந்தி.



# டாக்டர் பதில்கள்

**என் பெண் திருமணமாகி இரண்டு மாத கர்ப்பம் ஆன வுடன் டாக்டரிடம் காட்டினோம். ஆரோக்கியமாக நன்றா கவே இருந்தாள். திடீரென்று ஒரே உதிரப் போக்கு. டாக்டர் உடனே வந்து ஊசி போட்டார். பிறகு இரண்டு நாட்களில் அதே மாதிரி அடங்காமல் உதிரப் போக்கு வந்து அபார்ஷன் ஆகிவிட்டது. இது எதனால் ஏற்பட்டது? என்ன செய்யலாம்?**

உங்களுடைய பெண்ணுக்கு மூன்று மாதத்தில் அபார்ஷன் ஆகியது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் அது **Healthy Conception** இல்லை. அதாவது குழந்தை உருவாகி 40 — 45 நாட்களுக்குள் நவீன **ultra sound scan** கருவி மூலம் குழந்தை வளருகின்ற பை குழந்தையின் இருதய துடிப்பு ஆகியவற் றைக் கண்ணால் பார்க்கலாம். மூன்று மாதக் குழந்தைக்கு தலை, உடல், கை, கால்கள் மார்பக எலும்பு, முதுகெலும்பு கண் முதலிய எல்லாப் பகுதிகளும் இருக்கும். ஸ்கேன் மூலம் ஒரு சின்னஞ்சிறிய முழு குழந்தையைக் காணலாம். நீங்கள் அனுப்பியுள்ள விவரங்களில் இருந்து இந்த கர்ப்பத்தில் குழந்தை வளரவில்லை என்று தெரிகிறது. இவற்றை ஸ்கேன் மூலம் கண்டுபிடித்து உடனேயே **D & C** செய்து விடுகிறோம்.

உங்கள் பெண் உட்கொண்ட வாந்தி நிறுத்தும் மாத்திரை கள் இதற்குக் காரணம் இல்லை. சில தொற்று நோய்கள் காரணமாக இருக்கலாம். அடுத்த முறை கருத்தரிக்கும் முன் இதற்குச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

மற்றும் கருத்தரித்த பின் தக்க மருத்துவ ஆலோசனையும், **ultra sound** கண்காணிப்பும் அவசியம்.

இத்தகைய நவீன மருத்துவ வசதிகள் உள்ள சென்னை நகரில் இருந்தும் நீங்கள் இப்படி நம்பிக்கைகளுடன் மூன்று மாதங்கள் வரை இருந்தது வருந்தத்தக்க நிலையே!

**எனக்கு மூலம் தொந்தரவு இருக்கின்றது. முதல் பையன் பிறந்த போது லேசாக இருந்தது. அடுத்த பையன் பிறந்த போது வெளிமூலம் அதிகமாகக் காணப்படுகின்றது. ஒவ் வொரு நாளும் ஒரு சொட்டு இரத்தம் இல்லாமல் இருக்காது. புண்ணும் உள்ளது. இதனால் ரொம்ப அவஸ்தைப்படுகி றேன். இதற்கு ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்த முடி யுமா?**

மூலம், அதாவது 'பைல்ஸ்' என்பது மனிதன் மிருகங்களி லிருந்து வேறுபட்டு நேராக இரண்டு கால்களில் நிற்கும் தன்மையால் ஏற்படுகிற ஓர் உபாதையாகும்.

எந்தவிதமான **straining** மற்றும் கடினமான பொருள் களைத் தூக்குதல் போன்றவை இதனை அதிகரிக்கும் கார ணங்கள். பிரசவத்தின்போது ஏற்படுகின்ற சிரமம், பெண் களுக்கும் வருவதற்கு ஒரு முக்கிய காரணம்.

நீங்கள் விவரித்திருப்பதைப் பார்க்கும் போது இது மூன் றாவது நிலை மூலம் என்று தெரிகிறது. இதற்குத் தக்க அறுவைச் சிகிச்சை மூலம் நிவாரணம் பெறலாம். தற்காலிக முறைகள், மற்றும் மருந்துகள் இந்த நிலையில் உங்களுக்குப் பயனளிக்க மாட்டா.

**எனக்கு வயது 25 ஆகிறது. எனக்கு 3½ வயதில் ஒரு மகள் இருக்கிறாள். திருமணமாகி 5 வருடங்கள் ஆகிறது. எனக்கு மாதவிலக்கு ஆன 15 — ஆம் நாளிலிருந்து மார்பகங் கள் மிகவும் கனத்துப் போகின்றன. வலி அதிகமாக உள்ளது. சிறிய அதிர்ச்சி அல்லது பொருள் மேலே பட்டால்கூட வலி தாங்க முடியவில்லை.**

**முதல் பிரசவத்தின்போது, குழந்தை பிறந்தும் பிள ஸண்டா வெளியே வராததால் மிக்வும் சிக்கலான நிலை ஏற்பட்டது. மற்றபடி ஆரோக்கியமாகவே இருக்கிறேன். இதற்கு ஒரு வழி சொல்லுங்கள்.**

எல்லாப் பெண்களுக்கும் மாதவிலக்கு ஆன 14 முதல் 16 நாட்களுக்குள் கருமுட்டை வெளிப்படும். அதே சமயம்



# டாக்டர் பதில்கள்

புரொஜெஸ்ட்ரான் ஹார்மோன் வெளிப்படுவதால் மார்பகம் வீங்கி வலி ஏற்படும். இது இயற்கையானது. இந்தச் சமயத்தில் சாதாரண வலி நிவாரணி மாத்திரைகளை உட்கொண்டாலே போதும். இதற்கு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. மாதவிலக்கு வந்த பிறகு இந்த புரொஜெஸ்ட்ரான் ஹார்மோன் நம் உடம்பிலிருந்து வெளியேறி விடுகிறது. அச்சமயும் உடம்பு நார்மலாக இருக்கிறது.

முதல் குழந்தைக்கு நஞ்சு வருவதில் சிக்கல் இருந்தால் இரண்டாவது குழந்தை பிறக்கும் போதும் அத்தகைய சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**எனக்குச் சிறு வயது முதலே, தூங்கும் சமயத்தைத் தவிர மற்ற நேரங்களில் கை, கால்களில் அளவுக்கு அதிகமான வியர்வை சுரக்கிறது. இதனால் என்னால் எழுதவும் முடியாமல் (பேப்பர் ஈரமாகி விடுகிறது) என்னை நானே தொடவும் கஷ்டமாக உள்ளது. (கையில் உள்ள ஈரத்தால்) என்னால் வெளியே செல்லவும், நான்கு பேர் முன்னால் உட்கார்ந்து பேசவும் கஷ்டமாக உள்ளது.**

**எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. இதற்கு ஏதேனும் நிவாரணம் உண்டா?**

உங்களுக்கு எந்த நேரமும் கை, கால்கள் வியர்ப்பதை மருத்துவத்தில் **Hyperhidrosis** என்ற வியர்வை சுரப்பி நோய் என்றுதான் குறிப்பிடுவோம். இந்நோய் நீங்கள் வர்ணித்துள்ள அளவு அவ்வளவு மோசமானதல்ல. மனநிலையைக் கட்டுப்படுத்துவதாலும் மாத்திரைகளாலும் இதைக் கட்டுப்படுத்தலாம்.

இம்மாதிரியான நிலைக்குக் கீழ்க்கண்டவை காரணங்களாக இருக்கலாம்:

1. மிகவும் உணர்ச்சிவசப்படுபவர்கள் (**Emotional Imbalance and Upsets**).

2. உடம்பில் உள்ள சுரப்பிநீர் முக்கியமாக தைராய்டு சுரப்பிக் கோளாறு.

3. கை, கால்களில் உள்ள வியர்வைச் சுரப்பிகள் வியர்வையை அதிகமாக வெளியேற்றுதல்.

4. வியர்வைச் சுரப்பியில் பிறவிக் கோளாறு.

இந்த நோயைக் கட்டுப்பாட்டில் வைக்க முதலில் மனநிலையில் கட்டுப்பாடு வேண்டும். இதற்கு யோகாசனங்களைக் கற்றுக் கொள்ளலாம். இதற்கும் கட்டுப்படா விட்டால் மருத்துவ ஆலோசனையின்படி மாத்திரைகள் சாப்பிடலாம். இதற்கும் சரியாகாவிட்டால் சிறிய அறுவை சிகிச்சை செய்து நிலைமையைச் சரிசெய்து விடலாம்.

நீங்கள் தைரியமாக மணம் புரிந்து கொள்ளலாம். உங்கள் தாழ்வு மனப்பான்மையை நீக்கித் தைரியமாக இருங்கள்.

**எனக்கு வயது 27. திருமணமாகி 7½ வருடங்கள் ஆகின்றது. இன்னும் குழந்தை இல்லை. குழந்தை பிறப்பதற்காக எல்லா டெஸ்டுகளும் செய்தாகி விட்டது. மாதவிலக்கு 35 நாட்கள் முதல் 70 நாட்கள் வரை எப்படி வேண்டுமானாலும் வருகின்றது. அப்படியே வந்தாலும் ஒரு நாள்தான் படுகின்றது. இதனால் எதுவும் கெடுதல் உண்டா?**

**திருமணமாவதற்கு முன்னும் இப்படியே Irregular ஆக இருந்தாலும் ஒரு வாரம் படும்.**

**எனக்கு 1. மாதவிலக்கு முறையாக வரவும், 2. குழந்தை பிறக்கவும் தங்களது ஆலோசனை தேவை. மேலும் எனது கணவருக்கும் உயிரணு எண்ணிக்கை குறைவாக உள்ளது.**

மாதவிலக்கு ஒழுங்கற்ற முறையில் வந்தால் கருவகத்திலிருந்து கருமுட்டை நாள் தள்ளி வருகிறது என்பது அர்த்தம். மாதவிலக்கு மற்றும் கருமுட்டை சீராக வர மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். குழந்தை இல்லாமைக்குத் தாங்கள்

**பதில்கள்: டாக்டர் கமலா செல்வராஜ்**

**தொகுப்பு: சுபா பாரதி.**

செய்து கொண்ட லாப்ராஸ்கோபி, ஸ்கேன் + ஃபெர்டைல் தெரபி, மற்றும் தங்கள் கணவரின் விந்துப் பரிசோதனை ஆகிய சோதனைகளின் முடிவுகளைப் பார்த்தபின்தான் சரியான விடை கூற முடியும். பரிசோதனைகளின் முடிவுகளை நீங்கள் குறிப்பிடவில்லை. எனவே நீங்கள் மருத்துவரை அணுகுவது சிறந்தது. கணவரின் விந்து அளவை மீண்டும் கணக்கிட்டு அதற்கு மருந்து உட்கொள்ள வேண்டும்.

மாதவிலக்கு சற்றுத் தள்ளி வருவதால் உங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது. குறைந்த அளவு உதிரப் போக்கு ஏற்படுவதைச் சரி செய்யச் சில மாத்திரைகளையும், கருப்பை டானிக்கையும் உட்கொள்ளலாம்.

---

# கமகம இஞ்சி புலாவ்!!



நாங்கள் ஒரு சமயம் பம்பாய் சென்ற போது, அங்கே என் நெருங்கிய நண்பர் வீட்டில் விருந்துக்குச் சென்றோம். எல்லா அயிட்டங்களும் நன்றாக இருந்தன. ஆனால் இந்த இஞ்சி புலாவ் மட்டும் கமகமவென்று, வெகு ருசியாகத் திகழ்ந்தது. அதை உண்டதால், வயிறும் நார்மலாக இருந்தது. மற்ற எண்ணெய் சேர்ந்த பண்டங்களால், வயிறு உபாதைகள் வரவில்லை. அவர் செய்த விதத்தைக் கீழே குறிப்பிடுகிறேன்.

தேவையான பொருட்கள்:

பாஸ்மதி அரிசி — 2 கப்,
நெய் — 2 டேபிள் ஸ்பூன்,
வெங்காயம் — 1 to 2.

இஞ்சி ஸிரப் தயாரிக்கத் தேவையான பொருட்கள்:

இஞ்சி — 100 கிராம்,
ஏலக்காய் — 5 to 6,
லவங்கப்பட்டை — 3 துண்டு,
கிராம்பு — 8 to 10,
சர்க்கரை — ½ கப்,
நீர் — 6 கப்,
ஆரஞ்சு கலர் — சில துளிகள்,
வறுத்த முந்திரி — 2 டேபிள் ஸ்பூன்,
டுட்டிஃப்ரூட்டி — 2 டேபிள் ஸ்பூன்,
எலுமிச்சம்பழம் — 1,
உப்பு — தேவைக்கேற்ப.

செய்முறை:

முதலில் ஸிரப் தயாரிக்க, இஞ்சியை மசியத் தட்டி, ஏலக்காய், கிராம்பு, லவங்கப்பட்டைகளையும் ஒன்றிரண்டாகத் தட்டி, சர்க்கரை போட்டு, 6 கப் நீர் விட்டுக் கொதிக்க விடவும். அது சுமாராக 4 கப் அளவாகக் குறைந்ததும், இறக்கி, எலுமிச்சைச் சாறு பிழிந்து ஆறவிடவும்.

பிறகு வடிகட்டிக் கொள்ளவும்.

அரிசியை 10 — 15 நிமிடங்கள் ஊற வைக்கவும். வெங்காயத்தைப் பொடியாக அரியவும். ஒரு கனமான பாத்திரத்தில், நெய் காய வைத்து, வெங்காயத்தைப் போட்டு வதக்கி, ஊறிய அரிசி, இஞ்சி ஸிரப், கலர் சேர்த்து உப்பும் போட்டு, மிதமான தீயில் வேக வைக்கவும். அரிசி வெந்தவுடன், டுட்டிஃப்ரூட்டி போட்டுக் கலந்து மூடிச் சில நிமடங்கள் கழித்து இறக்கி வைத்து விடவும். பரிமாறும் முன், வறுத்த முந்திரியால் அலங்கரிக்கவும். இந்த உணவு நான் சுவைத்ததிலேயே வெகு எளிமையான, சுவையான உணவாகும்.

— ஆனந்தி பாலகிருஷ்ணன்.

# பாம்பே டையிங்

# மாபெரும் விழாக்கால சலுகை

## இலவசம்

**ரூ.62.40** மதிப்புள்ள
பாம்பே டையிங்
**சுந்தரம் ஓுங்கி** (2 mtrs)
இலவசம்!
**ரூ.400/-**க்கு பாம்பே டையிங்
துணிரகங்கள் வாங்கும்
போதெல்லாம்..

## இலவசம்

**ரூ.49.60** மதிப்புள்ள
பாம்பே டையிங் **ரான்சன்
டெரிடவல்** (91cm x 145cm)
இலவசம்!
**ரூ.250/-**க்கு பாம்பே டையிங்
துணிரகங்கள்
வாங்கும் போதெல்லாம்.

தமிழ்நாடு, கேரளா மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள 115க்கும் மேற்பட்ட ஷோ-ரூம்களிலும், அங்கீகாரம் பெற்ற டீலர்களிடமும் மட்டும் கிடைக்கும்.

முந்துங்கள்!
இந்த அரிய வாய்ப்பு சில நாட்களுக்கு மட்டுமே/ஸ்டாக்குகள் தீரும் வரை.

FESTIVAL OFFER Organised and Sponsored by:

கோயமுத்தூர் - 11 • சென்னை - 17
Bankers: The Federal Bank Ltd

உங்களுக்காகவே... பாம்பே டையிங் வழங்கும் அரிய வாய்ப்பு! ஒவ்வொரு ரூ.400/- மதிப்புள்ள பாம்பே டையிங் துணி ரகங்கள் வாங்கும் போதும், ரூ.62.40 மதிப்புள்ள பாம்பே டையிங் சுந்தரம் ஓுங்கி இலவசம்! அல்லது, ஒவ்வொரு ரூ.250/- மதிப்புள்ள பாம்பே டையிங் துணி ரகங்கள் வாங்கும்போதும், ரூ.49.60 மதிப்புள்ள பாம்பே டையிங் ரான்சன் டெரிடவல் இலவசம்!

# பாம்பே டையிங்

# அதிகமாகக் கோபம் வருவதேன்?

**அக்குபங்சர்**

டாக்டர் சித்தீக் ஜமால்,
டாக்டர் பஸ்லூர் ரஹ்மான்.


சென்ற இதழில் இரத்த அழுத்தம், மாரடைப்பு நோய் எவ்வாறு ஏற்படுகிறது, அவற்றின் அடிப்படை என்ன என்பதை விளக்கியிருந்தோம். இந்த இதழில், சாதாரண வைத்திய முறையில் இந் நோய்களை அணுகும் முறை என்ன, இந்த அணுகு முறையில் ஏன் இந் நோய்களைத் தவிர்க்கவோ, கட்டுப்படுத்தவோ, குணப் படுத்தவோ முடியவில்லை என்பதையும்., அக்குபங்சர் வைத்தியத்தின் அணுகுமுறை யில் எவ்வாறு இந் நோய்களைத் தவிர்ப்ப தும், கட்டுப்படுத்துவதும் சாத்தியமாகிறது என்பதையும் பார்ப்போம்.

## 1. இரத்த அழுத்தம்:

இதற்குக் காரணங்களாகக் கூறப்படு பவையாவன: 1. உடற்பயிற்சியின்மை, 2. அதிகப்படியான கவலை, 3. கோபம், 4. கொழுப்புச் சத்துள்ள உணவுப் பொருட் களை உண்ணுதல், 5. அதிகமாக உப்புச் சுவையை உணவில் சேர்த்தல், 6. முதிய வயது, 7. சிறுநீரக உறுப்புக் கோளாறு, 8. இரத்தக் குழாய்கள் சுருங்குதல். இவ்வள வும் காரணங்களாகக் கூறப்பட்டு விட்டதன் பின்னர், வைத்திய முறையையும் கவனிப் போம்.

## 2. உடற்பயிற்சி செய்யச் சொல்லுதல்:

ஒருவன் உடற்பயிற்சி செய்யாமல் சோம் பேறித்தனமாக உட்கார்ந்திருக்கிறான் என்றால், அவனது உடலை இயங்க வைக்கக்கூடிய சக்தி, போதுமான அளவுக்கு, அவன் உண்ணும் உணவில் இருந்து கிரகிக்கப்படவில்லை என்பது தான் அர்த்தம். எனவே அவனுடைய ஜீரண உறுப்புக்களின் பலவீனத்தால், போதிய சக்தி கிடைக்காத நிலையில்தான்



சோம்பேறித்தனம் ஏற்படுகிறது. இந்த நிலையைச் சரிப்படுத்துவதின் மூலம் உடல் தானாக சுறுசுறுப்படையும். அதை விட்டு முடியாத ஒருவனை உடற்பயிற்சி செய்யச் சொல்லிக் கட்டாயப்படுத்துவதால், பின் விளைவு மேலும் மோசமாகும். அக்குபங்சர் வைத்திய முறை குறிப்பிட்ட ஜீரணக் கோளாறு, கல்லீரலின் இயங்காத தன்மை தான் காரணம் என்று கூறுகிறது.

## 3. அதிகப்படியான கோபம்:

கல்லீரல், பித்தநீர்ப்பை ஆகியவை அளவுக்கு மீறிய சக்தி தேக்கத்தினால் பாதிக்கப்படும் போது, கோபக் கனல் கண்களில் தெரியக்கூடிய அளவுக்கும் சிலருக்கு ஆத்திரம் ஏற்பட்டு அறிவை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்துகிறது.

கல்லீரல் அல்லது பித்தநீர்ப்பை ஆகிய வற்றில் ஏற்பட்டுள்ள சக்தி தேக்கத்தை வடித்து, சக்தி ஓட்டத்தை இவ்வுறுப்புக் களில் சீர்ப்படுத்துவதின் மூலம், கல்லீரலை யும் பித்தநீர்ப்பையையும் சீராக, அமைதி யுடன் இயங்க வைக்க முடியும். கல்லீரலை அமைதிப்படுத்துவதற்குரிய புள்ளியானது, கல்லீரல் சக்தி நாளத்தின் 3—வது புள்ளி யிலும் (**Point — 3 in Liver Meridian**), பித்தநீர்ப் பையை அமைதிப்படுத்தும் புள்ளியானது, அதனுடைய சக்தி நாளத்தின் 40—வது புள்ளியிலும் (**Point — 40, Gall bladder Meridian**) அமைந்துள்ளது.

கல்லீரலும், பித்த நீர்ப்பையும் சாந்த மடையும் போது ஒருவரின் கோப உணர்வு கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து,

தெளிந்த அறிவு ஏற்படுகிறது. இவ்விரு உறுப்புக்களும் கொழுப்புப் பொருளை ஜீரணிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கிறது. இவற்றில் கோளாறு ஏற்படும் போது உணவுப் பொருளில் உள்ள கொழுப்புப் பொருள்களின் ஜீரணமும் பாதிக்கப்படுகிறது.

ஜீரணம் ஆகாத கொழுப்புப் பொருட்கள் வயிற்றில் அதிக நேரம் தங்கும் போது, வயிற்றுக்கு இவை வேண்டாத பொருட்களாக மாறி, வயிற்றின் இயங்கும் தன்மையையும், அதன் ஜீரணத் திறனையும் வெகுவாகப் பாதிக்கிறது.

உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் இரண்டு செயல்பாடுகள் உள்ளன. ஒன்று, அந்தந்த உறுப்புக்களின் இயங்கும் தன்மையைக் கட்டுப்படுத்துதல், இரண்டு, அதனதன் சம்பந்தப்பட்ட மனநிலையைக் கட்டுப்படுத்துதல். உதாரணமாக:

1. சிறுநீரகம்:

இயங்கும் தன்மை: சிறுநீர் பிரித்தல்
மனத் தன்மை: பயம், நடுக்கம்.

2. கல்லீரல்:


இயங்கும் தன்மை: பித்தநீர் சுரத்தல்
மனத் தன்மை: கோபம், மனச்சோர்வு.

3. இதயம்:

இயங்கும் தன்மை: இரத்த ஓட்டம்
மனத் தன்மை: மனம் பலவீனம், சஞ்சலம், நிம்மதியின்மை.

4. நுரையீரல்:


இயங்கும் தன்மை: சுவாசம்
மனத்தன்மை: அதிகமான துக்கம், கேவிக் கேவி அழுதல் (அதற்கான போதிய காரணமில்லாமல்)




5. வயிறு:

இயங்கும் தன்மை: ஜீரணித்தல்
மனத்தன்மை: கவலை, வருத்தம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்

கல்லீரலின் இயங்கும் தன்மையின் பாதிப்புக்குச் சரிவர ஜீரணிக்கப்படாத கொழுப்புப் பொருள் வயிற்றில் தங்கி அதன் தன்மையைப் பாதிக்கும் போது, இரண்டு வகையான பாதிப்புக்களை விளைவிக்கிறது. 1. ஜீரணக் கோளாறு, 2. அதிகப்படியாகக் கவலையையும், வருத்தத்தையும், தக்க காரணமில்லாமல் ஏற்படுத்துகிறது. இத்தகைய குறைபாடுகளை, கல்லீரலை சீராக இயக்க வைப்பதின் மூலம்





பூரணமாக நிவர்த்தி செய்து விடலாம்.

எனவே, இரத்த அழுத்தத்திற்குக் காரணங்களாகக் கருதப்படும் அனைத்துக் காரணங்களையும் கல்லீரலையும் பித்தநீர்ப் பையையும் அதனுள் அக்குபங்சர் புள்ளிகளான கல்லீரல் சக்தி நாளத்தின் 3—வது புள்ளியையும் பித்தநீர்ப்பை சக்தி நாளத்தின் 40—வது புள்ளியையும் தூண்டுவதின் மூலம் நீக்கி விடலாம்.

நாம் நடைமுறையில் அறிந்த ஒன்று என்னவெனில் 'இரத்த அழுத்தம்' உள்ளவர்கள் உணவில் உப்பைக் குறைக்க வேண்டும் என்பது. உப்புச் சுவையானது சிறுநீரகத்திற்கு ஊட்டமளிக்கக் கூடியதாகவும், உணவளிக்கக் கூடியதாகவும் உள்ளது. அளவுக்கதிகமாக இந்தச் சுவையை விரும்பும் போது சிறுநீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக சிறுநீர்ப் பிரிதல் குறைகிறது. கால்களில், முகத்தில் வீக்கம் ஏற்படுகிறது. இரத்த அழுத்தம் அதிகமாகிறது. சிறுநீரகத்தின் இரண்டாவது செயல்பாடான, பயத்தைக் கட்டுப்படுத்தும் தன்மையும் பாதிக்கப்படுகிறது.


இப்போது இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுபவர்களை அவர்களின் மனோநிலையை அடிப்படையாக வைத்து மூன்று பிரிவினர்களாகப் பிரிக்கலாம். ஒன்று: அதிகப்படியான கவலையும், மன வருத்தத்தையும் கொண்டுள்ளவர்கள். கவலையும், மனவருத்தமும் வயிறு, மண்ணீ




ரல் உறுப்புக்கள் சக்தியிழந்து சோர்வடையும் போது உருவாகிறது. இந்தப் பிரிவினரை வயிற்றையும், மண்ணீரலையும் தூண்டக்கூடிய புள்ளிகளைத் தூண்டுவதின் மூலம் இரத்த அழுத்தத்தை சீரான நிலையில் வைக்க முடியும்.

இரண்டு: அதிகப்படியான பய உணர்வு உள்ளவர்கள். பயம் சிறுநீரகம் **(Kidney)** சம்பந்தப்பட்ட ஓர் உணர்ச்சி ஆகும். சிறுநீரகத்தை இயக்கும் சக்தியின் அளவு குறையும் போதோ அல்லது சிறுநீரகத்தில் அதற்குப் புறம்பாக உள்ள தடையின் காரணமாக அளவுக்கு அதிகமாக சக்தி தேங்கும் போதோ இரத்த அழுத்தமானது அதிகரிக்கிறது. ''பயத்தினால் நெஞ்சே வெடித்து விடும் போலிருந்தது'' என்ற வார்த்தைகளை நாம் பல சமயங்களில் நமது வாழ்நாளில் கேட்டிருப்போம். அதன் அர்த்தம் இதுதான். சிறுநீரகத்தின் இயங்கும் தன்மை பாதிக்கப்படும் போது பய உணர்வு கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் அதிகரிக்கிறது. இரண்டாவது இரத்த அழுத்தம் அதிகமாகிறது.

''எனக்குப் பயத்தினால் தேகமெல்லாம் வெலவெலத்துப் போயிடுத்து'' என்ற வார்த்தைகளையும் நாம் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் இரத்த அழுத்தம்




வெகுவாகக் குறைந்து விடும். இந்த நிலை சிறுநீரகத்தில் மிகக் குறைவான சக்தி ஓட்டத்தினால் ஏற்படுகிறது. மாறாக, அதிக இரத்த அழுத்தம் அதிக அளவு சக்தி தேக்கம் சிறுநீரகத்தில் தேங்கும் போது ஏற்படுகிறது. இரண்டு நிலைகளிலும் இரத்த அழுத்தம் பாதிப்புக்குள்ளாகிறது. சிறுநீரகத்தைத் தூண்டி அதன் சக்தி நிலையைச் சீர்ப்படுத்தும், சிறுநீரக நாளத்தில் உள்ள மிக முக்கிய புள்ளிகளை **(Kidney Point 3 and Point 7)** தூண்டுவதின் மூலம் இவ்வகை இரத்த அழுத்த பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த முடியும். சிறுநீரகத்தில் 'சக்தி நிலை' சீரடையும் போது அதன் காரணமாக ஏற்பட்டுள்ள பய உணர்வும் அடங்கி சாதாரண மனநிலையும் ஏற்படும்.

மூன்று: அதிகமாக உணர்ச்சிவசப்படுபவர்கள்; கோபமும் எரிச்சலும் அடைபவர்கள். அடக்க முடியாத கோபம் கொண்ட மனநிலை, ஒருவருடைய 'கல்லீரல்' பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது அல்லது பாதிக்கப்பட்டு விட்டது என்பதற்கு அடையாளமாகும். கோப உணர்வு கல்லீரல் சம்பந்தப்பட்டதாகும். கல்லீரல் சக்தி நிலையில் மாற்றம் ஏற்படும் போது **(Energy Excess or Deficiency)** கோப உணர்வுகள் ஏற்பட ஆரம்பிக்கின்றன.

உதாரணமாக, குடிபோதையில் இருப்பவன் எளிதில் உணர்ச்சிவசப்பட்டு விடுவான்; கோபத்தையும் கட்டுப்படுத்த மாட்டான். காரணம், குடி ஈரலைப் பாதிக்கிறது. கோப மனப்பான்மை உள்ளவர்களின் 'இரத்த அழுத்தத்தை' கல்லீரலின் 'சக்தி நிலை'யைச் சீர்படுத்துவதின் மூலம் கட்டுப்படுத்த முடியும். கல்லீரலின் சக்தி நாளத்தில் 2—வது புள்ளியும், 3—வது புள்ளியும் கல்லீரலின் சக்தி நிலையைச் சீர்ப்படுத்தும் மிக முக்கியமான புள்ளிகளாகும். கல்லீரலின் சக்தி நிலை சீரடையும் போது முதலில் கோபம் அடையும் மனநிலை குறைய ஆரம்பிக்கும். மனம் சாந்தமாக இருப்பதை நோயாளிகளே உணர்வார்கள். இரத்த அழுத்தமும் கட்டுப்பாட்டில் இருக்கும். இரத்த அழுத்தம் சம்பந்தமான எந்தப் பின்விளைவுகளும், பக்க விளைவுகளும் அடியோடு மறைந்து போகும்.

இதுவரை பலவிதமான உறுப்புக்களும், அதன் மனநிலைகளும் எவ்வாறு இரத்த அழுத்தத்தைப் பாதிக்கிறது என்பதைத் தனித் தனியாகப் பார்த்தோம். இரத்த அழுத்தமானது தனித்தனி உறுப்புக்களின் பாதிப்பினாலோ, அல்லது இரண்டு உறுப்புக்கள் அல்லது மூன்று உறுப்புக்களின் பாதிப்பின் கூட்டுப் பிரதிபலிப்பாலோ ஏற்படலாம். பாதிக்கப்பட்டவர்களின் மனநிலைகளும் பலவிதங்களில் பிரதிபலிக்கும். இவற்றின் அடிப்படையில் 'இரத்த அழுத்தம்' நோயினைக் கட்டுப்படுத்தும் போது அதன் பின்விளைவான 'மாரடைப்பு நோய்' ஏற்படுவதற்கு அணுவத்தனை வாய்ப்பும் கிடையாது.


பல்லாயிரக் கணக்கான
இல்லத்தரசிகளின்
நம்பிக்கைக்குரியது!
RAE-2111
எல். ஜி
கூட்டுப் பெருங்காயம்
போலி சரக்குகள்
உள்ளன ஜாக்கிரதை!
L.G.
ASAFOETIDA
LALJEE GODHOO & CO.
SOWCARPET MADRAS
ASAFOETIDA POWDER
L.G
லால்ஜீ கோது & கம்பெனி
சௌகார்பேட்டை, சென்னை-600 079.


பேன் தொல்லையா?
உடனடி நிவாரணம்
மஸ்காரா
பேன் மருந்து
மயிர் கால்களில் பரவி
பேன் மற்றும் ஈறு
பொடுகு ஆகியவற்றை
ஒழிக்கும் சிறந்த மருந்து
மஸ்காரா
இன்றே வாங்கிடுவீர்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்.
CLEVER ALICE
78 BIG STREET, MADRAS-600 005. PH: 843428
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன




சமூகத்தில் பெண்கள்

படித்துச் சிந்திக்க வேண்டிய நூல்.

விலை ரூ. 3.00

இந்திய மாதர்குல திலகங்கள்

சுதந்திரப் போராட்ட காலத்தில் சிறை சென்ற பெண்மணிகளைப் பற்றிய சிறிய நூல். தொகுப்பு: ஈ. முத்து ராமலிங்கம்.

விலை ரூ. 4.00

மகளிர்க்கு மகாத்மா ஆற்றிய தொண்டு -

ஆசிரியர்: ஈ. முத்துராமலிங்கம்

விலை ரூ. 2.00

(மூன்றும் — காந்தி சமாதான நிறுவனம், திருவாரூர் — தமிழ்நாடு)

தெய்வீக மூலிகைகள்

துளசி முதல் எருக்கு வரை அதன் சிறப்புகள்

விலை ரூ. 4.00

நன்னாள் அன்பளிப்பு

வாழ்க்கைக்கு அறிவுரை கூறும் நூல்




வருமான வரிச் சட்டம்

தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோர் படித்துப் பாதுகாக்க வேண்டிய புத்தகம் ஆசிரியர் என். வி. அனந்தாச்சாரி.

விலை ரூ. 50.00

நாடி சாஸ்திரம்

சித்த வைத்தியத்தில் ஆர்வமுள்ளவர் படிக்க வேண்டிய நூல். ஆசிரியர் பழனி எம். பி. தங்கவேல் சுவாமிகள்

விலை ரூ. 9.00

(இரண்டும் — அருணோதயம், 3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை — 600 014.)

ஸ்ரீராகவேந்திரர் புகழ் அமுதம்

நித்திய பாராயண நூல். தொகுப்பு — கவிஞர். பிரபாகரன்.

விலை ரூ. 10.00

(தேவி பதிப்பகம், 2/18ஏ, காளத்தி தெரு, புது கும்மிடிப்பூண்டி அஞ்சல், கும்மிடிப் பூண்டி — 601 201.)

ஆசிரியர் — வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி.

விலை ரூ. 10.00

(இரண்டும் — தி லிட்டில் ப்ளவர் கம்பெனி, தி. நகர், சென்னை — 600 017.)

**தீர்த்தாஞ்சலி**

பெருமை வாய்ந்த இந்திய நதிகளைப் பற்றிய தொகுப்பு: சரோஜினி ஜகன்னாதன்.

விலை ரூ. 15.00

**நீதிமன்றத்தில் ராஜாஜி**

பல்வேறு சுவையான வழக்குகளைத் தந்திருப்பவர் பொன் பரமகுரு.

விலை ரூ. 15.00

**ஞானக்கனல்**

சித்தர்களின் பாடல்களில் உள்ள வியப்பான பல உண்மைகளை வெளிக்கொணர்பவர் பா. கமலக்கண்ணன்.

விலை ரூ. 16.00

**பாகவதத் தேன் துளிகள்**

பாகவதக் கதைகளை பக்தியிலே தோய்த்துத் தந்துள்ளவர் பாணன்.

விலை ரூ. 10.00

(நான்கும் — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, சென்னை — 600 017.)

**உடல், எடை, தொந்தி குறைய யோக சிகிச்சை**

ஆசிரியர் ஆ. அசோக்குமார்.

விலை ரூ. 5.00

(மேலாளர், 8, யோகாம்பாள் தெரு, தி. நகர், சென்னை — 17.)

**12 ராசிகளுக்கும் புத்தாண்டு பலன்கள்**

ஆசிரியர் முருகடிமை துரைராஜ்

விலை ரூ. 2.00

(குமரன் பதிப்பகம், 2, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை — 17.)

**அஷ்டலட்சுமிகள் வரலாறும், வழிபாடும்**

விலை ரூ. 10.00




**தந்தை, மகனுக்குச் சொல்ல வேண்டிய விஷயங்கள்**

விலை ரூ. 10.00

**உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் படங்கள்**

திரைப்பட ரசிகர்கள் படிக்க வேண்டிய நூல்.

விலை ரூ. 11.50

**இராக, தாள வகைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்**

சங்கீதம் கற்பது எப்படி என்பதிலிருந்து இசையைப் பற்றி அறிமுகப்படுத்தும் நூல்.

விலை ரூ. 17.00

**தியான நெறிகளும், நன்மைகளும்**

மன அமைதி பெற வழி

விலை ரூ. 9.50

(நான்கும் தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு பதிப்பு — மணிமேகலைப் பிரசுரம், 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை — 600 017.)

பிளாஸ்டிக் செருப்புக்கள் சில சமயம் காலைக் கடிக்கும். வாங்கியதும் நன்றாகத் தண்ணீரில் ஊறவிடுங்கள். உழைப்பும் அதிகமாகும். காலையும் கடிக்காது.

— ரோஜி.

# உங்கள் குழந்தைக்கு
# அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



## திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

**போஷாக்கு அனுகூலம்:** ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

**சுவை அனுகூலம்:** ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

**தயாரிப்பதில் அனுகூலம்:** ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது; பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்.

**தேர்ந்தெடுக்க அனுகூலம்:** இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

*சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.*




6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

FSL/5113/TAM

**ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை**

கண்கண்ட தெய்வம்!

# சொர்ணாம்பிகே!

**தி**ருச்சி கைலாச புரத்தில் பிரபல "பாரத் மிகுமின் நிலைய"த்தின் (BHEL) குடியிருப்பு காலனியின், ஓர் இல்லத்தில் நாராயணய்யங்கார், மனைவி ருக்மணி, மற்றும் குடும்பத்தோடு வாழ்ந்து வருபவர். ஒரு சமயம் இவர் வீட்டுத் தோட்டத்தில் திடீரென புற்று ஒன்று வளரத் தொடங்கியது. ஏதோ கரையான் புற்றென முதலில் எண்ணினர். ஆனால் அடுத்த சில தினங்களில் அப்புற்றின் மீது நல்லப் பாம்பு மேல் சட்டையை (மெல்லிய தோல்) உரித்துப் போட்டிருப்பதைக் கண்ட நாராயணன் தம்பதிகளுக்கு சற்று அச்சமும் ஏற்பட்டது.

உடனே எவரேனும் ஆட்களைக் கொண்டு அப்புற்றை இடித்து அப்புறப் படுத்திடலாமா? என்றெண்ணினார் நாராயணன். ஆனால் மனைவி ருக்மணிக்கோ அதனை இடிக்கக்கூடாதென்று தோன்றியது. அன்று முதல் அப்புற்றிற்கு பால் ஊற்றி, நாள், கிழமைகளில் மிகபயபக்தியோடு தூப தீப ஆராதனையுடன் பூஜித்து வந்தார்.

"பெல்" குடியிருப்புக் காலனியில் வேறெங்கும் புற்றே இல்லாமல், இவர்கள் வீட்டில் மட்டும் திடீரென புற்று வளர்ந்திருக்கும் செய்தி, சில நாட்களுக்குள் அந்த காலனி முழுவதுமே பரவி விட்டது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் காலனியிலுள்ள சில பெண்கள் இவர்கள் வீட்டிற்கே வந்து, அப்புற்றுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு பால் ஊற்றிப் பூஜித்து வருவது வழக்கமாகி விட்டது.

திடீரென நாராயணனுக்கு முதுகில் பெரிய 'ராஜபிளவை', கட்டியும் உடம்பு முழுவதும் தடித்தத் தடுமன்களும் தென்பட்டன. இதனால் எழுந்து நடக்க முடியாமல் படுத்த படுக்கையானார். எவ்வளவோ செலவுகள் செய்தும் வியாதி குணம் அடையாமல் அதிகரித்தது. தனக்கு வந்துள்ள இக்கொடிய வியாதியால் இனி, தான் பிழைப்பது அரிது என்ற கவலையால் நாராயணன் குடும்பத்தாருடன் மிக்க விரக்தியோடு பேசலானார். அவர் படும் வேதனையைக் கண்டு மனைவி ருக்மணிக்கு தாளமுடியாத துக்கம் மேலிட்டது. இதற்குள் சிலர் இவர்களிடமே, "உங்கள் வீட்டில் புற்று வளர்ந்திருக்கிறது. அதனால் தான் இத்தனை கஷ்டங்கள். முதலில் அதனை இடித்துத் தள்ளுங்கள்!" என்று ஏசினர். தெய்வபக்தி மிகுந்த ருக்மணி இவர்களிடம் மறுப்புக் கூறமுடியாமல், மனத்திற்குள்ளே மிகுந்த வேதனை பட்டார்.



• சங்கர அம்மாள்



• நாராயணன் தம்பதிகள்

நாளுக்கு நாள் வியாதியும் முற்றி அன்றாடம் தன் கணவர் படும் வேதனைகளை ருக்மணியால் பொறுக்க முடியவில்லை. இருப்பினும் அந்தம்மாள், "தெய்வம் என்று ஒன்று இருப்பது சத்தியமானால் என் கணவரைக் காப்பாற்றட்டும். தெய்வத்தை நம்பினோர் வீண் போனதில்லை என்று புராணங்களில் வருவதும், அதனைப் பெரியோர்கள் கூறுவதும் உண்மையானால் அந்தத் தெய்வீக சக்தியே இவரைக் காப்பாற்றி எனக்கு மாங்கல்ய பலம் தரட்டும்! இது சத்தியம்!" என மன உறுதியோடு வேண்டினார்.

சில மாதங்களாயின. அன்றொரு நாள் விடியற்காலை ருக்மணி அம்மாளின் படுக்கையினருகே, "ருக்மணி! ருக்மணி!" என ஓர் வயதான மூதாட்டி கூப்பிடும் குரல் கேட்டது. இந்த விடியற்காலை படுக்கையில் வந்து நம்மை பெயர் சொல்லிக் கூப்பிடுவது யார் தெரியவில்லையே? எனத் திடுக்கிட்டெழுந்த ருக்மணி சுற்றும் முற்றும் பார்த்தார். எவரையுமே காணோம். ஏதோ கனவு

போலிருக்கிறது! என மீண்டும் படுத்துக் கொண்டார். மறுபடியும் அதே குரல் முன் போலவே தன் பெயரைச் சொல்லிக் கூப் பிடுவது அந்த அம்மாளுக்கே நன்றாகக் கேட்ட தாம். ருக்மணிக்கு உள்ளூர சற்று பயமேற்பட்டாலும், மிக்க தைரியத்தோடு..

''யார் நீங்கள்? பெண் குரலைப் போல கேட்கிறதே! எங்கிருந்து பேசுகிறீர்கள்?'' என அடுத்தடுத்து கேட்டதற்கு அதே குரல், ''பயப்படாதே! நான் உன் தலைப் பக்கத் திலிருந்து தான் பேசுகிறேன். என்னை உனக்குத் தெரியவில்லையா?'' என்றதாம். ருக்மணியும் தன் தலையை உயர்த்திப் பார்த்த போது, தனது தோட்டத்திலுள்ள புற்றுப் போலவே இங்கும் ஓர் புற்றும், அதற்குள் ஓர் வயதான மூதாட்டி நல்ல அலங்காரத் தோடு அமர்ந்திருந்ததும் தெரிந்தது.

''உன் கணவரின் உடம்பைப்பற்றிக் கவலைப்படாதே! நான்தான் உன் பக்கத்தி லேயே இருக்கிறேனே! என்னைப் பூஜித்து வா. நானே உன் கணவருக்கு மருந்தும், உனக்கு மாங்கல்ய பலமும் தருகிறேன்!'' என்று சொன்னதும் கேட்டதாம். திடுக்கிட் டெழுந்த ருக்மணி பார்த்த போது தன் தலைப்பக்கம் புற்றோ, அந்த மூதாட்டியோ, வேறு எவரையுமே காணோம்! உடனே தன்



• சொர்ணாம்பிகை!

கணவரிடம் தான் கண்ட அத்தனை விஷயங் களையும் கூறினாள். அவரும் மிகுந்த பக்தி யோடு ''சமயபுரத்தாள் வந்திருப்பாள்!'' என்றாராம்.

அன்று மாலையே அதே காலனியில் பக்கத்துத் தெருவில் குடியிருக்கும் சங்கரம் மாள் என்ற 82 வயது மூதாட்டி வழக்கம் போல ருக்மணி அம்மாளின் வீட்டிற்கு வந்து,'' இன்று விடியற்காலை உங்கள் வீட் டிற்கு சமயபுரத்தாள் 'சொர்ணாம்பிகை' ரூபத்தில் வந்திருந்தாளா?, இனி உங்கள் கணவருக்கு உடம்பு நன்றாகக் குணம் அடையும். கவலைப்படாதே! ஆத்தாளை வேண்டிக்கொள்!'' என ஆவேசம் வந்த வரைப் போல கணீரென்று கூறினாராம்.

''இது விஷயம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றதற்கு சங்கரம்மாள், இன்று விடியற்காலை என் கனவிலும் சமய புரத்தாள் இந்த வீட்டிற்கு வந்திருப்பதைத் தரிசித்தேன்!'' என்றதும் ருக்மணிக்கு மேலும் வியப்பேற்பட்டது. இப்படிக் கூறிய சங்கரம்மாள் நம் பாரத நாட்டு விடுதலைக் காக தனது மாணவப்பருவத்திலேயே ஜெர் மனி நாட்டிற்குச் சென்று, வெளி நாடுகளி லிருந்தே நமது இந்திய சுதந்திரத்திற்காகப் பாடு பட்டு அந்நாட்டிலேயே துர்மரணம் அடைந்த மாவீரன் ''ஜய்ஹிந்த்'' செண்பக ராமனின் உடன் பிறந்த சகோதரர் சோம சுந்தரம் பிள்ளையின் மனைவியாவார். இந்த அம்மாள் மீது சமயபுரத்தாள் ஆவேசம் வந்து அருள்வாக்குக் கூறுவது இன்றும் உண்டு.

இதற்கடுத்து சில தினங்களில், திருச்சியி லுள்ள தன் சகோதரி ருக்மணியின் கண வரின் உடல் நலனை விசாரிப்பதற்காக, சென்னையிலிருந்து வந்த மற்றொரு சகோ தரிக்கு இந்தப்புற்று விஷயமோ, சங்கரம் மாள் கூறிய விஷயமோ எதுவுமே தெரிந் திருக்க நியாயமில்லை. வந்த சகோதரி, ''ருக்கு! நீ நாளைக்கே சமயபுரத்திற்குச் சென்று அம்பாளை வேண்டிக்கொள். கோவிலில் தரும் பிரசாதத்தை வாங்கிவா. அதனை இங்கு வீட்டில் சுத்தமாக அரைத்த மஞ்சள் காப்புடன் கலந்து அம்பாளின் இரு பாதங்களைப் போல அமைத்து அதனைப் பூஜித்துவா. சீக்கிரத்திலேயே உன் கண வருக்கு உடம்பு குணமாகும்!'' என்றாள்.

சங்கரம்மாள் கூறியதோடு, தற்போது தனது சகோதரி கூறியதையும் கேட்ட ருக்மணிக்கு நிலைகொள்ளவில்லை. அதன் படியே மறுநாளே சமயபுரத்திற்குச் சென்று அம்மனை வழிப்பட்டு, கோவிலில் பெற்று வந்த பிரசாதத்தைத் தன் சகோதரி கூறிய படியே அரைத்த மஞ்சளுடன் கலந்து, அம்பாளின் பாதங்களை அமைத்து பூஜித்து வந்தாள்.

சுமார் 48 நாட்கள் பூஜை முடிவதற்குள் படுத்தப்படுக்கையிலிருந்த திரு நாராயண னும் உடல் நலன் தேறி, பூரண குணம் அடைந்து எழுந்து நன்றாக நடக்கவும் தொடங்கினார். முதுகில் ஏற்பட்ட 'ராஜ

பிளவு' மற்றும் உடலில் காணப்பட்ட தடு மன்கள் எப்படி மறைந்ததென்றே தெரிய வில்லையாம். அப்போது ருக்மணி அம் மாளுக்குஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்லவே முடியவில்லை. அக்கம் பக்கத்தார் மற்றும் பலர் நாராயணனின் உடல் நலனைக் கண்டு பேராச்சரியப்பட்டனர்.

அடுத்து ஓரிரு ஆண்டுகளில் மீண்டும் ருக்மணி அம்மாளின் கனவில் "நான் தான் சொர்ணாம்பிகை! அந்த புற்றிலிருந்து வெளிப்படுவேன். என்னை சகல மரியாதை களோடு வெளிக்கொணர்ந்து உனது பூஜை அறையில் வைத்துப்பூஜி. சில அதிசயங்கள் நடக்கும்!" என அதே மூதாட்டியின் குரலும் கேட்டது. "சொர்ணாம்பிகை! சொர்ணாம் பிகை! என்று வாய் முணுத்துக்கொண்டே எழுந்தாள் ருக்மணி அம்மாள். சங்கரம் மாள் அன்று கூறிய சொர்ணாம்பிகையின் திருநாமத்தைதான் இன்றும் அம்பாள் கூறி யிருக்கிறாள் என நாராயணன் தம்பதிகள் பெருமைப்பட்டனர்.

குறிப்பிட்ட தினத்தன்று இவர்கள் இல் லத்தில் அக்கம் பக்கமிருந்த கூட்டம் கூடியது. நாராயணன் தம்பதிகள் விடியற்காலை யிலிருந்தே விசேஷ பூஜைகளை நடத்திய பின்பு, தோட்டத்திலுள்ள அந்தப் புற்றைக் கலைக்க கடப்பாறையோ, மண்வெட்டியோ உபயோகிக்காமல், வலுவான கரும்பையே கழியாகக் கொண்டு, புற்றின் மீது பால் கலந்த தண்ணீரை ஊற்றி ஆற்றியே மெது வாகக்கலைத்தனர். வந்திருந்த ஜனங்களும் இதனையும் வேடிக்கைப் பார்த்தனர்.

பெரிய பள்ளம் தோண்டிய பின்னும், உலோகத்தாலான உருவச்சிலைகள் எதுவுமே வெளிப்படாமல் சுயம்பு ரூபத் தில் ஏதோ ஒரு சிறு மூர்த்தியே கிடைத்த தாம். அதனை அவர்கள் மிகபயபக்தியோடு மஞ்சள் துணியால் தொட்டு போர்த்தி தட்டில் வைத்து தங்களது பூஜை அறையில் ஸ்ரீ காஞ்சி பெரியவர் அருளிய சக்திபீடத் தின் மீது கொலுவீற்றிருக்கச் செய்து வணங்கினர்.

வேடிக்கைப் பார்க்க வந்தவர்களில் சிலர் "இதெல்லாம் வீண்புரளி! இவர்களிரு வருக்கும் ஏதோ பைத்தியந்தான் பிடித்திருக் கிறது. "அம்மன்," "சக்தி"ன்னு நம்மையும் பைத்தியக்காரர்களாக்குகிறார்கள்!" என குத்தலாகக் கூறி சிறு கலாட்டாவும் செய் தனராம். இதற்குள் சிலர் இது பற்றி "பெல்" நிறுவன மேலதிகாரிகளிடம் இவர்களைப் பற்றி புகாரும் கூறினர். நிர்வாகத்தினரும் நாராயணனின் இல்லத்திற்கு வந்து உண் மையை அறிய விசாரித்தனர். வந்தவர் களிடமும் அத்தம்பதிகள் நடந்த விவரங் களை மறைக்காமல் கூறினர். இது கேட்ட அதிகாரிகள்,

"உங்கள் வேலிக்குள் புற்று வளர்ந்திருப் பதினால் இதுமாதிரியான பூஜைகளில் ஈடு பட்டுள்ளீர்கள். நீங்களாகவே பிறரை பல வந்தப் படுத்தி அழைக்கவில்லை. ஆகவே உங்களுக்கு இங்கு வருபவர்களால் வேறெந்த தொந்திரவுகளும் வராமலிருக்க உங்கள் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கிறோம்!" எனக் கூறி இவர்கள் வீட்டிற்கு பந்தோபஸ் தையும் ஏற்பாடு செய்தனர்.

அன்று முதல் ஆன்மீகர்கள் இவர்கள் இல்லத்திற்கு வந்து ஸ்ரீ சொர்ணாம்பிகையை தரிசித்துச் செல்வது வழக்கமாகி பிரபல மாகியும் விட்டது. புதுவையிலிருந்து தங்கள் உறவினர் திருச்சி "பெல்" குவார்ட்டர்ஸில் இருப்பவரை காண வந்த ஓர் அன்பர் இது விஷயத்தையும் கேள்விப்பட்டார். இரண்டு கால்கள் நடக்க முடியாத சூழ்நிலையில் தள்ளு நாற்காலியில் அமர்ந்தவண்ணமே இவர்கள் இல்லத்திற்கு வந்து ஸ்ரீ சொர் ணாம்பிகையை தரிசித்து தனக்குக் கால்கள் நன்றாக நடக்கச் சக்தியை அருளும்படி வேண்டிச் சென்றாராம். ஓரிரண்டு காலம் முடிவதற்குள் அந்த பக்தரின் கால்களில் வலுவு பெற்று நன்றாக நடக்கவும் முடிந்த தாம். பெரும் மகிழ்ச்சி அடைந்த அவர் தனது கால்களைப் போல வெள்ளியால் செய்து அதனை ஸ்ரீ சொர்ணாம்பிகையிடம் தனது பிரார்த்தனை காணிக்கையாக சமர்ப் பித்தாராம். இன்றும் அந்த வெள்ளிப் பாதங்கள் இவர்களது பூஜையில் வைக்கப் பட்டுள்ளன. இது போல எத்தனையோ பக்தர்கள் தங்கள் மனக்குறையை அம்பா ளிடம் பிரார்த்திக் கொண்டு, பலன் அடைந்துள்ளனராம்.

சமீபத்தில் நான் திருச்சிக்குச் சென்ற போது நாராயணன் தம்பதிகள் இல்லத்திற் கும் சென்றேன். நான் ஆஸ்திகன்தான். தெய்வ நம்பிக்கைக் கொண்டவனும் கூட. இருப்பினும் இன்று காலம் போகிறபோக் கில் மக்களிடம் இதைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறினால் எவ்வளவு தூரம் நம்பு வார்கள்? என்ற அல்ப எண்ணம் என் மனத்திற்குள் எதிரொலித்த போது, அந்தப் பூஜை அறையில் ஸ்ரீ சொர்ணாம்பிகைக்கு கற்பூர தீபம் ஏற்றி காட்டிய பின்பு அதனை என்னிடம் நீட்டிக் கொண்டே ருக்மணி அம்மாள்,

"இந்தக் காலத்தில் இதெல்லாம் சொன் னால் நம்புவது சிரமந்தான்! நம்பினால் தான் தெய்வம்! அந்தத் தெய்வமும் தன்னை நம்பியவர்களை கைவிட்டதில்லை என்பது சத்தியம்! சத்தியம்!!" என்று கூறிய போது என்னையே சற்றுச் சிந்திக்கவும், திகைக்க வும் செய்து விட்டது!

— ரகமி.

# சுவீகார கிராமத்தில் சுகாதாரப் புரட்சி!

கும்பகோணம் இன்னர்வீல் சங்கம் பட்டீஸ்வரம் அருகில் உள்ள நாதன் கோயில் என்னும் கிராமத்தைத் தத்து எடுத்துள்ளது. அந்தக் கிராமத்து மக்களுக்கு இலவச மருத்துவ வசதிகளைச் செய்து வந்த இன்னர்வீல் சங்கம் இந்த ஆண்டு குடும்ப அடையாள அட்டைகளை வழங்கியுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை, குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டதா? போலியோ மருந்து, குடும்பக் கட்டுப்பாடு, யானைக்கால் வியாதி உள்ளவர்கள் என எல்லா விவரங்களும் அதில் குறிக்கப்படும்.

ஒரே சமயத்தில் மகளிர் நோய், கர்ப்பிணிப்பெண்களுக்குச் சிகிச்சை, குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி, பொது மருத்துவம், கண் நோய், காது, மூக்கு, தொண்டை நோய், தோல் நோய், பல் நோய், சித்தா மருத்துவப் பகுதி ஆகிய சகல வியாதிகளுக்கும் பரிசோதனை செய்து சிகிச்சை செய்யப்பட்டது.

— திருமதி கல்யாணி ராமசாமி.



# 1990 ஆண்டுப் பலன்கள்

### மேஷ ராசி:

அசுவினி, பரணி, கிருத்திகை 1 — ஆம் பாதம்.

இந்த ஆண்டு நீங்கள் மற்றவர்களுடன் வைத்துக் கொள்ளும் உறவு அல்லது அவர்களை நடத்திச் செல்லும் முறை இவைகளுக்கு ஏற்ப வெற்றி கிடைக்கும். சென்ற ஆண்டை விட சற்று கூடுதலான நன்மையை எத்துறையிலும் எதிர்பார்க்கலாம். வைகாசி மாதத்தில் வீட்டில் சுப நிகழ்ச்சி ஒன்று நடைபெறலாம். ஆகஸ்ட்டுக்குப் பிறகு தொழில் துறையில் உள்ளவர்களுக்கு உபரி வருமானம் வரும். புதியதொரு மனை அல்லது நிலம் வாங்கும் யோகம் உள்ளது. கூடிய மட்டும் உணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் இருப்பது நலம். ஏனெனில் அத்தகைய சந்தர்ப்பம் ஒன்று நீங்கள் பணி புரியும் அலுவலகத்திலோ அல்லது குடும்ப வாழ்க்கையிலோ ஏற்படலாம். டிசம்பர் மாதத்தில் எதிர்பாரா வகையில் ஆபரணங்களை வாங்கும் அளவுக்கு வருவாய் கூடுதலாகக் கிடைக்கும். திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு இந்த ஆண்டு திருமணம் கைகூடிவரும். பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களில் சிலர் வெளிநாடு சென்று வரும் வாய்ப்பினை 'மே' அல்லது 'செப்டம்பர்' மாதத்திற்குள் பெறலாம். ஜனனேந்திரியம் எலும்பு தோல் இவைகளை பாதிக்கும் நோய்கள் ஏப்ரல் அல்லது ஜூன் மாதத்தில் உங்களைத் தாக்கலாம். ஒரு சிலர் தங்களது சகோதரர்களால் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் நன்மையை அடைவார்கள்.

### ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4 — ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 — ஆம் பாதங்கள்.

---

# ஜனவரி-'90
## இந்த மாதம் எப்படி?

### மேஷ ராசி:

அசுவினி, பரணி, கிருத்திகை 1 — ஆம் பாதம்.

இந்த மாதமும் இந்த ராசிக்காரர்களுக்கு சற்றுச் சோதனை தருகின்ற மாதமாகவே இருக்கும். எதிலும் எப்பொழுதும் யோசித்தே செயல்படுங்கள். சகோதரர்களைப் பற்றிய கவலை ஒருசிலருக்கு ஏற்படும். அது பாகப்பிரிவினை விஷயமாகவும் இருக்கலாம். அல்லது கொடுத்து வாங்குவதிலும் வீண் பொல்லாங்கு வரலாம். கடன்பட்டவர்களுக்குக் காரணமில்லாமல் பயம் ஏற்படும். எனவே அகலக்கால் வைக்காது செய்யும் தொழிலையோ, உத்தியோகத்தையோ கவனமுடன் பராமரித்தால் போதும். உடல் கோளாறுகள் ஒரு சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு ஏமாற்றத்தைத் தரும். அரசியல் துறையில் உள்ளவர்களுக்கு மானபங்கம் ஏற்படலாம். ஒரு சிலருக்கு பதவி பறி போகும் நிலையுண்டு.

### ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4 — ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷ 1, 2—ஆம்பாதங்கள்.

அரசு அலுவலகத்தில் பணிபுரியும் இந்த இராசிக்காரர்களுக்கு சற்று சோதனையும், மன வேதனையும் தருகின்ற மாதமாகத் தெரிகிறது. ஒருசிலருக்கு மட்டுமே அரசியலில் எதிர்பார்த்த மேன்மை கிடைக்கும். தொழிலில் உள்ள கூட்டு பிரிய வாய்ப்பு உள்ளது. படிப்பில் பின்தங்கிய நிலையே காணப்படுகிறது. கிரகங்களின் சஞ்சாரம் ஏற்ற நிலையில் இல்லை. தசாபுக்தி சரியாகவும், சிறப்பாகவும் உள்ளவர்களுக்கு பாதிப்பு இல்லை. மாறான நிலை இருக்கு

இந்த ராசி மாணவிகள் இந்த ஆண்டு சற்று கவனமுடன் படிக்க வேண்டும். குறிப்பாக பிப்ரவரி முதல் ஜூன் வரையில் சில பிரச்னைகள் எதிர்நோக்க வேண்டியிருக்கும். தோல் சம்பந்தமான நோய்கள் தாக்கலாம். பணிபுரியும் பெண்களுக்கு ஏப்ரல் மாதம் சற்று சோதனையாக இருக்கும். மற்றபடி மே மாதம் முதல் உங்கள் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு ஆகஸ்ட் வரை தொடரும். செப்டம்பரில் புதுத் தொழில், புது நட்பு, வெளிநாட்டுப் பிரயாணம் என சுறுசுறுப்புடன் கழியும் என்றாலும் பழைய கடனோ அல்லது என்றோ செய்த தவறோ உங்கள் மனநிலையைப் பாதிக்கும். அக்டோபரிலிருந்து சற்று சோதனை ஆரம்பமாகலாம். அது பொருளாதார அமைப்பிலும் இருக்கலாம். அல்லது குடும்பச் சூழ்நிலையிலும் அமைதியின்மையைக் கொடுக்கலாம். இந்த இராசி சகோதரிகள் உஷ்ண சம்பந்தமான நோய்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். பழைய நிலத்தையோ வீட்டையோ விற்று புது இடத்தை வாங்க வேண்டிய வாய்ப்பு ஏற்படும். குறிப்பாக 1989—ஐ விட பலவிதத்தில் முன்னேற்றத்தைத் தரும் ஆண்டாக அமையும்.

**மிதுன ராசி:**

மிருகசீரிஷம் 3, 4 — ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்கள் மந்தமாக இருக்கும். எதிலும் ஒரு நிதானப் போக்கு இருக்கும். சிறுவிபத்துக்கள், பணமுடை, உறவினர்களுடன் கருத்து வேறுபாடு என பலவிதங்களிலும் சோதனை இருக்கும். ஏப்ரலுக்குப் பின் நிலைமை சீரடைகிறது. உங்களது உழைப்பும், முயற்சியும் பலன் தரும் காலம் ஆரம்பமாகும். தொழில் வேகமும், லாபமும் இருக்கும். இதுவரை உங்களுக்குத் தடையாக இருந்த நிலை விலகி சுதந்திரமாகச் சிறப்புடன் செயல்படவேண்டிய நிலை ஏற்படும். உங்களின் திறமை மற்றவர்களால் பாராட்டப்படும். தொடர்ந்து ஏற்படும் பிரயாணங்களால் அலைச்சல் ஏற்படும். குழந்தைகளின் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். ஆகஸ்டு முதல் வியாபாரத்திலும், தொழிலிலும் சிறந்த முன்னேற்றமும் இலாபமும் ஏற்படும். கட்டிட காண்ட்ராக்டர்கள், கலையுலக தாரகைகள், விஞ்ஞானிகள் போன்றோர் பெரிதும் பயன் அடையத்தக்கச் சூழ்நிலை செப்டம்பரிலிருந்து தெரிகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் திருமணம் ஒன்று வீட்டில் நிகழ வாய்ப்பு உள்ளது.

**கடக ராசி:**

புனர்பூசம் 4 — ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

மானால் கட்டாயம் தொல்லைப்பட்டே தீர வேண்டும். இஷ்ட தேவதையை மனத்தில் இருத்தி கவனமுடன் செயல்பட வேண்டிய சூழ்நிலையே காணப்படுகிறது.

**மிதுன ராசி:**

மிருகசீரிஷம் 3, 4 — ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

இந்த ராசிக்காரர்களுக்கு இட மாற்றத்திற்கு வாய்ப்பு உண்டு. அது பதவி விஷயமாகவும் இருக்கலாம். அல்லது வீடு, ஊர் மாற்றமாகவும் இருக்கலாம். ஓரிரு கிரகங்களைத் தவிர மற்றவை அனுகூலமான நிலையிலேயே இருப்பதால் எதிர்பார்த்த பதவி உயர்வு, பணவரவு, வாய்தா, பேரம் மற்றும் வெளிநாட்டு செய்திகள் பயனுள்ளதாகவே அமையும். ஒரு சிலர் வைணவத் தலயாத்திரையை மேற்கொள்ள வேண்டி வரும். கலைத் துறையினர் பரிமளிப்பர். குறிப்பாக இசைக் கலைஞர்களும் திரைப்பட நடிகர்களும் சிறந்த வாய்ப்பினைப் பெறுவர்.

**கடக ராசி:**

புனர்பூசம் 4 — ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இதுவரை இவர்களைப் பிடித்திருந்த பீடையும், வியாதியும், விட்டகலும். வீட்டில் மகிழ்ச்சி இருக்கும். ஆயினும் வீட்டு மனை கட்டிடம் ஆகியவைகளில் வில்லங்கம் ஒன்று ஏற்பட்டு விலகலாம். கோர்ட்டு விவகாரங்களில் வெற்றி ஏற்படும். தன லாபமும் உண்டு. மகரத்தில் புதன் இருப்பதால் கணவன், மனைவிக்குள் காரண காரியமில்லாமல் சிறு சண்டைச் சச்சரவுகள் ஏற்படலாம். ஒருசிலருக்கு ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. குறைந்த பட்சம் சில பாத்திரங்களாவது வாங்குவீர்கள். எரிபொருள் துறையினர் ஏற்றம் பெறுவர். ஆகார விஷயத்தில் கவனம் தேவை. வயிற்றுபாதை சிலருக்கு ஏற்பட்டு சிரமப்பட வேண்டியிருக்கும்.

**சிம்ம ராசி:**

மகம், பூரம், உத்திரம் 1 — ஆம் பாதம்.

ஆட்சியில் இருந்தாலும் அங்காரகன் சற்று உங்கள் உடல்நிலையைப் பாதிக்கத்தான் செய்வார். அது மட்டுமல்ல. புதனும், சூரியனும் கூட சரியான நிலையில் சஞ்சாரமில்லை. மற்றபடி தசாபுக்திகள் நன்கு அமைந்துள்ளவர்களுக்கு மட்டும் சற்று சுமாரான பலன் ஏற்படும். புதியதொரு தொழிலை ஆரம்பிக்கவோ அல்லது வீடு கட்டவோ தகுந்த மாதமில்லை. தை மாதத்

ஆரம்பத்தில் இரண்டு மாதங்களிலும் சற்று தொல்லைகள் இருந்து வரும். கிரக அமைப்பு சரியில்லை. எனினும் பிப்ரவரியின் கடைசி வாரத்திலிருந்து நற்காலம் ஆரம்பம். குழந்தைகள் கல்வியில் முன்னேற்றம் காண்பித்து உங்களை மகிழ்விப்பார்கள். புது நண்பர்களின் அறிமுகம் ஏற்பட்டு, அதனால் சிற்சில பயன்களும் ஏற்படும். ஏப்ரல் மாதத்தில் அலைச்சல் அதிகம் ஏற்படலாம். மற்றபடி அடுத்து வரும் மாதங்களில் படிப்படியாக செய்தொழில் முன்னேற்றம், பதவி உயர்வு இவை ஏற்படும். ஆகஸ்ட் முதல் இலாபம் அதிகரிக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கலாம். வெளிநாட்டு நண்பர்கள், உறவினர்களிடமிருந்து அனுகூலமான பதிலை எதிர்பார்க்கலாம். சிலர் செப்டம்பரில் அல்லது அக்டோபரில் வெளிநாடு செல்லும் வாய்ப்பினைப் பெறுவர். தசாபுக்திகள் நன்கு அமையப் பெற்றவர்கள் மேலும் சிறப்புடன் விளங்குவார்கள்.

### சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1 — ஆம் பாதம்.

புதியதொரு தொழிலுக்கு வாய்ப்பு ஏற்படும். இந்த ஆண்டு உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் ஆண்டாக மாறும். கடந்த காலத் தோல்விகள் ஏற்படுத்தியிருந்த கசப்பான சூழ்நிலை மாறத் தொடங்கும். மந்தத்தனமோ, மெத்தனமோ இல்லாமல் எந்தச் சமயத்திலும் எறும்பு போல சுறுசுறுப்புடன் இருக்க வேண்டிய ஆண்டு. கட்டிட வேலைகள், இயந்திரப் பணிகள் ஆகியவை நன்முறையில் செய்து முடிக்க ஏற்றதொரு ஆண்டாக இருக்கும். ஆகஸ்ட்டில் சற்று சோதனை ஏற்பட்டு விலகும். அது பொருளாதார நெருக்கடியாகவும் இருக்கலாம். அல்லது புறங்கூறுபவர்களால் ஏற்படும் தொல்லைகளாகவும் இருக்கலாம். வீட்டில் புத்திரோற்பத்தி ஏற்பட்டு மகிழ்ச்சி தரும் சூழ்நிலை செப்டம்பர், அக்டோபரில் ஏற்படும். நவம்பர், டிசம்பரில் பழைய கடன் அடைக்கப்பட்டு கட்டுமானப் பணிக்கோ அல்லது ஒரு சுபநிகழ்ச்சிக்காகவோ புதிய கடன் ஏற்படும். வருடத்தின் கடைசி வாரவாக்கில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும்.

### கன்னி ராசி:

உத்திரம் 2, 3, 4 — ஆம் பாதங்கள். ஹஸ்தம், சித்திரை 1, 2 — ஆம் பாதங்கள்.

கடந்த ஆண்டை விட சற்று முன்னேற்றமான ஆண்டாகும். இதுவரை அரைகுறையாக நின்ற பணிகள் முழுமை பெறும் வண்ணம் அமையும். வீடு, நிலம் வாங்கும் யோகம் உண்டு. வாகன யோகமும் உண்டு.

---

றிற்கு மேல்தான் நல்ல நிலை உருவாகும். எரிபொருள் துறையினருக்கு ஏற்ற மாதமாக அமையும்.

### கன்னி ராசி:

உத்திரம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 — ஆம் பாதங்கள்.

சற்று சுமாரான மாதம். நன்மையும் நடக்கும். கூடவே சஞ்சலமும் இருக்கும். தாயாரின் உடல்நிலை கவலையைத் தரும். சகோதர வர்க்கத்தாருக்குச் சற்று கூடுதலான நன்மை தரும் மாதம். பாகப்பிரிவினை, கோர்ட்டு விவகாரங்கள் வெற்றியுடன் முடியும். முருகனது தலங்களில் ஏதேனும் ஒன்றுக்குச் சென்று வரும் யோகம் சிலருக்கு உண்டு. கவிஞர்களும், கலைஞர்களும் சற்று ஏமாற்றத்தை அடைய வேண்டியிருக்கும். அரசாங்க அலுவலர்களாகப் பணிபுரியும் பெண்களுக்கு சற்று வேலை பளு அதிகமாகும், என்றாலும் அதனால் ஆதாயமும் இருக்கும். பதவி மாற்றம் திடீரென ஏற்பட்டு, சிலருக்கு எதிர்பாரா ஏமாற்றத்தை விளைவிக்கும்.

### துலா ராசி:

சித்திரை 3, 4 — ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

எப்போதும் போல பிரச்சினை குறைவாக உள்ள நிலை தெரிகிறது. அதே சமயம் முன்னேற்றப் போக்குத் தெரிகிறது. இசைக் கலைஞர்களும், நாடக, திரைப்பட கலைஞர்களும் நன்கு பாராட்டப்படுவார்கள். புது ஒப்பந்தங்களும் ஏற்படும். பயனுள்ள மாதமாக இருக்கும். எனினும் கள்வர்களால் சற்று தொல்லை ஏற்படலாம். எனவே கவனமுடன் இருக்க வேண்டியது அவசியம். குரு பார்வையும், அங்காரகனின் அருளாட்சியும் இருந்தபோதிலும் ராகுவும், கேதுவும் தொல்லை தரத்தான் செய்வார்கள். எனவே அலட்சியப் போக்கைத் தவிர்த்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனத் தெரிகிறது. திருமண முயற்சி சில கன்னிப் பெண்களுக்கு கைகூடிவரும் வண்ணம் குருபலம் உண்டு.

### விருச்சிக ராசி:

விசாகம் 4 — ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

மாதத்தின் முற்பகுதி சற்று சுமாராக இருக்கும் என்றாலும் நல்லதொரு மாதமாக உங்களுக்கு இந்த மாதம் அமையுமென்பதற்கு உத்தரவாதமில்லை. சுக்கிரன் ஒருவனே சுகத்திற்குக் காரணமாக நிற்கிறார். மற்ற எந்த கிரகமும் கொடுப்பதை விட கெடுப்பதில்தான் நோக்கமாக இருக்கின்

பெரியவர்களின் உதவியும், ஆசியும், உங்கள் எண்ணப்படி நீங்கள் எதிர்பார்த்த பதவியும் உங்களை நாடிவர இருக்கின்றன. ஏப்ரல் மாதம் வெற்றிகரமான மாதமாக இருக்கும். அதனை அடுத்து வரும் மூன்று மாதங்களிலும் சுப நிகழ்ச்சிகளும், சுப பிரயாணங்களும், புதிய முயற்சியில் செலவினங்களும் ஏற்படும் என்றாலும், நல்ல நிலையில் சமாளிக்கும் வண்ணம் பொருளாதாரம் சரளமாக இருக்கும். உங்களது செயல்கள் பிறரால் பாராட்டப்படும். திரைப்பட நடிகைகள், இலக்கிய எழுத்தாளர்கள் பரிசுகளையும், பட்டங்களையும் பெறும் வாய்ப்பு நவம்பர் அல்லது டிசம்பரில் ஏற்படும். இசைக் கலைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு கிடைத்து அவர்களது கலையைப் பிறர் பாராட்டி மகிழ்வர். ஆண்டின் இறுதியில் வெளிநாட்டு பிரயாணமோ, தொடர்போ ஏற்படலாம். அதனால் பயன் உண்டு.

## துலா ராசி:

*சித்திரை 3, 4 — ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.*

ஜனவரி மாதத்தில் ஒரு பதவி உயர்வு கிடைக்கும். பாங்கில் பணிபுரிபவர்களுக்குக் கூடுதலான ஆதாயம் ஏற்படலாம். சகோதரர்கள், குழந்தைகளின் முன்னேற்றத்துக்-

குரிய திட்டம் ஒன்று தீட்டி அதை மே மாதத்தில் வெற்றிகரமாக முடிப்பீர்கள். ஜூன் மாதத்திலிருந்து பொருளாதார நிலை படிப்படியாக சீர்பெற்று, கணிசமான தொகை சேருமளவுக்கு சீர் பெறும். உறவினர் ஒருவரால் ஒரு சுபநிகழ்ச்சிக்கு ஏற்பாடாகும். குறிப்பாக இது திருமண விஷயமாக அமையலாம். இதுவரை தள்ளிப் போட்டு வந்த பாகப்பிரிவினை ஒன்றை ஜூலையில் முடிக்க வேண்டியிருக்கும். அதனால் எதிர்பார்த்த ஆதாயத்தில் சற்று நஷ்டமும் ஏற்படலாம். எனினும் புதிய தொழிலுக்குரிய முதலீடு அதன் மூலம் கிடைக்கும். எனவே செப்டம்பர் முதல் ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்க வேண்டியிருக்கும். டிசம்பரில் சற்று சோதனை ஏற்பட்டு விலகலாம். உடல் நிலை பற்றிக் கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள் மே, அக்டோபர், டிசம்பர். குறிப்பாக உத்தியோகத் துறையில் உள்ளவர்கள் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் பதவி உயர்வு கிடைப்பதற்கான அறிகுறி டிசம்பரில் தெரியும்.

## விருச்சிக ராசி:

விசாகம் 4 — ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

உள்ளபடியே சென்ற ஆண்டு இருந்தது போன்ற சோதனைகளோ, வேதனைகளோ

றன. எனவே கலைஞர்களானாலும், அலுவலகப் பணியாளர்களானாலும், பிரச்சினையுடன்தான் மாதத்தின் நாட்களை கழிக்க வேண்டியிருக்கும். புது மணத் தம்பதிகளுக்குக் கூட உறவு நிலை சற்று சலனமுள்ளதாக இருக்கும். எனவே அனுபவித்து கழிக்க வேண்டிய காலம்.

## தனுசு ராசி:

மூலம், பூராடம், உத்திராடம் 1 — ஆம் பாதம்.

ஓரளவு நன்மை அனுபவிப்பீர்கள். இந்த ராசிக் கன்னிப் பெண்களுக்கு இதுவரை தடை ஆகிக் கொண்டிருந்த திருமண வாழ்வு கைகூடிவரும். குருபலமும், சுக்கிரன் அருளும் உள்ளதால் தடைபட்டு வந்த சுப நிகழ்ச்சிகள் இம் மாதத்தின் இறுதியிலோ அல்லது அடுத்த மாதத்தின் மத்தியிலோ கட்டாயம் நடைபெறும். ஆயினும் பாம்புகள் இரண்டும் பிரச்சினையைத் தரும். குறிப்பாக உடல்நலம் பாதிக்கும். வயிற்றுப் போக்கு, கட்டிகள் என ஏதாவது ஒருவிதத்தில் உடல்நலக் குறைவை உண்டாக்கும். கண்ணும் பாதிக்கப்படலாம். கலைஞர்களுக்கு சற்று மந்தமான மாதம். பதவி மாற்றமோ, இடமாற்றமோ கேட்பதற்குகந்த மாதம் இல்லை. எதிர்பாராத ஏமாற்றத்திற்கும் வாய்ப்பு உண்டு.

## மகர ராசி:

உத்திராடம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 — ஆம் பாதங்கள்.

இந்த ராசியைச் சேர்ந்த வயதான பெண்மணிகளுக்குக் கை, கால், மூட்டு இவைகளில் விபரீதமான வலி ஏற்படும். ஆனால் இளம் வயதில் உள்ள கன்னிப் பெண்களுக்கு திருமணமாகும். அல்லது உத்தியோகப் பிராப்தி ஏற்படும். இந்த ராசிக் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கும், கண் நோயும் ஏற்படலாம். இருமல், சளி என ஏதேனும் ஒருவிதத்தில் வியாதியும் ஏற்படலாம். சுக்கிரனால் சுகமுண்டு. புதனால் பதவி இறக்கம்ஏற்பட்டு அவமானமடையவேண்டியிருக்கும். அரசியல் சம்பந்தப்பட்டவர்களுக்கு சற்று போதாத காலம். மற்றப்படி மந்தமான சூழ்நிலையே தெரிகிறது.

## கும்ப ராசி:

அவிட்டம் 3, 4 — ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

இந்த ஆண்டு முழுவதுமே கும்ப ராசிக்காரர்களுக்கு யோக காலமாக இருந்து வரும். ஆனால் தசாபுக்தி நன்கு அமையாதவர்களுக்கு சற்று அமைதி குறைவாகவோ



இந்த ஆண்டின் இணையற்ற டெலிவி
சதுர ஸ்கிரீன்
சாலிடர்
'ஆன்-ஸ்கிரீன் டிஸ்ப்ளே'
C A T 1 0 0 0 F S
சாலிடர்
- தரமே தாரக மந்திரம்




Insight-S-619

இந்த ஆண்டில் ஏற்படக் காரணமில்லை. மிகச் சிறந்த ஆண்டாக இருக்கும். ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களைத் தவிர மற்ற மாதங்கள் மகிழ்ச்சியையே தரும். புதிய தொழிலும், புதிய வீடும், வாகன வசதியும் மார்ச்சுக்குள் ஏற்படும். இதற்கு தசாபுக்திகள் சிறப்பாக அமைந்திருக்க வேண்டியது அவசியம். ஏப்ரலிலிருந்து பொருளாதாரம் நல்ல நிலையில் சரளமாக அமையும். பழைய கடன் நீங்குதல், நகைகளை அடகு மீட்டல், வீடு கட்ட திட்டமிட்டு வெற்றியைக் காணல் என எல்லாமே நன்கு அமையும். மே மாதத்திலும், நவம்பரிலும் உடல் நலக் குறைவு ஏற்படலாம். வெளிநாட்டு செய்தியும், பிரயாணமும், நண்பர்கள் வரவும் மகிழ்ச்சியைச் சேர்க்கும். பிப்ரவரியில் வீட்டில் திருமண நிகழ்ச்சி ஒன்று நடந்து சுபச் செலவையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். பொதுவாக நல்ல ஆண்டாக இருக்கும். செவ்வாய் திசை நடந்து கொண்டு அங்காரகன் சுய வீட்டில் இருப்பவர்களுக்கும், சுக்கிர திசைக்காரர்களுக்கும் வீட்டு யோகம் கட்டாயம் ஏற்படும்.

**தனுசு ராசி:**

மூலம், பூராடம், உத்திராடம் 1 — ஆம் பாதம்.

முதலிரண்டு மாதங்களில் மந்தமான நிலை. வேதனையும், சோதனையும் ஏற்பட்டு மன அமைதியை இழக்க வேண்டியிருக்கும். ஆயினும் அடுத்து வரும் மாதங்களில் நிலைமை சீர்திருத்தம் அடைய ஆரம்பித்து ஜூன் ஜூலையில் இலாபகரமாக அமையும். புத்திரர்களின் கல்வி விஷயமாகக் கவலைப்பட வேண்டியிருக்கும். ஆகஸ்டு மாதவாக்கில் பழைய கடன்கள் அடைபடும் நிலை ஏற்படும். கட்டிட, வாகன யோகங்கள் ஏற்படத்தக்க வாய்ப்பு தெரிகிறது. கலையுலகில் உள்ளவர்களுக்கு இதுவரை இருந்த இழுபறி நிலை மாறி புகழ் சேரும் வண்ணம் வாய்ப்புகள் வந்தடையும். ஆனால் அடுத்து வரும் நவம்பர், டிசம்பர் மாதங்கள் மீண்டும் சோதனை ஆரம்பிக்கும் மாதங்களாக அமையலாம். தசாபுக்திக்கு ஏற்ப நிலை அமையும். கோசாரப் பலன்கள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் மனத்திற்கு ஏற்ற வகையில் அமையாது. சற்று ஏறுமாறாகத்தான் இருக்கும். டிசம்பரின் பிற்பகுதியில் நிலை மாற ஆரம்பிக்கும்.

**மகர ராசி:**

உத்திராடம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 — ஆம் பாதங்கள்.

கடந்த ஆண்டைப் போலல்லாமல் நன்மை அதிகம் வரும் ஆண்டாக அமையும்.

அல்லது வேதனை தருவதாகவோ இருக்கலாம். மற்றபடி கொடுத்து வைத்தவர்கள் கும்ப ராசிக்காரர்களே. இந்த நிலையில் குரு பார்வை வேறு பக்கபலமாக உள்ளது. கும்ப ராசிக் கன்னிப் பெண்களுக்கு தை மாத வாக்கில் கட்டாயம் திருமணம் கைகூடி வரும். சுக்கிரன் மீனத்திற்கு போகும் போது இச் சுப நிகழ்ச்சிக்கு உத்திரவாதமளிக்கிறார். மற்றபடி கலைஞர்கள், திரைப்படத் துறையினர், அரசியல் தலைவர்கள், தொழில் துறையினர் ஆகிய அனைவருக்குமே நல்லதொரு மாதமாக அமையும். தை மாதத்தில் சிலர் வீட்டு மனை வாங்கும் யோகம் உண்டு. கடன் தீரும் வண்ணம் எதிர்பாராத இலாபம் வரும்.

**மீன ராசி:**

பூரட்டாதி 4 — ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

மழை விட்டும், தூவானம் விடவில்லை என்பார்களே அது போல சிலருக்கு சிறு சிறு பிரச்சினைகள் இருந்து கொண்டு இருக்கும். மற்றபடி இதுவரை இருந்து வந்த இழுபறிகள் இனி இருக்காது. இந்த இராசியைச் சேர்ந்த சகல துறையினரும் நன்மையை நோக்கி நடைபோடலாம். அந்த அளவிற்கு கிரகங்கள் நன்மை செய்யும். ஆனால் தசாபுக்திகளும் அனுகூலமாக இருக்க வேண்டியது அவசியம். ராசிப் பலன்கள் சரியாக அமையவில்லை என்று அங்கலாய்ப்பவர்கள் தங்களது தசாபுக்திகள், அதற்கேற்ப ஜாதகத்தில் அமைந்துள்ள கிரகங்களின் நிலை ஆகிய இவை எந்த அளவிற்கு அனுகூலமாக இருக்கிறது என்பதைப் பார்த்து அதற்கேற்ப நடந்து கொள்வது நலம். கலைஞர்களும், விஞ்ஞானிகளும் பாராட்டப்படுவார்கள். விளையாட்டுத் துறையினர் வெற்றிநடை போடுவர். வாசனைத் திரவிய வியாபாரிகளும், எரிபொருள் துறையினரும் ஏராளமான நன்மையை அடைவர்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்.

நாள்தோறும் உணவுக்குப் பிறகு இரண்டொரு நெல்லிக்காயைச் சாப்பிட்டு வரவும். அத்துடன் ஒரு சிட்டிகை கடுக்காய்ப் பொடியையும் சாப்பிட்டு வெந்நீர் குடியுங்கள். நீங்கள் 'எப்பொழுதுமே இளமைதான்!

— எடையூர் சிவமதி.

முதலிரண்டு மாதங்களில் புது முயற்சிகளில் மெதுவாக அடி எடுத்து வைப்பீர்கள். மார்ச்சுக்குப் பிறகு மனநிலையிலும், முயற்சியிலும், பண வரவிலும் முற்போக்கும், இலாபமும் காணப்படுகிறது. எனவே நினைத்ததை முடித்திடும் உத்வேகம் உண்டாகி ஜூன் மாதத்தில் அதன் பலனை அனுபவிக்கலாம். ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பரில் தொடர்ந்து ஏற்படும் பொருளாதாரம் சரளமாக அமைவதால் எதையும் சமாளிப்பீர்கள். ஆனால் நவம்பர், டிசம்பரில் மீண்டும் சோதனை ஏற்படும். வேண்டியவர்கள் கூட விலகி நிற்பார்கள். உறவினர்கள் பகையாகலாம். ஜென்மச் சனியின் ஆதிக்கம் அதிகம். தசாபுக்தி நன்கு அமைந்தவர்கள் சற்று மன நிம்மதியுடன் இருக்கலாம் டிசம்பர் மாதத்தின் இறுதியில் நிலை மாறும் வாய்ப்பு உண்டு. இசைக் கலைஞர்களுக்கும், தொழில் நுட்ப கலைஞர்களுக்கும் ஒரு சிறப்பான ஆண்டாக இது அமையும்.

### கும்ப ராசி:

அவிட்டம் 3, 4 — ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

சென்ற ஆண்டு நன்மை தரத்தக்க முறையில் அமைந்திருக்க வேண்டும். இந்த ஆண்டும் அதுபோலவே நன்மையை அதிகம் பெற வேண்டிய சூழ்நிலை தெரிந்தாலும் ஆண்டின் மத்திம காலத்தில் சிறு சிறு சோதனைகள் ஏற்படலாம். எனினும் கலைஞர்கள், மாணவர்கள், பாங்க் அலுவலர்கள், திரைப்பட நடிகர்கள் ஆகிய இந்த இராசியில் பிறந்துள்ள சகோதரிகள் உன்னதமான நிலையில் இருப்பார்கள். பரிசும், பாராட்டும் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். இதுவரை நிறைவேறாதிருந்த திட்டம் ஒன்று இப்போது நிறைவேறும். நவம்பர், டிசம்பர் மாதங்களில் சற்று சுமாரான பலன்கள்தான். தசா புக்திகள் நன்கு அமைந்தவர்கள் சிறந்த பலன்களையே அடைந்து மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். உஷ்ண சம்பந்தமான நோய்களுக்கு வாய்ப்பு உள்ளது. கண், எலும்பு பாதிக்கப்படலாம். மற்றபடி நல்லதொரு ஆண்டாகவே இருக்கும்.

### மீன ராசி:

பூரட்டாதி 4 — ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

சென்ற ஆண்டை விட நன்மைகள் கூடுதலாகவும், வேதனைகளும், சோதனைகளும் குறைவாகவே இருக்கக் கூடிய ஆண்டாகவும் இருக்கும். ஜனவரியில் எதிர்பாராத தனலாபம் கிடைக்கலாம். மீண்டும் ஜூன் மாதவாக்கில் அப்படியொரு நன்மை தரும் நிலை வரலாம். தொழிலில் மார்ச் மாதம் முதல் அபிவிருத்தி ஏற்படும். நிறைவேறாது தடங்கலாக நின்ற பணிகள் ஜூன் மாதவாக்கில் மீண்டும் தொடரும். ஆகஸ்டு மாதத்திலிருந்து நூலாபகரமான சூழ்நிலை உருவாகிறது. வெளிநாட்டு பிரயாணம் ஒன்றுக்கு ஏற்பாடாகும். அதனால் ஆதாயம் உண்டு. திருமணம் கைகூடிவராத கன்னிப் பெண்களுக்கு ஜூன், ஜூலை, ஆகஸ்ட்டுக்குள் நல்ல இடத்து சம்பந்தத்தை ஏற்படுத்தி மனம் போல் மாங்கல்யம் நிறைவேறும். வீட்டு, வாகன யோகங்கள் சிலருக்கு ஏற்படும். காது, தோல் சம்பந்தமான நோய் தாக்கலாம். சுக்கிர திசை, சனி திசை நடைபெறுபவர்களுக்கு மேலும் நன்மைகள் கூடிவரும். ஒரு நல்ல ஆண்டாக இருக்கும்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்.

## இப்படியும் செய்யலாம்

உப்புமா என்றாலே பலருக்கும் பிடிப்பதில்லை. ஆனால் அவசரத்திற்கு இந்த டிபனை விட்டால் வேறு வழியில்லை. ஆனால் இதையே யாவரும் ஆவலுடன் விரும்பிச் சாப்பிடக்கூடிய வகையில் வேறுவிதமாகவும் செய்யலாம்.

உப்புமா செய்யும் போது தாளிப்பதற்கு உபயோகிக்கும் கடுகு, உளுத்தம் பருப்பிற்குப் பதிலாக சிறிது சோம்பு, ஒரு பட்டை, ஒரு கிராம்பு போட்டுத் தாளிக்க வேண்டும். பிறகு வெங்காயம், பச்சை மிளகாயுடன் 4, 5 பூண்டு பற்களையும், கறிவேப்பிலையும் போட்டு நன்கு வதக்கிய பின் வெறும் தண்ணீருக்குப் பதிலாக தேங்காய்ப் பால் ஊற்றி, உப்புப் போட்டு மூடி வைக்கவும். நன்கு கொதி வந்ததும் வறுத்து வைத்துள்ள ரவையைப் போட்டு நன்கு கிளறி, வெந்ததும் இறக்கி வைக்கவும். இது பிரியாணி வாசனையுடன் கமகம வென்று வாசமாகவும் ருசியாகவும் இருக்கும். தேங்காய்ப் பால் இல்லையென்றால் தண்ணீரும் உபயோகிக்கலாம்.

— சுபத்ரா.

# புத்தாண்டில் புது முயற்சி!...




*1990-ம் ஆண்டு பிறந்துவிட்டது*

இப்புத்தாண்டில்

வாழ்க்கையில் முன்னேற வேண்டும், வளமான வாழ்வு பெற வேண்டும் என்ற உங்களது குறிக்கோளை அடையத் தேவையான வழி முறைகளை ஆராய்ந்து தன்னம்பிக்கையுடன் செயல்படத் துவங்குங்கள்.

நீங்கள் விரும்பும் முன்னேற்றத்தை அடைய தடைகள் ஏதேனும் இருந்தால் அவைகளை நீக்கிவிட்டு, முன்னேற்றப் பாதையில் முன்னேறிச் செல்லுங்கள்.

உதாரணமாக ... மற்றவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அவர்களிடம் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியவில்லையே என்ற பெருங் குறை சிலரிடம் காணப்படுகிறது.

ஆங்கிலத்தில் பேசினால் ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ, அதைக் கேட்டு மற்றவர்கள் கேலி செய்வார்களோ என்ற தயக்கம் ஏற்படுகிறது.

ஆங்கில மொழியில் முறையான பயிற்சியின்மை தான், நம் தயக்கத்திற்கான மூல காரணமாகும். புத்தாண்டில் இத்தயக்கத்திற்கு முழுமையாக விடை கொடுப்போம்.

தமிழகத்தின் தலை சிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தினர் நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, இலக்கணப் பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத மிகச் சிறந்த முறையில் பயிற்சியளித்து வருகிறார்கள்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இப்பயிற்சியை நீங்கள் மேற்கொள்ளலாம்.

நேர்முகப் பயிற்சி பெற விரும்புவோர்க்கு தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

